உ

சிவ சிவ

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ அபிராமி பட்டர் அருளிய

அபிராமி அந்தாதி

[தெளிவுரை]

[சகல கலாவல்லி மாலை ஆங்கிலமும் இந்தியும்]

*

சார்வரி ஆண்டு விஜயதசமி
வெளியீடு
30—9—1960

*

விலை **0—50** ந.பை.

ஸ்ரீ காசிமடம்] [திருப்பனந்தாள்

திருப்பனந்தாள்–ஸ்ரீ காசிமடம்

‘ திருமுறை வெளியீடுகள் ’

			ரூ.	ந.பை.
1.	விநாயகர் திருமுறை	...	0	06
2.	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன்	...	6	00
3.	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3	00
4.	திருஞானசம்பந்தர் தேவாரம் மூலம்	...	2	50
5.	திருநாவுக்கரசர் தேவாரம் ,,	...	2	25
6.	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ,,	...	1	30
7.	திருவாசகம் (புதிய பதிப்பு) ,,	...	0	50
8.	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு (மூலம் மட்டும்)	...	0	56
9.	திருமந்திரம் ,,	...	2	50
10.	பதினோராந் திருமுறை ,,	...	1	25
11.	அம்மையார் அற்புதத் திருவந்தாதி	...	0	25
12.	திருக்கைலாயஞானவுலா-உரையுடன்	...	0	50
13.	பெரியபுராணம் (மூலம் மட்டும்)	...	2	50
14.	அகத்தியர் தேவாரத்திரட்டு	...	0	37
15.	திருவிளையாடற்புராணம்(மூலம் மட்டும்)	...	3	00
16.	தாயுமான சுவாமிகள் பாடல்-குறிப்புரையுடன்	...	1	25
17.	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்)	...	1	75
18.	கந்தபுராணம்-முதல் மூன்று காண்டங்கள் ,,	...	2	75
19.	,, யுத்த தேவகாண்டம் ,,	...	2	00
20.	,, தக்ஷகாண்டம் ,,	...	1	50
21.	கந்தர் அலங்காரம்-குறிப்புரையுடன்	...	0	25
22.	கந்தரனுபூதி	...	0	13
23.	கந்தர் கலிவெண்பா-ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன்	...	0	37
24.	கந்தர் கலிவெண்பா-மூலமும் மட்டும்	...	0	06
25.	கந்தர் கலிவெண்பா மூலமும் உரையும்	...	0	37
26.	நீதிநெறிவிளக்கம்-ஆங்கிலமும் ஹிந்தியும்		0	50
	ஷை மூலமும் உரையும்	...	0	55

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு

உ
சிவ சிவ
செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ அபிராமி பட்டர் அருளிய

அபிராமி அந்தாதி

[தெளிவுரை]

[சகலகலாவல்லி மாலை ஆங்கிலமும், இந்தியும்]

*

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி
அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
திருவுளப்பாங்கின்படி வெளியிடப்பெற்றது.

*

சார்வரி ஆண்டு விஜயதசமி நினைவு மலர்

*

உரையாசிரியர் :
திருமுறைக் கலைஞர்
வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்
தலைமைத் தமிழாசிரியர்
பொன்னையா உயர்நிலைப்பள்ளி, திருச்சிராப்பள்ளி.

ஸ்ரீ காசி மடம்] 1960 [திருப்பனந்தாள்

முதற்பதிப்பு—1960 (3000 பிரதிகள்)

இந்நூல் கிடைக்குமிடம்:

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோவில்

ஸ்ரீ வைகுண்டம் P. O. (திருநெல்வேலி ஜில்லா)

விலை 0—50 ந. பை.

பதிவுப் புத்தக அஞ்சல் செலவு 0—64 ந. பை. தனி.

குறிப்பு:—இதன் விற்பனைத் தொகை ஸ்ரீ வைகுண்டம் "குமரகுருபரன்" பத்திரிகையைச் சாரும்.

ரெயின்போ பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி-8.

உ

சிவ சிவ

முன்னுரை

—*—

சைவசமயஞ் சார்ந்த ஒவ்வொருவரும் இறை வழிபாட்டில் நிற்றலே மனிதப் பிறவியின் பயனாகும். இறை பணியில் நிற்றற்குச் சிந்தையை உருக்கித் தூய்மை செய்யும் செந்தமிழ்ப் பாடல்கள் நிறைந்த நூல்கள் பலவற்றைக் கடவுள் பக்தியில் திளைத்து முதிர்ந்த அடியார்கள், யோகிகள், ஞானிகள் முதலியோர் இயற்றியுள்ளனர். திருக்கடவூர் அபிராமி அம்மையின் திருவருள் பெற்ற ஸ்ரீ அபிராமி பட்டர் இயற்றிய அபிராமி அந்தாதி என்னும் இந்நூலும் அவற்றுள் ஒன்று. இது, திருக்கடவூர் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ அபிராமி யம்மையைத் துதித்துப் புகழ்வது; பக்திச் சுவையைப் பெருக்குவது; காப்புச் செய்யுளுடன் 102 பாடல்களையுடையது. இந்நூலுக்குப் பலர் உரை எழுதியிருப்பினும் அவை கற்றோர்க்கே மிகப் பயன்படுவனவாம். மற்றையோரும் சிறுவர்களும் சிறுமிகளும் எளிதில் பொருளுணர்வுடன் நாடோறும் பாராயணம் செய்யவேண்டுமென்று திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவுளங்கொண்டருளினார்கள். அதன்படி இந்நூல் எளிய நடையில் தெளிவுரையுடன் சார்வரி ஆண்டு விஜயதசமி நினைவு மலராகத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடாக 30—9—1960 ஆம் நாளாகிய இன்று வெளிவருகின்றது.

அரைக்கோடி ரூபாய்க்குமேல் மூலதனம் வைத்து இமயம் முதல் குமரிவரையில் பேரறக்கட்டளைகள் பலவற்றை நிறுவிப் பரிபாலித்து வருகின்ற புண்ணிய மூர்த்திகளாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இந்நூற் பிரதிகளை ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

கலைக் கோவிலுக்கு அளித்து, அதன் விற்பனைத் தொகையை நன்கொடையாகக் குமரகுருபரன் பத்திரிகைக்குத் திருவருள் பாலித்துள்ளார்கள். அன்றியும் இந்நூலைச் சிறுவர்கள் சிறுமிகள் ஆர்வத்துடன் பயிலவேண்டுமென்று 1948-ல் குடந்தையில் ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு மூலதனம் 3,500-ம், திருநெல்வேலி ஸ்ரீ அரியநாயக முதலியார் நினைவு அபிராமி அந்தாதிப் பரிசு மூலதனம் 3,500-ம் வைத்துப் பரிசுகளை வழங்கி யருளுகின்றார்கள்.

இப்பதிப்புத் திருச்சிராப்பள்ளி வரதராசப்பெருமாள் கோவில் தெரு பிடில் வித்துவானும் அபிராமி பட்டர் பரம்பரையினருமான திரு. நா. அமிர்த பாரதியார் அவர்களின் ஏட்டுப்பிரதியையும், சென்னைக் கலைமகள் ஆசிரியர் செந்தமிழ்ச் செல்வர் வாகீச கலாநிதி திரு. கி. வா. ஜகந்நாத அய்யர் M. A. அவர்கள் 1944-ல் ஸ்ரீ காசி மடத்து வெளியீடாக வெளியிட்ட பதிப்பையும், தருமையாதீனப் பதிப்பையும், பிற பதிப்புக்களையும் வைத்துக்கொண்டு ஒப்புநோக்கிப் பாட பேதங்களைக் குறிப்பிட்டு இலக்கண வரம்பிற்கு மாறுபடாமல் சீர் முதலியன பிரித்துத் தெளிவாகப் பொழிப்பும் விளக்கமும் எழுதிப் பதிக்கப்பெற்றுள்ளது. இந்நூலை நன்கு பரிசீலனை செய்துதந்த திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்ஸிபால் சிவநெறிச்செல்வர் திரு. கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L. அவர்களுக்கும், அச்சுப்பிரதிகளைத் திருத்தி நன்முறையில் வெளிவர உதவிய எனது நண்பர் வித்துவான் திரு. கோ. இரத்தினம் பிள்ளை அவர்களுக்கும் என் நன்றி மிக உரித்தாகும்.

இந்நூலுக்குத் தெளிவான உரை எழுதி வெளியிடும் தொண்டினை அடியேனுக்குத் திருவருள் பாலித்தருளிய ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் பொன்னார் திருவடிக் கமலங்களை அடியவன் மனமொழி மெய்களால் என்றும் வாழ்த்தி வணங்குகின்றேன்.

"அருள் நந்தி நிலையம்"
மலைக்கோட்டை, திருச்சி-2
30—9—1960

இங்ஙனம்,
தி. பட்டுச்சாமி ஓதுவார்

உ
சிவ சிவ

ஸ்ரீ அபிராமி பட்டர் வரலாறு

"சோழவளநாடு சோறுடைத்து" என்று ஔவைப் பிராட்டியால் புகழப்பெற்ற சோழவள நாட்டில் காவிரியின் தென்கரையில் திகழும் திருக்கடவூர் என்னும் திவ்ய தலத்தில் வைதிக அந்தணர் மரபில் கௌசிக கோத்திரத்தில் அமிர்தலிங்க ஐயர் என்ற ஒருவர் இருந்தார். அவர் சிறந்த கல்வியாளர்; இசைக்கலையில் வல்லவர்; வைதிகவொழுக்கம் நிறைந்தவர்; சைவசமயப் பற்று மிகுந்தவர்; அபிராமியம்மையையும் அமிர்தகடேசுவரரையும் நாடோறும் வழிபடும் நியமம் பூண்டவர். நீண்ட காலம் புத்திரப்பேறின்றி இருந்து சிவசக்தி வழிபாட்டின் பயனேபோல ஒரு கார்த்திகை நன்னாளிலே ஓர் ஆண் மகவைப் பெற்றார். அம் மகவுக்குச் சுப்பிரமணியன் எனப் பெயரிட்டார். பிறகு, தந்தை மகனுக்கு உரிய காலங்களில் முறையே கல்விப் பயிற்சியும் உபநயனமும் செய்வித்து மகிழ்ந்தார்.

சுப்பிரமணிய ஐயர் வடமொழி தென்மொழிகளை நன்கு பயின்றார்; சங்கீதக் கலையிலும் தேர்ச்சியுற்றார்; பல நூல்களையும் ஆராய்ந்து கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கங்களில் தலை சிறந்து கடவுட் பக்தியிலும் முதிர்ச்சியடைந்தார்; தந்தையிடம் காயத்திரி மந்திரத்தின் அரும் பொருளினையும், தேவியின் ஸ்ரீசக்கர வழிபாட்டு முறையினையும் அறிந்து தேவி வழிபாட்டில் நிலைத்துநின்று கவிதா சக்தியும் இயல்பாகப் பெற்றார். பராசக்தியின் திருவருள் இன்பத்தில் இடைவிடாமல் திளைத்து நிற்கும் சுப்பிரமணிய ஐயர் உலகினர்க்குப் பித்தரைப்போல் காணப்பட்டார். திருக்கடவூரிலிருந்த உண்மையறியாச் சில பிராமணர்கள் சுப்பிரமணிய ஐயர் மீது அழுக்காறுகொண்டு, "வைதிக வொழுக்கத்தைக் கைவிட்டவர்; சக்தி உபாசகர்; ஊனும் மதுவும் உண்டு திரிபவர்" என்று மனம் போனவாறு வசைமொழி பேசத் தொடங்கினர். ஆனால், உலகினரின் வசைமொழிகள் சுப்பிரமணிய ஐயர் காதில் ஏறவில்லை. "எவரும், தத்தம் மனத்தன பேச எஞ்ஞான்று கொல் சாவதுவே" எனும்

திருவாசகத்துக்கு இலக்கியமாய்ப் பார்க்குமிடமெங்கும் திரிபுரையின் திருக்கோலமே கண்டு பெருமிதத்தோடிருந்தது மன்றி இல்லற நெறியிலும் நின்று வந்தார்.

அப்போது தஞ்சையிலிருந்து அரசு புரிந்த மகாராஷ்டிர மன்னனுகிய சரபோஜி மன்னன் என்பவன் தை அமாவாசை அன்று காவிரிப்பூம்பட்டினம் சென்று கடல் முழுக்கினை முடித்துக்கொண்டு திருக்கடவூரில் அமிர்தகடேசுவரரைத் தரிசிக்க ஆலயத்தினுள் வந்தான். அங்கு அபிராமியம்மையின் சந்நிதியில் ஆனந்தத்தேன் அருந்திப் பரவசமுற்று அம்மையின் அருள் ஒளி வீச யோகநிலையில் வீற்றிருந்த சுப்பிரமணிய ஐயரின் தோற்றப் பொலிவை அரசன் கண்டு அதிசயித்து, "நாம் இவரோடு அளவளாவ வேண்டும்" என்று கருதி, "இவர் யார்?" என்று அங்கிருந்தோரை வினவினுன். சமயம் பார்த்திருந்த கடவூர் வேதியர்கள், "இவர் வேதநெறி பிழைத்தவர்; சக்தி வழிபாட்டினர்; மது மாந்தி மயங்கி இருக்கின்றவர்" என்றனர். அரசன், அவர்கள் சொல்லை நம்பாது அவரோடு பேச விரும்பி அருகிற்சென்று, "ஐயா! இன்று மிச்ச அமாவாசை உண்டா? எவ்வளவு நாழிகை இருக்கிறது?" என்று கேட்டான். ஒளி வடிவினளாகிய அம்பிகையைத் தம் முள்ளே தரிசித்து மகிழ்ந்துகொண்டிருந்த சுப்பிரமணிய ஐயருடைய காதில் மன்னனின் வார்த்தை அரைகுறையாக விழுந்தது. உடனே ஐயர், "இன்று பௌர்ணமி" என்ருர். அவ்வார்த்தையைக் கேட்ட அரசன் "அந்தணர்கள் கூறியது உண்மைதான்" என்று அலட்சியமாக மதித்து, "ஐயரே! மயக்கமா? இன்று பௌர்ணமி இல்லையாயின் தக்க தண்டனை பெறுவீர்" என்று சினந்து அப்பாற் சென்ருன்.

பின்னர், சுப்பிரமணிய ஐயர் நிட்டை தெளிந்து, "நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவது, ஒன்றேயும் இல்லை" என்று எண்ணியவராய், "இனி என் செய்வது? எல்லாம் அம்மையின் திருவருள்" என்று கருதி அபிராமி அம்மையின் சந்நிதியிலேயே அக்கினி குண்டம் ஒன்று தயாரித்து, அதன் இருபக்கமும் கால்கள் நாட்டி, மேல் விட்டம் போட்டு, அதன் மத்தியிலே அக்கினி குண்

டத்திற்கு நடுவாக நூறு கயிறுகொண்ட உறி ஒன்று தொங்க விட்டு, அக்கினியை வளர்த்து, உறியின்மீது ஏறியிருந்து, "அபிராமி யம்மை அருள் புரியாதொழியின் இவ்வக்கினியி லேயே வீழ்வேன்" என்று வஞ்சினம் கூறி, தம் அகவடிவில் கண்ட அபிராமியம்மைமீது, "உதிக்கின்ற செங்கதிர்" என்று தொடங்கும் அந்தாதியைப் பாடத் தொடங்கி ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் ஒவ்வொரு கயிருக உறியின் கயிறுகளை அறுத்து வந்தார். 79-ஆம் பாடலாகிய "விழிக்கே அருள் உண்டு" என்ற பாடல் முடியத் தேவியும் அவர் முன்னே தோன்றி நின்று தம் தோடுகளுள் ஒன்றைக் கழற்றி ஆகா யத்திலே வீசி நிலவொளியை உண்டாக்கி, "அன்ப! நீ அரசனிடத்தில் கூறியவாறு பூரணச் சந்திரனைப் பார்" என்ருள். அப்போது ஐயர் அம்மையின் கருணைத் திறத் தைக் கண்டு தரிசித்து வியந்து பாராட்டி மற்றப் பாடல்களை யும் பாடி முடித்தார்.

அரசனும் மற்றையோரும் பூரணச் சந்திரனின் ஒளியைக் கண்டு அஞ்சி அதிசயித்துச் சுப்பிரமணிய ஐயர் சிறந்த ஞானி என்றும், செயற்கரிய செய்யும் சீலர் என்றும் கருதினர். அப்போது அரசன் ஐயரை அவமதித்த செய லுக்கு வருந்தி ஓடிவந்து அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "தங்கள் பெருமைதெரியாமல் யான் செய்த பிழை யைப் பொருத்தருள்க" என்று பன்முறை வேண்டினன். ஐயரும் அம்பிகையின் திருவருளை நினைத்து, "யாம் எவர் மீதும் பகைகொள்ளோம்" என்று கூறினர். அது கேட்ட சரபோஜி மன்னன் அன்பரை மகிழ்ந்து நோக்கி, "இன்று முதல் தங்கட்கு அபிராமி[1]பட்டர் என்ற திருநாமமும், தங்கள் பரம்பரைக்குப் [2]'பாரதியார்' என்ற பட்டமும் வழங்குவ தாகுக. அன்றியும், தங்கட்குக் காணிக்கையாக விளைநிலங் கள் அளிக்க விரும்புகின்றேன்; அவற்றைக் கைக்கொள்வீர் களாக" என்று வேண்டிக்கொண்டான்.

அதுபோழ்து அபிராமி பட்டர் "அரசே! இறைவியின் திருவருட் செல்வமே அன்றிப் பிற செல்வம் எமக்கு வேண்டு வதில்லை" என்று மறுத்தார். அரசன் "தங்கள் சந்ததிக்

---

1. பட்டர்-பூசிப்பவர்; பாடுவோர். 2. பாரதியார்-தேவிக்கு அடியவர்

காவது ஏதாவது ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்று குறையிரந்தான். பட்டரும் ஒருவாறு அதற்கிணங்கி, இப்பக்கங்களில் வேலிக்கு எண்ணுழி நெல் கிடைத்தால் போதும் என்று கூற, அரசன் அருகிருந்த அமைச்சன் யாசித்தலிலும் இது மிகக் குறைவாக உள்ளதே என்று சொல்ல ''இது என்றும் நடைபெற்ருல் போதும்'' என்று பட்டர் உரைத்தார். அப்போது, அரசன் [1]திருக்கடவூரிலும் திருக்கடவூர்ப் பக்கங்களிலும் வேலி ஒன்றுக்கு எண்ணுழி நெல் (குறுணி நெல்) மானியமாகச் சூர்ய சந்திரன் உள்ளவரை எல்லோரும் கொடுத்துவர உத்தரவிட்டு, அபிராமி பட்டரை வணங்கித் தஞ்சை சென்ருன்.

பின்னர், அபிராமி பட்டர் வைதிகத் துறவியாகிச் சிவத்தல யாத்திரை சென்றிருந்து ஒரு இரேவதி நன்னுளில் இறைவியின் திருவடி நீழலை அடைந்தார்.

அபிராமி பட்டர் அபிராமியம்மையின்மீது அபிராமி அந்தாதி ஒன்று இயற்றியதோடு அல்லாமல் திருக்கடவூர்க் கள்ளவாரணப் பிள்ளையார் பதிகம், அமுதகடேசுவரர் பதிகம், கால சம்மாரமூர்த்தி பதிகம், அபிராமி யம்மை பதிகங்கள் முதலிய நூல்களையும் பக்திச் சுவை ததும்ப இனிய நடையில் இயற்றியுள்ளார்.

அபிராமி பட்டர், தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னன் காலத்தவர் என்பது வரலாற்ருல் அறிவதால், அவர் கி. பி. 18-ஆம் நூற்ருண்டின் கடைப்பகுதியில் நிலவியவர் என்பது பெறப்படும்.

---

1. திருக்கடவூரிலும் திருக்கடவூர்ப் பக்கங்களிலும் என்றது, திருக்கடவூர் வட்டம், ஆக்கூர் வட்டம், திருவிடைக்கழி வட்டம், நல்லாடை வட்டம், திருச்செம்பொன்பள்ளி வட்டம் என்ற ஐந்திடத்தையும் குறிக்கும். திருவிடைக்கழி வட்டம். நல்லாடை வட்டம் என்ற இரண்டு இடங்களில் மட்டுமே அபிராமி பட்டர் சந்ததி வகையினராய பிடில் வித்துவான் திருச்சிராப்பள்ளி ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில்தெரு பிரமஸ்ஸ்ரீ **நா. அமிர்த பாரதியார்** என்பவர் நெல் வசூல் செய்து அதனைக் கொண்டு, நவராத்திரி விழா ஒன்பது நாளிலும் திருக்கடவூர் அபிராமி யம்மைக்கு விசேட பூசை நைவேத்தியங்கள் செய்து, அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கிவருகின்ருர்.



திருக்கடவூர் அபிராமியம்மை

உ

சிவ சிவ

செந்திலாண்டவன் துணை

அபிராமி அந்தாதி

[தெளிவுரை]

காப்பு

[கட்டளைக் கலித்துறை]

தாரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை
ஊரர்தம் பாகத் துமைமைந்த னே ! உல கேழும்பெற்ற
சீரபி ராமியந் தாதிஎப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யே ! நிற்கக் கட்டுரையே.

இதன்பொருள் : (ஓங்கார வடிவாகப்) பொருந்திய கொன்றை மலர் மாலையையும், சண்பக மலர் மாலையையும் (முறையே) அணிந்தருளும் தில்லை நடராசப்பெருமானுக்கும், அவரது இடப் பாகத்தில் எழுந்தருளிய சிவகாம சுந்தரிக்கும் திருக்குமாரனே ! கருநிறம் பொருந்திய திருமேனியை யுடைய கணபதியே ! ஏழு உலகங்களையும் (கருவுருது) பெற்ற சிறப்பினையுடைய அபிராமியம்மையின் மீது (பாடத் தொடங்கும்) அந்தாதி (என்னும் இந்நூல்) என் சிந்தையுள்ளே எப்பொழுதும் நிலைபெற்று விளங்கும்படி வரம் தந்தருள் வீராக என்றவாறு.

விளக்கம் : தார் - கழுத்தில் அணியும் மாலை. கொன்றை சிவனுக்கும், சண்பகம் தேவிக்கும் உரிய பூக்கள். தில்லை - சிதம்பரம். அபிராமி - பேரழகுடையவள் ; அபிராமம் -

பேரழகு. அந்தாதி - நின்ற செய்யுளின் அந்தம் வரும் செய்யுட்கு ஆதியாக வரும்படி தொடுத்துப் பாடப்படும் நூல். கார் அமர் மேனிக் கணபதி - இங்குக் கள்ளவாரணப் பிள்ளையார். கணபதியின் நிறம் வெண்மை என்றும், சிவப்பு என்றும் கூறுதலும் உண்டு. கார் அமர்மேனி - மேகம் போலும் வரையாது கொடுக்கும் அருளே திருமேனியாக உடைய எனினுமாம். 'சட்டுதியே' என்றும் பாடம். (கட்டுதி - பொதிந்தருளும்.)

நூல்

தேவியினது திருமேனியின் அழகைச் சிறப்பித்தல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே.

இ - ள்: உதிக்கின்ற செவ்விய இளஞ் சூரியனும், உச்சி வேளையில் மலர்கின்ற மஞ்சாடிப் பூவும், (மணிநூல் ஆராய்ச்சியுடைய) அறிவுடையோர் நன்கு மதிக்கின்ற மாணிக்க மணியும், மாதுளம் பூவும், மின்னற் கொடியும், மெல்லிய வாசனை பொருந்திய குங்குமக் குழம்பும் போன்ற என்று நூல்கள் கூறுகின்ற சிவந்த திருமேனியை யுடையவளும் செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமி போற்றுகின்றவளுமான அபிராமியம்மை என் உயிர்க்குச் சிறந்த துணையாவாள் எ - று.

விளக்கம்: திலகம் – மஞ்சாடிப் பூ; இது செந்நிறமுடையது. உணர்வு - மணிநூல் ஆய்ந்தறிந்த அறிவு; மெய்ஞ்ஞானமுமாம். கமலை - இலக்குமி. கடி - வாசனை. தோயம் - குழம்பு. விழுத்துணை – எல்லாவிடத்தும் எக்காலத்தும் இருக்கும் சிறந்த துணை. உதயசூரியன், மாணிக்கம், மாதுளம் பூ, மின்னற் கொடி, குங்குமக் குழம்பு ஆகிய இவை தேவியின் செந்நிறத்திற்கு உவமையாக வந்தன. 'விழித்துணையே' என்றும் பாடம். 1

எல்லாம் அவளே என்று அறிதல்

துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே.

இ - ள் : குளிர்ச்சி பொருந்திய மலர்க் கணைகளையும், கரும்பு வில்லையும், மெல்லிய பாசத்தையும், அங்குசத்தையும், திருக்கரங்களில் ஏந்திய திரிபுரசுந்தரியாகிய அபிராமியம்மையே, (எமக்கு) உயிர்த்துணையும், வழிபடு கடவுளும், (எம்மைப்) பெற்ற அன்னையும், வேதம் என்னும் மரத்தின் கிளைகளும், அவற்றின் தளிர்களும், கீழே பதிந்துள்ள மூல வேரும் ஆதலை (யாம் திருவருளால்) அறிந்துகொண்டோம் எ - று.

விளக்கம் : சுருதி - வேதம். பணை - கிளைகள் ; இங்கு வேத சாகைகள். கொழுந்து - தளிர்கள் ; இங்கு உபநிடதங்கள். வேர் - ஆணி வேர் ; இங்குப் பிரணவம். கணை - அம்பு. பாசம் - கயிறு. அங்குசம் - தோட்டி. திரிபுர சக்கரத்திற்கு அதிதேவதை அபிராமியம்மை ஆதலால், 'திரிபுரசுந்தரி' என்றார். திரிபுரம் - தேவி சக்கரத்துள் சந்திர கண்டம், அக்கினி கண்டம், சூரிய கண்டம் என்ற மூன்றுமாகும். சுந்தரி - அழகுடையவள். அபிராமி எனினும் சுந்தரி எனினும் ஒக்கும். 'தொழு தெய்வமும்' என்றும் பாடம். 2

அறிந்து விலகி அஞ்சித் திருவடி அடைதல்

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வே! வெருவிப்
பிறிந்தேன்நின் அன்பர் பெருமையெண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே.

இ - ள் : அருட் செல்வியாகிய அபிராமியம்மையே ! வேறு எவரும் அறியாத வேதத்தின் உண்மைப் பொருளை

அறிந்தேன் ; (அங்ஙனம்) அறிந்து கொண்டு, நின் அடியார்களின் பெருமையைப் பொருட்படுத்தாத தீவினை மனங் காரணமாகத் தலைகீழாய் விழும் நரகக் குழிக்குத் தொடர்புடைய மனிதரை விட்டு விலகினேன் ; (அவ்வாறு விலகிக் கொண்டு) பிறவி நோய்க்கு அஞ்சி நின் திருவடிகளுக்கே அடைக்கலம் அடைந்தேன் எ - று.

விளக்கம்: மறை - வேதம்; தேவிமந்திரமுமாம். செறிதல்- சரண் அடைதல் ; இடைவிடாது தியானித்தலுமாம். வெருவி - அஞ்சி. கரும நெஞ்சு - தீவினைமிக்க மனம் ; அஞ்ஞானமுடைய மனமுமாம். 'பிரிந்தேன்' என்பது எதுகையை நோக்கிப் 'பிறிந்தேன்' என வலிந்து நின்றது. மறிதல் - தலைகீழாய் விழுதல். 3

'இறைவனும் நீயும் என் உள்ளத்தில் எழுந்தருள்க' என்றல்

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமள மே!கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்தியெந் நாளும் பொருந்துகவே.

இ - ள் : மனிதர்களும் தேவர்களும் இறவாத தன்மையினையுடைய முனிவர்களும் (திருமுன்) வந்து தலை குனிந்து வணங்கும் சிவந்த திருவடிகளையுடைய மென்மைத் தன்மை வாய்ந்த அபிராமியம்மையே! கொன்றைமலர் மாலையை அணிந்த நீண்ட சடையின்மீது குளிர்ச்சி பொருந்திய இளம் பிறையினையும், பாம்பையும், கங்கையையும் தாங்கியருளிய தூயவராகிய சிவபெருமானும் நீயும் அடியேனது மனத்தின் கண் எக்காலத்தும் இணைந்து எழுந்தருள்வீர்களாக எ - று.

விளக்கம் : மாயாமுனிவர் - (தவத்தாலும் சித்திகளாலும்) இறவாத மார்க்கண்டேய முனிவருமாம். குனிதரும் - குனிந்து வணங்கும். கோமளம் - மென்மை ; அழகுமாம். பனிதரும் - பனியை உண்டாக்குகின்ற எனினுமாம். பகீரதி - பகீரதனால் கொண்டுவரப்பட்டவள் ; கங்கை. 4

தேவியின் திருவடி தம்தலைக்கண் என்றல்

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதமென் சென்னியதே.

இ - ள்: (உயிருக்கு ஆதரவான தூலம் சூக்குமம் காரணம் என்னும் மூவகை உடம்புகளிலும்) பொருந்திய திரிபுரசுந்தரியும், செப்பை உவமையாகச் சொல்லுகின்ற தம்முள் நெருங்கிய இருதனங்களின் பாரத்தினால் தளர்வுற்ற வஞ்சிக் கொடிபோன்ற இடையையுடைய மனோன்மணியும், நீண்ட சடையையுடைய சிவபெருமான் உண்டருளிய விடத்தைத் தன் திருக்கரத்தால் பற்றி அமுதமாகச் செய்தருளிய உமாதேவியும், ஞான வெளியுருவினளாகிய பராசத்தியும், பேரழகியும் ஆகிய அபிராமியம்மையினது செந்தாமரை மலரினும் மேலாகத் திருந்திய அழகுடைய திருவடி என் தலையின் கண்ணதாகும்; (அதனை அடியவன் வணங்குகின்றேன்) எ - று.

விளக்கம்: முப்புரை - திரிபுரை: இவள் இடைகலை பிங்கலை சுழுமுனை என்னும் மூன்று நாடிகளிலும் இருப்பவள்; மனம் புத்தி சித்தம் என்னும் மூன்றிலும் உறைபவள் எனினுமாம். புரை - மூத்தவள்; மும்மூர்த்திகளுக்கும் மூத்தவள் எனினுமாம். வஞ்சி - வஞ்சிக் கொடி. மருங்குல்- இடை. மனோன்மணி - புருவமத்திக்கும் பிரமரந்திரத்திற்கும் இடையில் உறைபவள்; மனத்தை ஞானநிலைக்கு எழுப்புபவள். அந்தரம் - வெளி. அந்தரி - பரம வெளியில் இருப்பவள். சுந்தரி - அபிராமி. அம்புயமேல் திருந்திய சுந்தரி - செந்தாமரையின் மேல் எழுந்தருளிய அபிராமி எனப் பொருள் கொள்ளுதலுமாம். 5

முக்கரணங்களாலும் வழிபடல்

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின்அடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே.

இ-ள்: செந்நிறம் பொருந்திய திருமேனியையுடைய அபிராமியம்மையே! நின் பொலிவுபெற்ற திருவடியாகிய தாமரை மலர், என் சிரசிற்கு என்றும் முடிமாலையாகத் திகழ்வது; உன் திருமூலமந்திரம் என் மனத்தின்கண்ணே என்றும் தியானப் பொருளாக நிலைபெற்றிருப்பது; உனது மேலான ஆகம பத்ததி, நின்னையே சிந்திக்கின்ற நின் அடியார்களுடன் கூடி ஆராய்ந்து பலமுறை என்றும் அடியவன் பாராயணம் செய்வது எ-று.

விளக்கம்: பொன் - பொலிவு; அழகு. சிந்துர வண்ணம் - செந்நிறம். முன்னிய - சிந்திக்கின்ற. பன்னியது - பலமுறை பேசுவது; பாராயணம் செய்வது. பரமாகம பத்ததி - சாக்தேயாகம பத்ததி; சிவாகம பத்ததியுமாம். பத்ததி - நெறி; வழி. அடியேனது மனம் வாக்குக் காயம் என்னும் முக்கரணங்களும் எப்போதும் உன் வழியிலே ஈடுபட்டு நிற்கின்றன என்பதாம். 6

உயிர்க்கு முத்திநிலை வேண்டல்

ததியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்; கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கியென்றும்
துதியுறு சேவடி யாய்! சிந்து ரானன சுந்தரியே!

இ-ள்: தாமரை மலரை இருக்கையாகக் கொண்ட பிரமதேவனும், இளம்பிறைச் சந்திரனைத் தரித்த சடையையுடைய நின் கணவனாகிய சிவபெருமானும், திருமாலும் எக்காலத்தும் வணங்கித் துதிக்கும் சிவந்த திருவடிகளையுடையவளே! சிந்தூர திலகம் அணிந்த திருமுகத்தையுடைய அபிராமி யம்மையே! தயிரில் கடையலுற்ற மத்தைப்போலப் பிறப்பிறப்புக்களில் அகப்பட்டுச் சுழலுகின்ற அடியேனது உயிர் (பிறப்பிறப்பென்னும்) தளர்ச்சி இல்லாததாகிய முத்தி நிலையை அடையும் வண்ணம் நீ திருவுளங்கொண்டருள்வாயாக எ-று.

விளக்கம்: இங்கு, "மத்துறு தண்டயி ரிற்புலன் தீக்கது வக்கலங்கி, வித்துரு வேனை விடுதிகண்டாய்" என வரும்

திருவாசக அடிகள் நினைவிற் கொள்ளற்பாலன. ததி-தயிர். கதி - முத்திநிலை; சிவகதி. வேணி - சடை. மகிழ்நன் - கணவன். மும்மூர்த்திகளும் வணங்கும் அபிராமியம்மை என்க; 74, 92-ஆம் செய்யுட்களையும் நோக்குக. சிந்துர + ஆனனம் = சிந்துரானனம். ஆனனம் - முகம். கண்டாய்: முன்னிலை அசைச்சொல். 7

அம்மையின் திருவடி அடியேன் சிந்தையில் திகழ்தல்

சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாள்என் கருத்தனவே.

இ - ள்: எனது பாசமலங்களாகிய தளைகளையெல்லாம் தாமே எழுந்தருளிவந்து போக்குகின்ற செந்நிறத்தை யுடையவளும், மகிடாசுரனது தலையின்மேல் நிற்கும் அந்தரியும், நீலநிறத்தையுடையவளும், என்றும் உள்ள குமரியும், பிரமதேவனது கபாலத்தைத் தாங்கிய திருக் கரத்தையுடையவளும், எம் தந்தையாகிய அமுதகடேசரது தேவியும் ஆகிய அபிராமியம்மையின் திருவடித் தாமரை மலர்கள் என் உள்ளத்துள்ளே எக்காலத்தும் எழுந்தருளி யிருப்பன; (ஆதலால் எனக்கு என்ன குறை?) எ - று.

விளக்கம்: சுந்தரி - அபிராமியம்மை. வந்துஅரி - வந்து அழிக்கின்ற. அந்தரம் - தீமை; கொலைத்தீமை. மகிடன் தலை மேல் அந்தரி - மகிடாசுரனது தலைமேல் நின்று அவனது மாயைத் தீங்கை ஒழித்தவள்; துர்க்கை; சாமுண்டியுமாம். மகிடன் - மகிடாசுரன்; இவன் எருமைத் தலையுடையவன். நீலி - காளியுமாம். கன்னிகை - குமரி: "அகிலாண்ட கோடி ஈன்ற அன்னையே பின்னையும் கன்னி என மறை பேசும் ஆனந்த ரூபமயிலே" என்பது தாயுமானவர் திரு வாக்கு. ஆரணத்தோன் - வேதம் வல்ல பிரமன், கம் - கபாலம்; பிரமகபாலம். தரி - தரித்தவள். கருத்தன - கருத்தில் இருப்பன. 8

தேவியின் காட்சியினை விரும்பிநிற்றல்

கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையுமம்பும்
முருத்தன மூரலும் நீயும்அம் மே! வந்தென் முன்னிற்கவே.

இ - ள்: எம் தந்தையாகிய சிவபெருமானுடைய திருவுள்ளத்தின்கண் இருப்பனவும், (அவர்) திருக்கண்களில் உள்ளனவும், அழகிய மேருமலையைப் போலப் பருத்திருப்பனவும், (திருவருளால் தேம்பித் தேம்பி) அழுத திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு ஞானப்பாலைக் கொடுத்தனவும் ஆகிய பேரருள் மிகுந்த அழகிய (இரண்டு) தனபாரங்களும், (அவற்றின்மேல் அசையும்) முத்துமாலையும், சிவந்த திருக்கரத்தில் பொருந்திய கரும்பு வில்லும், மலர்க் கணைகளும் மயிலிறகின் அடிக் குருத்துப்போன்ற திருப்பற்களும் உடைய அபிராமியம்மையே! நீயும் (சிவபெருமானும்) அடியேன் முன் எழுந்தருளிவந்து காட்சி தந்தருள்க எ - று.

விளக்கம்: கனகவெற்பு - பொன்மயமாகிய மேருமலை. பிள்ளை - சீகாழித் திருஞானசம்பந்தர். ஊட்டாமல் பொற்கிண்ணத்தில் கறந்து அருந்த அளித்தமையின், 'நல்கின' என்றார். ஆரம் - முத்துமாலை. முருந்து - மயிலிறகின் அடிக்குருத்து. முருந்து முருத்து என வலிந்து நின்றது. மூரல் - பற்கள். வண்ணம் - அழகு. 9

எக்காலத்தும் அம்மையின் திருவடிகளை வழிபடல்

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாள்எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொரு ளே!அரு ளே!உவமை யே!இமயத்
தன்றும் பிறந்தவ ளே!அழி யாமுத்தி ஆனந்தமே!

இ - ள்: எழுதப்படாமல் கேட்கப்படுகின்ற வேதத்தின் முடிவில் பொருந்தும் அறிதற்கரிய பொருளே! (சிவபெரும

னுடைய) திருவருள் வடிவே! உமாதேவியே! (தாட்சாயிணி என்னும் பெயரை நீக்கிக்கொள்ளுதற்கு அக்காலத்து இமய மலையில் அவதரித்தவளே! அழியாத பேரின்பமாக உள்ள அபிராமியம்மையே! அடியேன் நிற்கும்போதும், உட்கார்ந் திருக்கும்போதும், படுத்துக் கிடக்கும்போதும், நடக்கும் போதும் நினைப்பது உன்னையே; எக்காலத்தும் வழிபடுவது உன்றன் செந்தாமரை மலர்போன்ற திருவடிகளையே எ - று.

விளக்கம்: இங்கு, "நின்றும் இருந்துங் கிடந்தும் நினை மின்கள், என்றும் சிவன்றுள் இணை" எனவரும் வருத்த மற வுய்யும் வழி என்ற குறள் வெண்பாவை நினைவிற் கொள்க. எழுதாமறை - வேதம். அருளே: "அருளது சத்தியாகும் அரன் தனக்கு" என்பது சிவஞான சித்தியார். அழியாமுத்தி - அடைந்தவர் மீண்டும் பிறவாத முத்தி யின்பம். அன்றும், உம்: அசைநிலை. 10

திருவடிப் பெருமையினைப் புகலல்

ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணர விந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே.

இ - ள்: பேரின்ப வடிவாகவும், என் பேரறிவாகவும், (உள்ளத்தின்கண்) நிறைந்த அமுதமாகவும், (மண்முதல்) ஆகாயம் ஈறுகிய ஐம்பெரும் பூதங்களைத் தன் வடிவாகவும் உடைய அபிராமியம்மையினது நான்கு வேதங்களுக்கும் தான் ஒன்றே முடிவாக இருக்கின்ற திருவடித் தாமரை மலர் வெண்ணிறமான மயானத்தைத் தம்முடைய நடனமாடும் இடமாகக் கொண்ட எம்பிரானாகிய சிவபெருமானது திரு முடி மாலையாக உள்ளது எ - று.

விளக்கம்: 'ஆனந்தமாய் அறிவாய் அமுதமாய்' என்றது அபிராமியம்மை சச்சிதானந்த வடிவுடையவள் என்ப தைக் குறிப்பது. உயிர் அறிவிக்க அறியும் ஆதலால், 'அறி வாய்' என்றார். இங்கு, அமுதம் என்றது மரணமில்லாமை

யைக் குறித்து நின்று நிலைபேருன உண்மை வடிவைக் காட்டியது. வான் அந்தம் ஆன - மண்முதல் ஆகாசம் ஈருன. கானம் - மயானம்; சுடுகாடு. தவள நிறக்கானம் - திருவெண்காடு என்னும் தலமுமாம். இங்குச் சிவபெருமான் அகோர வீரபத்திர வடிவங்கொண்டு காளிக்கு எதிரே அகோர நடனம் ஆடியதாகும். கண்ணி - தலையில் அணியும் மாலை. 'சரணுரவிந்தம் எம்பிரான் முடிக்கண்ணியது' என்றது அம்பிகையின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டுச் சிவபெருமான் உமாதேவியை வணங்கியதைக் குறிப்பித்தது. (ஊடல்-சிறு பிணக்கு). சரண + அரவிந்தம் = சரணுரவிந்தம். அரவிந்தம் - தாமரை. 11

தம் புண்ணியச்செயலை வியத்தல்

கண்ணிய துன்புகழ் கற்பதுன் நாமம் கசிந்துபத்தி
பண்ணிய துன்இரு பாதாம் புயத்தில் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோர் அவையத்து நான்முன்செய்த
புண்ணியம் ஏதென்அம் மே!புவி ஏழையும் பூத்தவளே!

இ - ள் : ஏழுலகங்களையும் (பெருமல்) பெற்றெடுத்த அபிராமியம்மையே! (அடியேன் இம்மையிலே) எண்ணியது உன் திருப்புகழையே; கற்றுரைத்தது உன் திருப்பெயர்களையே; (மனம்) உருகித் தொண்டு செய்தது உன் இரண்டு திருவடித் தாமரை மலர்களிலே; பகலும் இரவுமாகப் பொருந்தி வாழ்ந்தது உன்னை விரும்பித் தொழும் மெய்யடியார்களது சபையின்கண்ணே; (ஆதலால்), என் அம்மையே! (இவ்வளவுக்கும் காரணமாக), அடியேன் முற்பிறவிகளிலே செய்த சிவபுண்ணியச் செயல் யாது? (அதனைச் சொல்லியருள்க; இன்னும் அவற்றையே செய்வேன்) எ - று.

விளக்கம் : கண்ணுதல்–கருதுதல்; எண்ணுதல். பத்தி– மெய்யன்பு; தொண்டு. அவை - சபை; திருக்கூட்டம். பூத்தல் - படைத்தல். முற்பிறவியில் புண்ணியம் செய்தார்க்கே இவ்வழிபாடு பொருந்தும்: இங்கு, "தவமும் தவமுடையார்க்காகும்" எனவரும் திருக்குறள் அடி நினைவிற்கொள்ளற்பாலது. ,நயந்தோர வையத்து' என்றும் பாடம். 12

உன்னையன்றிப் பிறதெய்வம் தொழேன் என்றல்

பூத்தவ ளே !புவ னம்பதி னுன்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளே !பின் கரந்தவ ளே !கறைக் கண்டனுக்கு
மூத்தவ ளே!என்றும் மூவா முகுந்தற் கிளையவளே !
மாத்தவ ளே!உன்னை அன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே.

இ - ள்: உலகம் பதினுன்கையும் பெருது பெற்றவளே ! (அவற்றைப்) பாதுகாக்கின்றவளே ! பின்னர் (அப்பெற்றவாறே) அவற்றை ஒடுக்குபவளே ! திருநீலகண்டப் பெருமானுக்கு முன் தோன்றியவளே ! எக்காலத்தும் முதுமையடையாத திருமாலுக்கு இளையவளாய் இருப்பவளே ! பெரிய தவத்தையுடைய அபிராமி யம்மையே ! (அடியேன்) உன்னை அல்லாது வேறொரு தெய்வத்தை வழிபடுவது ஆகுமோ ? (ஆகாது) எ – று.

விளக்கம்: அபிராமியம்மை முத்தொழிலுக்கும் மூல காரணமாதலின், "பூத்தவளே, காத்தவளே, கரந்தவளே" என்றார்: "காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" என்பது திருவாசகம். கறைக்கண்டன் - நீலகண்ட பரமசிவம். சக்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றுதலின், "கறைக் கண்டனுக்கு மூத்தவளே" என்றார். "சக்தி தான் சிவத்தை யீன்றும்" என்பது சிவஞான சித்தியார் அடி. கரந்தவள் – ஒடுக்குபவள் ; அழிப்பவள். மா-பெரிய. தவள்– தவமுடையவள். முகுந்தன்–திருமால். முகுந்தற்கு என்றும் மூவா இளையவளே – திருமாலுக்கு எக்காலத்தும் மூத்திருந்தும் இளையவளாகவே இருப்பவளே என்று பொருள் கொள்ளலுமாம். மூவா-நரை, திரை, மூப்பு இல்லாத என்றுமாம். 13

அம்மையின் எளிமையை வியத்தல்

வந்திப் பவருன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாம்எம்பி ராட்டிநின் தண்ணளியே.

இ - ள்: எம்முடைய தலைவியாகிய அபிராமியம்மையே! உன்னை (த்திரிகரணங்களாலும்) வழிபடுவோர்கள் தேவர்களும் அசுரர்களும் ஆகிய இரு வகையினருமே ஆவர்; (நின்னை) மனத்தினால் தியானிப்பவர்கள் நல்ல நான்கு முகங்களையுடைய பிரமர்களும், விட்டுணுக்களுமே ஆவர்; தம் உள்ளத்துள்ளே அன்பினால் கட்டிவைப்பவர் அழியாத சிவானந்தத்தையுடைய சிவயோகிகளே ஆவர்; (ஆயினும்), உன்னை (ப்பூமியில் உள்ள ஆலயங்கள் தோறும் சென்று) தரிசிக்கும் அன்பர்களுக்கு உன் குளிர்ந்த திருவருள் கைகூடுதல் எளிதாக இருக்கின்றது; (இஃது என்ன வியப்பு) எ - று.

விளக்கம்: வந்தித்தல் - வழிபடுதல். தானவர் - அசுரர். ஆனவர்கள் - ஆனிலை உலகத்தவர் என்பாருமுளர். (ஆன்நிலை உலகம் - கோலோகம்.) திசைமுகர் - பிரமதேவர். பந்தித்தல் - கட்டுதல். பரமானந்தர் - மேலான ஆனந்த வடிவுடைய சிவபெருமான் எனினுமாம். சந்தித்தல் - கண்டு தரிசித்தல். தண்ணளி - திருவருள். 14

வழிபடுவோர் பெறும் பேறுகள்

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்; மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றோ?
பண்ணளிக் கும்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே!

இ - ள்: பண்களுக்கும் (இனிமையைக்) கொடுக்கும் (மிக இனிய) சொற்களையும் இயற்கை மணத்தையுமுடைய மிகப் பசுமையான பச்சைக்கிளி போன்ற அபிராமியம்மையே! (உன்னுடைய) தண்ணளியாகிய திருவருளைப் பெறுதற்கென்றே முற்பிறப்புக்களில் பல கோடிவகையான தவங்களைச் செய்த மெய்யடியார்கள் (அத்திருவருளால் இம்மையில்) இவ்வுலகைக் காக்கும் அரசச் செல்வம் ஒன்றை மட்டுமா பெறுவார்கள்? (மறுமையில்) நுண்ணறிவுடைய தேவர்களுக்குரிய வானுலகத்தை ஆளும் பெருஞ் செல்வத்தையும், அழியாத பேரின்ப வீட்டையும் அன்றோ பெறுவார்கள்? எ - று.

விளக்கம் : முன் - முற்பிறவி. மதி - நுண்ணறிவு; யாவரும் போகத்திற்குச் சிறந்தது என்று மதிக்கின்ற எனினுமாம். பண் அளிக்கும் - பண்களைப் பாதுகாக்கும் என்றலுமாம். யாமளை - பச்சை நிறமுடையவள் ; யாமள வேதத்தில் பேசப்பட்டவள். அபிராமியம்மையின் திருவருளைப் பெற்றோர் இம்மை மறுமை வீடு என்னும் மூன்றையும் முறையே பெறுவர் : ''அறந்தழுவும் நெறிநின்றோர்க்கிக போகம் வீடளிக்கும் அம்மை'' என்பது திருவிளையாடற் புராண அடி. 15

தம் சிற்றறிவின் எல்லைக்கு எட்டியதை வியத்தல்

கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்கிட மே! எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே! வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தஅம்மே!
அளியேன் அறிவள விற்கள வான ததிசயமே.

இ -ள் : (பசுங்) கிளி போன்றவளே! (உன்) உறவினராகிய மெய்யடியார்களின் உள்ளத்தின் கண்ணே நிலை பெற்றுச் சிறந்து விளங்கும் ஞானவொளியே! விளங்குகின்ற (சூரிய சந்திர அக்கினிகளாகிய) ஒளிகளுக்கெல்லாம் ஆதாரமாய் நிற்கும் பொருளே! (உண்மையைச்) சிந்தித்துப் பார்க்கும்போது ஒன்றுமில்லாத ஞானவெளியே! வான் முதலான ஐம்பூதங்களாகி விரிந்திருக்கின்ற அபிராமியம்மையே! (இத்துணைப் பெரிய பொருளாகிய நீ) உன் அருளுக்குரிய எளியேனது சிற்றறிவின் எல்லைக்கு உரித்தாய் நின்று காட்சியளித்தது (எவர்க்கும்) வியப்பைத் தருவதேயாம் எ - று.

விளக்கம் : கிளைஞர் - மெய்யன்பர். கிளர்தல் - மேன்மேலும் எழுதல். வெளி - ஞானவெளி. வெளி முதற் பூதங்கள் - வான், காற்று, தீ, நீர், மண் என்னும் ஐம்பூதங்கள். அளியேன் - உன் அருளுக்கு உரியவன். 'அளியேன் அறிவு அளவிற்கு அளவானது அதிசயமே' : 'ஒண்மலர்த் திருப்பாதத்து அப்பன் ஆண்டுதன் அடியரில் கூட்டிய அதிசயம் கண்டாமே' என்பது திருவாசகம். 16

பதியையும் வென்ற பண்புடைமை

அதிசய மான வடிவுடை யாள்! அர விந்தமெல்லாம்
துதிசய வானன சுந்தர வல்லி! துணையிரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகஅன் றோவாம பாகத்தை வவ்வியதே.

இ-ள்: வியப்பினைத் தரும் அழகுமிக்க திருமேனியை யுடையவளும், தாமரை மலர்கள் எல்லாம் (தம்மினும் அழகில் சிறந்து விளங்குதல் கண்டு) புகழ்கின்ற வெற்றியுற்ற திருமுகத்தைக் கொண்ட அழகிய பூங்கொடி போல்பவளு மாகிய அபிராமியம்மையே! தனக்குத் (தானே அழகில் இணையும் வாழ்க்கைத்) துணையுமான இரதிக்குக் கணவனாகிய மன்மதன் (பிறவிடங்களில்) பெற்ற வெற்றியெல்லாம் தம்முன் இழந்து தோல்வியடைய முற்காலத்தில் (நெற்றிக் கண்ணால்) நோக்கியருளிய சிவபெருமானது புத்தியை வெற்றிபெற அல்லவோ அவரது இடப்பாகத்தை (நீ) கவர்ந்து கொண்டருளியது? எ-று.

விளக்கம்: துதித்தல் - புகழ்தல். சயம் - வெற்றி. ஆனனம் - முகம். இரதிபதி - மன்மதன். அபசயமாக முன் பார்த்தவர் - சிவபெருமான். மதி - அறிவு; போக அறிவு. வாமபாகம் - இடப்பாகம். காமனை எரித்த திருவுள்ளத்தைக் கனிவித்து இடப்பாகம் பெற்ற ஆற்றல் அம்மையினதேயாம். 17

காலன் வருங்கால் காத்தருளவேண்டல்

வவ்விய பாகத் திறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே.

இ-ள்: (அபிராமியம்மையே! உன்னால்), கவர்ந்து கொள்ளப்பட்ட இடப்பாகத்தையுடைய சிவபெருமானும் நீயும் (இணைந்து) மகிழ்ந்திருக்கும் காட்சியின் அழகும், உங்கள் திருமணக்கோலமாகிய வடிவழகும், (அடியேன்) உள்

ளத்துள்ளே உள்ள, யான் என்னும் அகப்பற்றையும் எனது என்னும் புறப்பற்றையும் போக்கி அடியேனை ஆட்கொண் டருளிய பொலிவுபெற்ற திருவடிகளுமாகி, (இருவீரும்) எழுந்தருளி வந்து, கொடிய யமன் அடியேன்மேல் எதிர்த்து வரும் இறுதிவேளையில் வெளிப்பட்டு நின்று காட்சி தந் தருள்வீர்களாக எ - று.

விளக்கம் : இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும் செவ்வி - அர்த்தநாரீசுவரத் திருக்கோலம். உங்கள் திருமணக் கோலம் - கலியாண சுந்தரமூர்த்தத் திருக்கோலம். செவ்வி- அழகிய காட்சி. அவ்வியம் - ஆணவம்; அது யான் எனது என்னும் செருக்கு: " அகந்தைக் கிழங்கை யகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற் கேற்றும் விளக்கே" என்பது மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ். அவ்வியம் - வஞ்சனையுமாம். வெவ்விய - கொடிய. 'மேல் வரும்போது' என்றது மரண காலத்தை. வெளிநிற்க - வெளிப்பட்டு நின்று காட்சி தருவ தாக. 18

ஆனந்தமளித்த திருவுளக்கருத்தைப் புகழ்தல்

வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்தென் விழியுநெஞ்சும்
களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானந் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே !

இ - ள் : தெய்வ ஒளிநிறைந்து விளங்கும் ஒன்பது கோணங்களிலும் விரும்பி எழுந்தருளியிருக்கின்ற அபிராமி யம்மையே! (இடையறுது நினைக்கின்றபோது உருவமாகி) வெளிப்பட்டு நின்ற நின்னுடைய திருமேனியை (ப்புறத்தே) என் கண்ணிலும், (அகத்தே) என் கருத்திலும் கண்டு மகிழ்ச்சி மிக்கதனல் உண்டான இன்பவெள்ளத்திற்கு ஒரு கரையும் காணமுடியவில்லை; (அடியேனது) உள்ளத்தி னுள்ளே தெளிவு ஏற்படுதற்குக் காரணமாக நின்ற மெய்ஞ் ஞானம், (ஒருகாலைக்கொருகால்) மிகுந்து விளங்குகின்றது; (நீ இத்துணைப் பேரருளைப் புரிவதற்கு) என்ன திருவுளக் குறிப்போ ? (அதனை அறிந்திலேன்) எ - று.

விளக்கம்: வெளிநின்ற நின் திருமேனி - விக்கிரகம். பார்த்தல் - முகக்கண்ணுலும் மனக்கண்ணுலும் காண்டல். முகக்கண்ணுல் காணுதல் அம்மையின் விக்கிரகத்தை. கரை - எல்லே; முடிவுமாம். கரைகாணுத விடத்தும் ஞானம் திகழ்தற்குக் காரணம் திருவருளே அல்லாமல் வேறு இல்லே யாம். கோணங்கள் ஒன்பது - தேவிக்குரிய நவகோணங் கள். அவை: முன்னர் ஒரு திரிகோணமும், அதன்மேல் அட்ட கோணமும், அதன்மேல் தச கோணமும், அதன் மேல் மற்ருெரு தச கோணமும், அதன்மேல் சதுர்த்தச கோணமும், அதன்மேல் அட்ட தளமும், அதன்மேல் சோடச தளமும், அதன்மேல் விந்துத்திரயமும், அதன்மேல் சதுரச்சிரத்திரயமும் ஆக ஒன்பதாம். இவற்றுள் கீழ்நோக் கிய சிவகோணம் நான்கும், மேனேக்கிய சத்தி கோணம் ஐந்தும் ஆகும். இந்த நாற்பத்து முக்கோண அமைப்பை யும் அட்சர அடைப்பையும் வடமொழி நூல்களுள் குருமூலம் அறிந்து பெறுக. 'ஞானத்திரு நின்ற தென்ன' என்றும் 'ஞானத்தெளி நின்றதென்ன' என்றும் பாடம். 19

உறைவிடம் யாதோ என வினவுதல்

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோஅமுதம்
நிறைகின்ற வெண்டிங்க ளோகஞ்ச மோஎன்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணுசல மங்கலயே!

இ-ள்: அருள் நிறைந்த சலித்தல் இல்லாத நித்திய மங்கலையாகிய அபிராமியம்மையே! நீ எழுந்தருளி யிருக் கின்ற திருக்கோயில், நின் துணைவராகிய சிவபெருமானின் ஒருபக்கமாகிய இடப்பாகமோ? (அல்லது), (நின் புகழை எப்பொழுதும்) பேசுகின்ற நான்கு வேதங்களின் மூலமோ? (அன்றி), அவற்றின் முடிவாகிய உபநிடதங்களோ? அமுதகலை நிறைந்திருக்கும் வெள்ளிய சந்திரமண்டலமோ? வெண்டாமரை மலரோ? (துருவாச முனிவரின் சாபத்தினுல் இந்திரனின் செல்வங்கள் எல்லாம் வீழ்ந்து) மறையப்பெற்ற பாற்கடலோ? (அல்லது), அடியேனுடைய மனத்தின் உள்ளிடமோ? (யாது ஆகும்? அருள்வாயாக) எ-று.

விளக்கம்: கேள்வர் - கணவர்; இங்குச் சிவபெருமான். நான்மறையின் அடி - வேதாந்தம். நான்மறையின் முடி - உபநிடதங்கள். கஞ்சம் - தாமரை. வாரிதி - இங்குப் பாற் கடல். பூரணம் - அருள் நிறைதல். அசலம் - அசைவற் றது; மலை எனினுமாம். அசல மங்கலை - பார்வதி தேவி எனினுமாம். மங்கலை - என்றும் சுமங்கலியாக விளங்கு பவள். பூரண + அசலம் = பூரணாசலம். 20

காட்சியில் திளைத்து நிற்றல்

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பொற்கொடியே.

இ-ள்: நித்திய சுமங்கலியும், சிவந்த (மாணிக்கக்) கலசம் போன்ற தனங்களை யுடையவளும், மலையரசன் மகளும், வெள்ளிய சங்க வளையல்கள் அசைகின்ற சிவந்த திருக்கரங்களையுடைய சகல கலைகளுக்கும் (தலைவியாகிய) மயில் போன்றவளும், பொங்குகின்ற அலைகள் தவழும் கங்கை தங்குகின்ற முறுக்கிய சடையையுடைய சிவபெருமா னது இடப்பாகத்தை ஆளுதல் உடையவளும், (அடியேனை எக்காலத்தும்) அடிமையாக உடையவளும், அழகிய பச் சைக் கொடி போன்றவளுமாகிய அபிராமியம்மை பொன் னிறமுடையவளும், நீல நிறமுடையவளும், செந்நிறமுடைய வளும், வெண்ணிறமுடையவளும் (ஆவாள்) எ-று.

விளக்கம்: அபிராமியம்மை பல சத்தி பேதங்களாக இருப்பவள் ஆதலின், அவளை ஐந்து நிறங்கள் உடையவள் என்று ஈற்றடி கூறுகின்றது. வருணச் சங்கு - அழகிய வளையல்; வருணனால் அளிக்கப்பெற்ற சங்க வளையல் எனி னுமாம். அலை - அசைகின்ற. புரி - முறுக்கு. புடை - இடப் பக்கம். அபிராமியே மங்கலையாகிய பிங்கலையும், மலையா ளாகிய நீலியும், செங்கலச முலையாளாகிய செய்யாளும், சகல கலா மயிலாகிய வெளியாளும் ஆவள் எனக்கொண்டு.

கூட்டிப் பொருள்கொள்ளுதலும் ஆம். மங்கலை என்றது அபிராமியம்மையை. நீலி என்றது துர்க்கையை. செய்யாள் என்றது இலக்குமியை. வெளியாள் என்றது சரசுவதியை. பசும் பொற்கொடி என்றது உமையை. 'புரிசடையோன் புலியூருடையாள்' என்றும் பாடம். "பசும் பெண் கொடியே" என்றும் பாடம். 21

பிறவா வண்ணம் தடுத்தாட்கொள்ள வேண்டுதல்

கொடியே! இளவஞ்சிக் கொம்பே! எனக்குவம் பேபழுத்த
படியே! மறையின் பரிமள மே!பனி மாலிமயப்
பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்றஅம்மே!
அடியேன் இறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே.

இ-ள்: இளமையான வஞ்சிக் கொடியே! பூங்கொம்பே! (பக்குவமற்ற நிலையேனாகிய) அடியேனுக்குக் காலமல்லாத காலத்தில் பழுத்த (அருட்)கனியின் உருவமே! வேதமாகிய மலரின் மணமே! குளிர்ச்சியும் பெருமையும் பொருந்திய இமயமலையில் விளையாடும் பெண் யானையே! பிரமன் முதலாய தேவர்களைப் பெற்றெடுத்த உலகன்னையாகிய அபிராமியம்மையே! அடியேன் இனி இறந்த பின்னர் மீட்டும் பிறவா வண்ணம் (இங்கு) எழுந்தருளி வந்து தடுத்தாட் கொண்டு அருள் செய்வாயாக எ-று.

விளக்கம்: வம்பு - காலமல்லாத காலம். "ஊற்றையேன் தனக்கு வம்பெனப் பழுத்து என் குடி முழுதாண்டு" என்பது திருவாசகம். படி - உருவம். மால் - பெருமை. பிடி - பெண் யானை. "பனிமால் இமயப் பிடியே"; வளர்சிமய இமயப் பொருப்பில் விளையாடும் இளமென் பிடியே" என்பன மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ். பிரமன் முதலாய தேவர் - பிரமன் திருமால் இந்திரன் முதலிய தேவர்கள். இங்கு ஈற்றடியோடு "அடியேன் இனிப் பிறவாமல் வந்தேன்று கொள்ளே" என்ற அப்பர் தேவார அடியினை ஒப்பு நோக்குக. 22

தம் குறிக்கோளைக் கூறுதல்

கொள்ளேன் மனத்தில்நின் கோலமல் லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன்; பரசம யம்விரும் பேன்; வியன் மூவுலகுக்
குள்ளே! அனைத்தினுக் கும்புறம் பே! உள்ளத் தேவிளைந்த
கள்ளே! களிக்கும் களியே! அளியஎன் கண்மணியே!

இ-ள்: பெரிய மூன்று உலகத்துள்ளும் உள்ள பொருளே! அவை யனைத்திற்கும் புறம்பாயும் உள்ள பொருளே! அடியார்கள் உள்ளத்தே முற்றி விளைந்த (இன்பத்) தேனே! (மெய்யன்பர்கள்) மகிழும் பெருமகிழ்வே! இரங்கத்தக்க எளியேனது கண்ணினுள் விளங்கும் மணி போன்ற அபிராமி யம்மையே! (என்) உள்ளத்தில் உன்னுடைய திருவுருவை அன்றி மற்றொரு தெய்வத்தின் உருவை உட்கொள்ளேன்; (நின்) மெய்யன்பர் கூட்டத்தைவிட்டுப் பிரியேன்; பிற சமயங்களை விரும்பேன்; (திருவருள் புரிக) எ-று.

விளக்கம்: பரசமயம் - பிறசமயம். வியன் - பெரிய. கள் - தேன். களிக்கும் களி - பேரின்பமுமாம். அளிய - இரங்கத்தக்க. "கொள்ளேன், விள்ளேன், விரும்பேன்" இம்மூன்று உறுதிகளும் திறம்பாதிருக்கும் பொருட்டு அடியேனுக்குத் திருவருள் புரிக என்று வேண்டியதாகும். மூன்று + உலகு = மூவுலகு. இங்கு, "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு; குடிகெடினும், நள்ளேன் நினதடியாரொடல்லால்; நரகம்புகினும், எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறின்; இறைவா!, உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாதெங்கள் உத்தமனே!" எனவரும் திருவாசகச் செய்யுள் ஒப்பு நோக்கற்பாலது. 23

நின்பேறு பெற்றநான், பிறரை வணங்கேன் என்றல்

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கழ கே! அணு காதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.

இ - ள்: மாணிக்கமணி போன்றவளே! அம்மாணிக்க மணியின்கண் உள்ள ஒளி போன்றவளே! விளங்குகின்ற மாணிக்கமணிகளால் இழைக்கப்பெற்ற ஆபரணம்போன்றவளே! (நின் திருமேனியில்) அணியப்படுகின்ற ஆபரணங்களுக்கு அழகாயிருப்பவளே! (நின்னை) அணுகி அடைக்கலமடையாதவர்களுக்கு நோய் போன்றவளே! (நின்னை அடைக்கலமடைந்தவர்களின்) பிறவி நோய்க்கு(ப்பெரிய) மருந்து போன்றவளே! (நெடுங்காலம் வாழும்) தேவர்களுக்கு நல்ல பெரிய விருந்து போன்ற அபிராமியம்மையே! (இத்துணைச் சிறப்புக்கள் வாய்ந்த) நின் திருவடித் தாமரைகளை (அடியேன்) வணங்கியபின் வேறொருவரையும் வணங்கேன்; (திருவருள் புரிக) எ - று.

விளக்கம்: மணி - செம்மணி; மாணிக்கம். பிணி - பிறவி நோய். பெருவிருந்து - நல்விருந்து; ஒரு காலைக்கு ஒருகால் புதிய புதிய அழகு பூத்துத் தோன்றுவது கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாதலின், 'பெருவிருந்தே' என்றார். (விருந்து - புதுமை.) பத்மபாதம் - தாமரை மலர் போன்ற பாதம். 24

முன்னைத் தவத்தின் சிறப்பினை மொழிதல்

பின்னே திரிந்துன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்;முதன் மூவருக்கும்
அன்னே! உலகுக் கபிராமி என்னும் அருமருந்தே!
என்னே இனியுன்னை யான்மற வாமல்நின் றேத்துவனே.

இ - ள்: (படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலுக்கும்) முதன்மையையுடைய (அயன் அரி அரன் என்னும்) திரிமூர்த்திகளுக்கும் தாயே! மூன்றுலகுக்கும் அபிராமியம்மை என்ற பிறிதொரு பெயர் படைத்த அரிய தேவாமிர்தமே! நின் அடியார்களின் பின்னே திரிந்து, அவர்களை வழிபட்டுப் பிறவி நோயாகிய வலையை அறுக்கும் பொருட்டு முற்பிறவிகளிலே தவங்களாகிய வாட்படைகளை முயன்று செய்துகொண்டேன்; அடியவன் (அத்தவங்

காரணமான) உன்னை இம்மையில் என்றும் மறவாமல் நின்று வணங்கித் துதித்துப் புகழ்வேன்; இனி எனக்கு என்ன குறையுண்டு; (ஒன்றுமில்லை) எ - று.

விளக்கம்: பேணி - வழிபட்டு; தொண்டு புரிந்து. மூன் - முற்பிறவி. முதன் மூவர் - முத்தொழிலுக்கும் காரணமான அயன் அரி அரன் என்ற மூவர். அருமருந்து - தேவாமிர்தம்: "பிணிக்கு மருந்தே" (24) என்றார் முன்னும். உலகு - மூவுலகம். ஏத்துதல் - துதித்துப்புகழ்தல். 25

அருள் பெற்றோரின் உயர்வை அறிவித்தல்

ஏத்தும் அடியவர் ஈரேழ் உலகினை யும்படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவ ராம்; கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழலணங் கே! மண நாறும்நின் தாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே.

இ - ள்: (நறுமணங்) கமழும் பொலிவு பொருந்திய கடப்பமலர் மாலையை அணிந்தருளும் கூந்தலையுடைய அபிராமியம்மையே! (உன்னுடைய திருவடிகளைப் புகழ்ந்து) துதிக்கும் அடியவர்கள், பதினான்கு உலகங்களையும் படைத்தும் காத்தும் அழித்தும் திரிகின்ற மும்மூர்த்திகளும் ஆவர்; (அவ்வாறு இருக்கவும்), நல்ல வாசனை வீசும் உன்னுடைய இரண்டு திருவடித் தாமரைகளுக்கு, (ஒன்றுக்கும் பற்றாத அடியேனது) நாவினின்றும் தோன்றிய பொருளற்ற மொழிகளும் (துதிகளாகத் திருச் செவிகளில்) ஏற்றுக்கொள்ளப் பெற்று உயர்வு பெற்றது (ஏனையோர்) நகைக்கும் செயலுடையது எ - று.

விளக்கம்: பூ - பொலிவு. கடம்பு - கடப்பமலர். இஃது அம்பிகைக்கு மிக உவப்புடையது. குழல் - கூந்தல். அணங்கு - தெய்வம். இணை - இரண்டு. புன்மொழி - பொருட் பொலிவும் சொற்பொலிவும் இல்லாத சொற்கள். மனிதர் உன் மெய்யடியவராக ஆனபோது மும்மூர்த்திகளாதலை அவர் அறிந்திலர்போலும் என்க. 26

திருவருள் புரிந்த செயலை வியத்தல்

உடைத்தனை வஞ்சப் பிறவியை; உள்ளம் உருகுமன்பு
படைத்தனை; பத்ம பதயுகம் சூடும் பணியெனக்கே
அடைத்தனை; நெஞ்சத் தழுக்கையெல் லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை; சுந்தரி! நின்னருள் ஏதென்று சொல்லுவதே.

இ-ள்: பேரழகியாகிய அபிராமியம்மையே! (உன்னுடைய) தாமரை மலர் போன்ற இரண்டு திருவடிகளை (த்தலையில்) சூடும் திருத்தொண்டை எனக்கே ஆக அடையச் செய்தனை; (அக்காரணத்தால் என்) உள்ளத்திலுள்ள (ஆணவம் முதலிய) அழுக்குகளை யெல்லாம் நின் கருணை வெள்ளத்தால் கழுவிப் போக்கினை; (அதனால்) அவ்வுள்ளம் உருகுதற்கு ஏதுவான உண்மை யன்பினை உண்டாக்கினை; (அதனால், மாயா சூழ்ச்சியினால் வந்த) பொய்ப் பிறவிக் கரையினை இடித்து எறிந்தாய்; (இப்பேருதவிகள் புரிந்த) நின் திருவருட் சிறப்பினை (அடியேன்) எத்தகையது என்று சொல்லித் துதித்துப் புகழ்வது? எ-று.

விளக்கம்: வஞ்சம் - பொய். பதயுகம் - இரண்டு திருவடிகள். அழுக்கு - ஆணவம் முதலியன. அருட்புனல் - கருணை வெள்ளம். அடைத்தல் - ஒப்பித்தல். துடைத்தல் - கழுவி நீக்குதல். தாள் பணியவும் அருள் வேண்டும் என்பதை, "அவனரு ளாலே அவன்றாள் வணங்கி" என வரும் திருவாசகத்தால் அறியலாம். 27

அடிதொழுவார் அடையும்பேறு

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யே!நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க் கேஅழி யாவரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே.

இ-ள்: ஆனந்த தாண்டவம் செய்தருளும் நின்துணைவராகிய சிவபெருமானுடன் சொல்லும் பொருளும் போலத் தழுவி நிற்கும் இயற்கை நறுமணம் வீசும் பூங்கொடி போன்ற அபிராமியம்மையே! நின்னுடைய அன்றலர்ந்த

செந்தாமரை மலர்போன்ற திருவடிகளை இரவும் பகலும் வழி படுகின்ற மெய்யடியார்களுக்கு மட்டுமே (இடையில்) அழி யாத அரச பதவியும், தடையருது நிகழும் தவவொழுக்கமும், சிவலோகபதவியும் (ஆகிய இம்மூன்றும்) நிச்சயமாகக் கிடைக்கும் எ - று.

விளக்கம்: சொல் வடிவம் - உமாதேவி. பொருள் வடி வம் - சிவபெருமான்: "சொல்வடி வாய்நின் னிடம்பிரியா இமயப்பாவை தன்னையுஞ் சொற்பொரு ளான உன்னை யுமே" என்பது திருவிளையாடற் புராணம். நடம்-ஆனந்த தாண்டவம்; படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில் புரியும் நடனமுமாம். புல் லும் - கலந்த; தழுவிய. புதுமலர் - அன்று மலர்ந்த மலர். அல் - இரவு. சிவலோகம் - இங்குப் பரமுத்தி. அபிராமி யம்மையின் மெய்த்தொண்டர்க்கு இவ்வுலக வாழ்வும் சிவ லோக வாழ்வும் உண்டாகும் என்பதாம். 'துணைவரிடம்' என்றும், 'புல்லும் புரிகுழற்' என்றும் பாடம். 28

அபிராமி எல்லாமாக இருக்கும் சிறப்பு

சித்தியும் சித்தி தரும்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவமுயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.

இ - ள்: (அணிமா முதலிய) அட்டமா சித்திகளும், (அந்த அட்டமா சித்திகளுக்கெல்லாம்) சித்திகளைக் கொடுக் கும் ஏனைத்தெய்வமாகி விளங்குகின்ற பராசத்தியும், (அப் பராசக்தியால்) மற்றைய சக்திகள் இயங்குதற்கு ஏதுவாகிய பரசிவமும், (அப்பரசிவத்தை நோக்கிச் சரியை கிரியை யோகங்களாகிய) தவங்களை முயன்று செய்பவர்கள் அடை யும் (பத) முத்தியும், (அப்பத) முத்திக்கு விதைக்கும் விதை யாகி (யோக நிலத்தில்) முளைத்து எழுந்த சிவஞானமுமாகி எல்லாமாக இருப்பவள், ஆன்ம அறிவினுக்குள்ளே கலந்து நின்று (புத்தி, முத்தி இரண்டிலும்) பாதுகாக்கும் திரிபுர சுந்தரியாகிய அபிராமியம்மையேயாம் எ - று.

விளக்கம் : சித்தி-அட்டமா சித்திகள்; அவை, அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன; இவற்றின் விரிவைத் திருவிளையாடற் புராணம் அட்டமாசித்தி உபதேசித்த படலத்தில் காண்க. சித்தி தரும் தெய்வம் - சித்தேசுவரியுமாம்; இவள் சித்தர்களுக்கு அருள்புரிபவள். தழைக்கும் - இயங்கும். புரத்தை- திரிபுர சுந்தரியை. அன்று, ஏ : அசைகள். அபிராமியம்மை, சித்தி முதலிய ஐவகையும் பிறவுமாக விளங்குபவள் என்பதாம். 'உள்ளருள் பூரிக்கும்' என்றும் பாடம். 29

குற்றம் செய்யினும் குணமெனக் கொள்ள வேண்டுதல்

அன்றே தடுத்தென்னை ஆண்டுகொண் டாய்; கொண்ட தல்லவென்கை
நன்றே உனக்கினி நான்என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற் றுகைநின் திருவுளமே;
ஒன்றே! பலவுரு வே! அரு வே! என் உமையவளே.

இ - ள் : ஒருருவாக உள்ளவளே! பல உருவங்களையுடையவளே! நிட்கள வடிவுள்ளவளே! அடியேனுக்குக் குலதெய்வமாகிய சகள வடிவான அபிராமி யம்மையே! (யாது தவம் பற்றியோ) அடியேனைக் கருவினுள் உருவாய் அமைந்த காலத்திலேயே (நீ) தடுத்தாட் கொண்டருளினை; (அங்ஙனம்) ஆட்கொண்டருளியதை அல்ல என்று மறுத்தல் (கருணையே வடிவாகிய உனக்கு நன்றாமோ? (நன்றாகாது;) (ஆதலால்), இனிமேல் அடியேன் என்ன குற்றம் செய்தாலும், கடல் நடுவே சென்று வீழ்ந்தாலும், (அடியேன் குற்றத்தை மறந்து கருணைக்கையால் எடுத்து) முத்திக் கரையிலேற்றுதல் நின் திருவுளப்பாங்கே ஆகும் எ - று.

விளக்கம் : அன்று - கருவினுள் உருவாய் அமைந்த அன்று. இங்கு, "அன்றே என்றன் ஆவியு முடலு முடைமை யெல்லாமும் குன்றே யனையாய் எனையாட் கொண்டபோதே கொண்டிலையோ" எனவரும் திருவாசக அடிகள் நினைவிற்கொள்ளற்பாலன. அல்ல - இல்லை என்னும் பொருளது. என்கை - என்பது. கடல் - பாசக்கடல்

எனினுமாம். கரை - முத்திக்கரை. அரு - உருவின்மை; நிட்களவடிவம். திருவுளமே, ஏ: தேற்றேகாரம். 'அன்றே தனித்தென்னை' என்றும் பாடம். 30

ஆட்கொண்ட திறத்தை அறிவித்தல்

உமையும் உமையொரு பாகனும் ஏக வுருவில்வந்திங்
கெமையும் தமக்கன்பு செய்யவைத் தார்;இனி எண்ணுதற்குச்
சமையங் களுமில்லை; ஈன்றெடுப் பாள்ஒரு தாயுமில்லை;
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே.

இ - ள்: அபிராமியம்மையும், அவ்வம்மையை ஒரு பாகத்திலுடைய சிவபெருமானும் சேர்ந்து ஓர் உருவாக (அர்த்தநாரீசுவரவடிவாக, அடியேனது கனவில்) எழுந்தருளி வந்து, (திருவடி தீட்சை செய்து) பரிபக்குவமற்ற எம் போன்றாரையும் தமக்கு அன்பு செய்யும்படி தொண்டு நிலையில் வைத்தருளினர்; (ஆதலின்), இனி ஆராய்ந்தற்குரிய மெய்ச்சமயங்கள் வேறு ஒன்றும் இல்லை; (எனக்குப் பிறவிப் பிணி நீங்கியது;) என்னைப் பெற்றெடுப்பதற்குரிய தாயும் இல்லை; பசியமூங்கிலைப் போன்ற தோள்களையுடைய மகளிர் பால் வைத்த காதல் (இனி எனக்குப்) போதும் எ - று.

விளக்கம்: உமை - உயிர்களைக் காப்பவள்; பார்வதி. ஏக உருவில் - ஒரு வடிவில்; அர்த்தநாரீசுவர வடிவில். அர்த்தநாரீசுவர வடிவத் தியானம் பெண்ணாசையைப் போக்கவல்லது என்பதை, "நின்றனையே, பெண்பயிலுருவ மொடுநினைந் தெனது பெண்மயல் அகற்றுநாள் உளதோ" எனவரும் சோணசைலமாலை அடிகளால் அறியலாம். சமையங்கள் - சமயங்கள்; கொள்கைகளுமாம். அமையும்-போதும். அமை-மூங்கில். அமையுறு, உறு: உவமவுருபு. 31

வலியவந்து ஆட்கொண்டதைப் புகழ்தல்

ஆசைக் கடலில் அகப்பட் டருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற் படஇருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்;ஈசர் பாகத்து நேரிழையே!

இ-ள்: சிவபெருமானது இடப் பாகத்தில் எழுந்தருளியிருக்கும் தகுதியான அணிகலங்களை அணிந்த அபிராமியம்மையே! (மண், பெண், பொன் என்னும்) மூவாசையாகிய கடலில் சிக்குண்டு, (அதன் பயனாக) இரக்கமற்ற யமனது கைப் பாசத்திற் கட்டுண்டு, இறப்புத் துன்பத்தையும், நரகத் துன்பத்தையும் ஒருங்கு அடைய இருந்த அடியேனை, நின் திருவடியாகிய மணமுள்ள (மெல்லிய) தாமரை மலர்களை (என் புல்லிய) தலையின்மேல் வலிய (வந்து) வைத்துத் தடுத்தாட்கொண்டருளிய நின் தலையன்பை என்னென்று எடுத்துச் சொல்லிப் புகழ்வேன் எ-று.

விளக்கம்: கரைகாணுதற்கு அரிது ஆதலின், ஆசையைக் கடல் என்றார். அந்தகன் - யமன். கைப்பாசம் - கையிலுள்ள கயிறு. அல்லல் - துன்பம்; அஃது இறப்புத் துன்பம், நரகத் துன்பம் என்ற இரண்டு. நேசம் - தலையன்பு; பெருங்கருணையுமாம். நேரிழை - நுண்ணிய வேலைப்பாடு அமைந்த ஆபரணம்; இங்கு அதனை அணிந்த அம்மைக்கு ஆயிற்று. 'பாதமெனும்' என்றும் பாடம். 32

எமபயத்தைப் போக்கியருள வேண்டுதல்

இழைக்கும் வினைவழி யேயடுங் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந் தஞ்சல்என் பாய்;அத்தர் சித்தமெல்லம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே!
உழைக்கும் பொழுதுன்னை யேஅன்னை யே! என்பன் ஓடிவந்தே.

இ-ள்: உலகத் தந்தையாகிய சிவபெருமானுடைய திருவுள்ளம் முழுதும் உருகும்படி செய்யும் கலவைச் சந்தனத்தை அணிந்த குவிந்த தனபாரங்களையுடைய யாமளையாகிய கட்டழகு பொருந்திய அபிராமியம்மையே! (அடியேன் முன்னைப் பிறவிகளில்) செய்துகொண்ட இருவினைகளின் வாயிலாக என்னைக் கொல்லப்புகும் யமன், (யான்) நடுங்குமாறு வந்து அழைக்கும் சமயத்தில் (மிகவருந்துவேன்; அவ்வாறு) வருந்தும்போது, 'அன்னையே! (உன் அடைக்கலம்)' என்று உன்னையே அழைப்பன் (அப்போது நீ) விரைந்து எழுந்தருளிவந்து, 'அஞ்சற்க' என்று கூறி, (அடியேனைக்) காத்தருள்வாய் எ-று.

விளக்கம்: இமைக்கும் - (முற்பிறவிகளில்) செய்த. வினை வழி - பாபத்தின் வாயிலாக என்றுமாம். அடும் - வருத்தும்; கொல்லும். அத்தர் - சிவபெருமான். சித்தம் - திருவுள்ளம். யாமளை - பச்சை நிறமுடையவள். கோமளம் - கட்டழகுடையவள்; அபிராமியம்மை. யான் அன்னையே என்பன், ஓடிவந்து அஞ்சல் என்பாய் என்க. 33

அம்மை எழுந்தருளிய இடங்கள்

வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும்; சதுர்முகமும்
பைந்தேன் அலங்கற் பருமணி யாகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே.

இ - ள்: அபிராமியம்மை, (தம்பால்) பேரன்பு கொண்டு அடைக்கலம் புகும் மெய்யடியார்களுக்கு முன் எழுந்தருளி வந்து (அவரவர் விரும்பியவாறு) வீடும் மேலுலக வாழ்வும் அளித்துவிட்டு, பிரமதேவனின் நான்கு நாவிலும், பசிய தேன் ஒழுகும் துழாய் மாலையும் பருத்த கவுத்துவமணியும் அணிந்த (திருமாலின்) மார்பிலும், (சிவபெருமானுடைய) இடப் பாகத்திலும், (தேவலோகத்திலுள்ள) செந்தேன் பொருந்திய பொற்றாமரை மலரிலும், விரிந்த (ஆயிரங்) கிரணங்களையுடைய சூரிய மண்டலத்திலும், சந்திரமண்டலத்திலும் சென்று வீற்றிருப்பாள் எ - று.

விளக்கம்: வான் - சொர்க்கம். வானுலகம் - இங்கு மோட்சம்; சொர்க்க பதவியுமாம். பரிவு - பேரன்பு; தான் - இங்கு அபிராமியம்மை. சதுர்முகம் - பிரமனின் நான்கு முகங்கள். முகம் - இங்கு நாக்கு: ஆகு பெயர். மணி - கவுத்துவமணி. ஆகம் - மார்பு. பாகம் - இடப்பாகம். பொன்மலர் - பொற்றாமரை. அபிராமியம்மைக்கு, முகம், ஆகம், தாமரை, ஞாயிறு, திங்கள் இவற்றினும் திருக்கடவூரே விசேட மூலத்தானம் என்பதாம். அம்மையார் மெய்யடியார்களுக்குப் போகப் பொருள் நிறைந்த பெரிய உலகங்களைத் தந்துவிட்டுத் தான் குறுகிய இடங்களில் சென்று வீற்றிருப்பாள் என்று நயம்படக் கூறியவாறு. 34

தாம்பெற்ற தவப்பேற்றை வியத்தல்

திங்கட் பகவின் மணநாறுஞ் சீறடி சென்னிவைக்க
எங்கட் கொருதவம் எய்திய வாஎண் ணிறந்தவிண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்து மோ?தரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும்விழுப் பொருளே.

இ - ள்: அலைமோதுகின்ற திருப்பாற் கடலின்கண்ணே கொடிய கண்களையுடைய ஆதிசேடன்மீது உள்ள திருமாலை இடமாகக் கொண்டு நின்று யோக நித்திரைசெய்யும் மேலான வைணவியாகிய அபிராமியம்மையே! (சிவபெருமானது திருமுடியிலுள்ள) பிறைச்சந்திரனது மணம் வீசுகின்ற (நின்னுடைய) சிறிய திருவடிகளைச் சிரசிலே நீ சூட்டியருளுதற்கு அடியேங்கட்கும் ஒப்பற்ற தவம் இருந்தவாறு மிக நன்று! நன்று!! கணக்கில்லாத தேவர்களுக்கு ஆயினும் இத்தகைய அரிய தவப்பயன் கிடைக்குமோ? (கிடைக்காது) எ - று.

விளக்கம்: திங்கட்பகவு - சந்திரனது கீற்று; பிறைச் சந்திரன். அம்மையின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டுச் சிவபெருமான் அம்மையை வணங்கும்போது அவரது திருமுடியிலுள்ள பிறைச் சந்திரன் தோயப்பெற்று அதன் மணங் கமழும் சீறடி என்பார், "திங்கட் பகவின் மணநாறுஞ் சீறடி" என்றார். "பிறை நாறுஞ் சீறடியைப் பாடுவனே" என்பது மீனுட்சியம்மை குறம். "பிள்ளைப் பிறை நாறுஞ் சீறடியெம் பேதாய்" என்பது சிவகாமியம்மை இரட்டைமணிமாலை. தரங்கம் - அலை. வெங்கட் பணி - கொடிய கண்ணையுடைய பாம்பு. துயில் - யோகநித்திரை. விழுப்பொருள் - இங்கு அபிராமியம்மை. திருமாலை இடமாகக் கொண்டு நின்று காத்தல் தொழிலைச் செய்யும் சிவசத்தியே வைணவி (இலக்குமி) எனப்பெயர் பெறுதலின் அவ்வொற்றுமைபற்றி அபிராமியம்மையைத் "தரங்கக் கடலுள் வெங்கட் பணியணைமேல் துயில் கூரும் விழுப்பொருளே" என்றார். 'சீரடி சிந்தை வைக்க' என்றும் பாடம்.

திருவருளின் இயல்பை அறிவித்தருள வேண்டுதல்

பொருளே! பொருள்முடிக் கும்போக மே!அரும் போகஞ்செய்யும்
மருளே! மருளில் வருந்தெரு ளே!என் மனத்துவஞ்சத்
திருளேதும் இன்றி ஒளிவெளி யாகி இருக்குமுன்றன்
அருளே தறிகின்றி லேன்;அம்பு யாதனத் தம்பிகையே!

இ-ள்: (பலவகைச் செல்வப்) பொருளாய் உள்ளவளே! (அச்செல்வப்) பொருளால் (அனுபவித்து) முடிக்கும் இன்ப துன்ப நுகர்ச்சியாய் உள்ளவளே! அரிதாகிய (அப்) போகங் களைத் துய்க்கும்படி தரும் மயக்கமாய் உள்ளவளே! அம் மயக்கத்தில் (வெறுப்பு உண்டாதலால்) முடிவில் வரும் தெளிந்த ஞானமாய் உள்ளவளே! தாமரையாகிய ஆச னத்தில் எழுந்தருளிய அபிராமியம்மையே! அடியேனது உள்ளத்தில் அஞ்ஞான இருள் சிறிதும் இல்லாது ஒழிய, ஞானவொளி வீசும் பரவெளியாக இருக்கும் உன்னுடைய திருவருள் எத்தகையது என்று (அதனை) அறிகின்றிலேன்; அறிவிப்பாயாக எ-று.

விளக்கம்: பொருள் - மணி, பொன், வெள்ளி, நெல் முதலாகிய உடைமைப் பொருள்கள். போகம் - இன்ப துன்ப நுகர்ச்சி. மருள் - மயக்கம். தெருள் - தெளிந்த ஞானம். வஞ்சத்திருள் - அஞ்ஞான இருள். ஒளி - ஞான வொளி; பேரறிவு. வெளி - பரவெளி. "அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே" என்பது திருவாசகம். அம் புயம் - செந்தாமரை, வெண்டாமரை. அபிராமியம்மையே! ஒன்றற்கொன்று தம்முள் மாறுபட்ட பலகுணம் பொருந்திய நின் திருவருளின் உண்மைத் தன்மையினை அடியேனுக்கு அறிவித்தருள வேண்டும் என்பதாம். 36

அம்மையின் அணிகலங்களை அறிவித்தல்

கைக்கே அணிவது கன்னலும் பூவும்; கமலமன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை; விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே அணியும் திருவுடை யானிடம் சேர்பவளே!

இ-ள்: எட்டுத் திசைகளேயே உடுக்கும் அழகிய உடையாகக் கொண்டருளிய சிவபெருமானது இடப் பாகத்தில் பொருந்திய அபிராமியம்மையே! நின் திருக்கரங்களில் தரித்திருப்பன கரும்பாகிய வில்லும் மலராகிய அம்புகளுமேயாம்; செந்தாமரையின் பேரரும்புகளை ஒத்த திருமுலேகளின் மீது அணிவது வெள்ளிய முத்துமாலேகளேயாம்; விடத்தையுடைய நாகத்தின் படம் போன்ற நிதம்பத்தில் தரிப்பவை பல மணிகள் இழைத்த மேகலே வகைகளும் பட்டாடையுமேயாம்; (இஃது என்ன விபரீதம்!) எ-று.

விளக்கம்: கன்னல் - கரும்பு வில். பூ - மலரம்பு. மெய் - இங்குத் திருமுலேகள்; திருமேனியுமாம். பை - படம்; நிதம்பம். பன்மணிக் கோவை - மேகலே, பருமம், காஞ்சி, கலாபம், விரிசிகை என்னும் ஆபரணங்கள். எட்டுத்திக்கே அணியும் திருவுடையான் - திகம்பரன்; சிவன். 37

உலகத்தவர்க்கு அம்மையை வழிபடும்படி கூறுதல்

பவளக் கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணே யாஎங்கள் சங்கரனேத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணேமுலேயாள்
அவளேப் பணிமின்கண் டீர்அம ராவதி ஆளுகைக்கே.

இ-ள்: (நம்மவர்களே! நீவிர்) தேவலோகத்தின் தலேநகராகிய அமராவதியை ஆளவேண்டும் எனில், அதன் பொருட்டுப் பவளக்கொடிபோல இனிமை முற்றிய சிவந்த திருவாயும், குளிர்ந்த புன்னகையோடுகூடி வெள்ளிய அழகிய பல் வரிசையும் (தமக்குத்) துணேயாகக் கொண்டு நம்முடைய சிவபெருமானேக் குழையும்படி எதிர்ப்பட்டு விளங்கிய உடுக்கைபோன்ற இடையைத் துவள்விக்கும் இரண்டு தனங்களேயுடையவளாகிய அபிராமியம்மையை வழிபடுவீர்களாக எ-று.

விளக்கம்: கொடியில் - கொடிபோல. முறுவல் - பற்கள். தவளம் - வெண்மை. சங்கரன் - சுகத்தைச் செய்பவன்; சிவன். துடி - உடுக்கை. அமராவதி - தேவ

லோகத்தின் தலைநகர்; சொர்க்கலோகம். காஞ்சித் தலத்தில் அம்பிகை இறைவனைத் தழுவ அவர் குழைந்தார் என்பது வரலாறு. கண்டீர்: முன்னிலை அசைச் சொல். ஆக என்பது ஆ என நின்றது. 38

அருள்பெற என்குறையே அன்றி நின்குறை அன்று எனல்

ஆளுகைக் குன்றன் அடித்தா மரைகளுண் டந்தகன்பால்
மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேஅன்று; முப்புரங்கள்
மாளுகைக் கம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே!

இ-ள்: திரிபுரங்களும் அழியும் பொருட்டுத் திருமாலாகிய அம்பைத் தொடுத்த மேருமலையாகிய வில்லைக் கைக்கொண்ட சிவபெருமானது இடப் பாகத்தில் எழுந்தருளியிருக்கும் ஒளி பொருந்திய நெற்றியையுடைய அபிராமியம்மையே! (அடியேனை) ஆட்கொண்டருளுதற்கு உன் திருவடித் தாமரை மலர்கள் உள்ளன; மரணகாலத்திலே யமனிடத்தினின்றும் மீளுதற்கு உதவியாக உன் திருக்கடைக்கண் நோக்கமாகிய அருள் உள்ளது; (மேற்கூறிய) இவ்விரண்டின்மேல் மனத்தைச் செலுத்துதற்கு (இன்னும் காலம் வராமல் இருப்பது) அடியேனது குறையே அல்லது உனது திருவருட் குறை அன்று எ-று.

விளக்கம்: அந்தகன் - யமன். விழியின் கடை - கடைக்கண் நோக்கமாகிய அருள். மூளுகைக்கு - மனத்தைச் செலுத்துதற்கு. வில்லான் - வில்லையுடைய சிவபெருமான். வாணுதல் - இங்கு அபிராமியம்மை. (வாள்+நுதல். வாள் - ஒளி; நுதல் - நெற்றி.) அடியவன் நின்பால் கருத்தைச் செலுத்தியவுடன் அருள் செய்கைக்கு நீ காத்திருக்கின்றாய் என்பதாம். 39

தம் புண்ணியத்தின் பயனை வியத்தல்

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற் கண்ணியள் அல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய எண்ணமன் றோமுன்செய் புண்ணியமே.

இ - ள்: ஒளி பொருந்திய நெற்றியிலே திருவிழி உடையவளும், தேவர்கள் அணைவரும் (திருக்கடவூரில்) வந்து எக்காலமும் பூசித்து வணங்கும் பொருட்டு எண்ணி உறுதி செய்த எம்பெருமாட்டியும், அறியாமையையுடைய மனத்தின்கண் (பாச ஞான பசு ஞானங்களினுல்) தரிசித்தற்கு அருகேயுள்ளவள் அல்லாத (நித்திய) கன்னிகையுமாகிய அபிராமியம்மையை நாடோறும் சந்நிதியிற் சென்று தரிசித்துப் பேறுபெறும் அன்பைக் கைக்கொள்ளுதற்கு எண்ணிய எண்ணம் அல்லவா? (அடியேன்) முற்பிறவிகளிலே செய்த சிவபுண்ணியத்தின் பயனுவது எ - று.

விளக்கம்: இறைஞ்சி - தொழுது. பேணுதல் - வழிபடுதல். பேதை - அறியாமை. அண்ணியள் அல்லாத என்பது நெடுந்தூரத்தில் இருப்பவள் என்றது. கன்னி - அபிராமியம்மை. அன்பு - இங்குப் பத்தி. முற்பிறவியில் சிவபுண்ணியம் செய்தவர்க்கே இப்பிறவியில் அபிராமியம்மையைத் தரிசித்து வழிபடும் பேறு கிடைக்கும் என்பதாம். 'நெஞ்சால்' என்றும் பாடம். 40

தம் மனத்திற்கு அறிவித்தல்

புண்ணியம் செய்தன மேமன மே! புதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவருங் கூடிநம் காரணத்தால்
நண்ணியிங் கேவந்து தம்அடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல்பத்ம பாதம் பதித்திடவே.

இ - ள்: என் மனமே! (அன்றலர்ந்த) புதிய கருங்குவளை மலரைப் போன்ற கண்களையுடைய அபிராமியம்மையும், செந்நிறம் பொருந்திய திருமேனியையுடைய அவ்வம்மையின் கணவரான சிவபெருமானும் நம்மை ஆட்கொள்ளும் பொருட்டுத் தம்முள் விரும்பிக் கூடி (அர்த்தநாரீசுவர வடிவமாகி) நாம் இருக்கும் இடத்திற்கே எழுந்தருளி வந்து (நம்மைத்) தம் மெய்யடியார்களின் இடையிலே (இனிது) இருக்கும்படி செய்து, நம்முடைய சிரசின் மீது தம் திருவடித் தாமரை மலர்களை வைத்துத் தீட்சை செய்தற்கு உரிய சிவபுண்ணியச் செயல்களை (முற்பிறவியில் நீயும் நானும்) செய்திருக்கின்ரேம் அல்லவா? எ - று.

விளக்கம்: பூங்குவளைக்கண்ணி - அபிராமியம்மை. "குவளைக் கண்ணி கூறன்காண்க" என்பது திருவாசகம். செய்ய - சிவந்த. செய்ய கணவர்: "சிவனெனு நாமந் தனக்கே யுடைய செம்மேனி யெம்மான்" என்பது அப்பர் தேவாரம். தம் அடியார்கள் நடுவிருக்க: "உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" என்பது திருவாசகம். திருவடி தீட்சை பெறுதற்குக் காரணம் முற்பிறவிகளில் செய்துவந்த சிவபுண்ணியமே அல்லது வேறில்லை; ஆதலால் இப்பிறவியிலும் சிவபுண்ணியங்களையே செய்யக் கடவோம் என்பதாம். 41

அம்மையின் ஆற்றலை வியத்தல்

இடங்கொண்டு விம்மி இணைகொண் டிறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி! நல்லரவின்
படங்கொண்ட அல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே!

இ-ள்: (மார்பு முழுவதையும் தமக்குப்) பரந்த இடமாக அடக்கிக்கொண்டு பருத்துத் தம்முள் ஒன்றனை ஒன்று ஒத்து வளர்ந்து (தளர்ச்சியின்றி) இறுகி, (மெத்தெனக்) குழைந்து மெல்கி, முத்துமாலைகளைத் தம் மீது அணியாகக் கொண்ட தனங்களாகிய மலையைக் கொண்டு, சிவபெருமானது வலிய நெஞ்சை (த்தான் நினைத்தவாறெல்லாம்) ஆட்டி வைக்கும் கொள்கையையும், (அதற்குத் தக்க) அழகையும் உடைய திருத்தேவியார் நல்ல பாம்பின் படத்தையொத்த அல்குலையும், குளிர்ச்சி பொருந்திய இனிய சொல்லினையும், வேதமாகிய சிலம்புகளையும் உடைய அபிராமியம்மையேயாம் எ-று.

விளக்கம்: நடங்கொள்ளல் - எண்ணியவாறெல்லாம் ஆட்டி வைத்தல். நடம் - ஆட்டம். நாயகி - நடத்துபவள்; தலைவி. அல்குல் - நிதம்பம். பரிபுரம் - சிலம்பு. வேதம் அம்பிகையின் சிலம்பு: "ஆரணநூ புரஞ்சிலம்பு மடிகள் போற்றி" என்பது திருவிளையாடற் புராணம். 'இலகி' என்றும், 'பணிமொழி' என்றும் பாடம். 42

அம்மையினது நேர்பாதியின் சிறப்பு

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணியின்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத் திருந்தவளே!

இ-ள்: (மறைகளாகிய) சிலம்புகளை அணிந்த சிறிய திருவடிகளையும் பாசாங்குசங்களையும் உடையவளும், ஐந்து மலரம்புகளையுடையவளும், குங்குமம்போலச் சிவந்த திருமேனியை யுடையவளுமாகிய இனிய சொற்களை யுடைய திரிபுரசுந்தரி என்பவள், உலகத்தை யழிக்கும் தீத்தொழிலை (த் தம்) நெஞ்சில் நினைந்து செய்த திரிபுரத்திலுள்ள வஞ்சகராகிய அசுரர்களை அஞ்சுவிக்க வளைத்த மேருமலையாகிய வில்லைத் தாங்கிய திருக்கரத்தையும், (எரிகின்ற) தீப்போலும் சிவந்த திருமேனியையும் உடைய சிவபெருமானது ஒத்த ஒருபாதியில் எழுந்தருளியிருந்தவளாகிய அபிராமியம்மையேயாம் எ-று.

விளக்கம்: பாசம் - கயிறு. அங்குசம் - தோட்டி. பஞ்சபாணி - தாமரை, மா, அசோகு, முல்லை, நீலோற்பலம் என்னும் ஐந்து மலரம்புகளைக் கையில் உடையவள். சிந்துரம் - குங்குமம். புரிபுரவஞ்சர் - திரிபுர அசுரர்கள்; இவர்கள் தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி என்போர். குனி - வளைத்த. பொருப்புச்சிலை - மேருமலையாகிய வில். எரிபுரை - தீயையொத்த. செம்பாகம் - நேர்பாதி: "தம்பிரான் திருமேனியிற் செம்பாதி யுங்கொண்ட தையனுயகி" என்பது முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ். "புரிவர வஞ்சரை" என்னும் பாடம். 43

அம்மையே மேலான தெய்வம் என்றல்

தவளே இவள்எங்கள் சங்கர னுர்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக் கன்னையும் ஆயினள் ஆகையினுல்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன் இனியொரு தெய்வமுண் டாகமெய்த்தொண்டுசெய்தே

இ - ள்: இவ்வபிராமியம்மை எமது சிவபெருமானது மங்கலகரமான இல்லறத் துணைவியாகும் தவத்தைச் செய்த உமாதேவியே; (ஆயினும்), அத்தேவியே அச்சிவபெருமானுக்கு (ப் படைக்கும் திறம் ஒன்றில்) தாயும் ஆயினள்; ஆதலால், இத்தேவியே தேவர்கள் அனைவர்க்கும் மேலாகிய தலைவியும் ஆவள்; (இவளைத் தெய்வமாகக் கொண்டு மெய்த்தொண்டுகள் செய்வதல்லது), இனி இவட்கும் மேலொரு தெய்வம் உண்டென்று எண்ணி அதற்கு மெய்த்தொண்டுகள் செய்து வருந்தமாட்டேன்; (இதுவே என் துணிபு) எ - று.

விளக்கம்: தவளே - தவம்செய்த உமாதேவியே. மனை மங்கலம் - மனையாட்சியாகிய பத்தினி. சத்திதத்துவத்தினின்றும் சதாசிவதத்துவம் தோன்றுதலின், "அவளே அவர் தமக்கு அன்னையும் ஆயினள்" என்றார்: "இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன்" என்பது திருவாசகம். "சத்திதான் சிவத்தை யீன்றும்" என்பது சிவஞான சித்தியார். "அனக நாட கற்கெம் மன்னை, மனைவி தாய்" என்பது **சிதம்பரச் செய்யுட்கோவை.** கடவுளர் - திருமால் பிரமன் இந்திரன் முதலிய தேவர்கள். துவளேன் - வருந்தமாட்டேன். உண்டாக - உண்டென்று எண்ணி. 44

குற்றம் பொறுத்தருள வேண்டுதல்

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோஇல ரோ?அப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோஅன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே.

இ - ள்: (அபிராமியம்மையே! உனக்குத்) திருத்தொண்டு செய்யாமலும், உன்னுடைய திருவடிகளை வணங்காமலும், (உண்மைப்பொருள் இன்னதெனத்) துணிந்து (தம்) மனம்போனபடியே (தாம் விரும்பிய தொழில்களை) முற்காலத்திலே செய்த ஞானிகளாகிய நின் அடியார்களும் (சிலர்) இருந்தனரோ இல்லையோ? (இருந்தனர் எனின்), (அவரைப்போலவே), அடியேனும் (அத்தொழிலையே முன்

மாதிரியாகக்) கண்டு கொண்டு, அம்முறையோடு (என் இச்சைக்குரிய செயல்களைச்) செய்தால், அது (நின்னால்) வெறுக்கப்படும் தவமாகுமா? அல்லது (அந்த மெய்ஞ்ஞானிகளின் செய்கைகள் யாவும் தவமாதலைப்போல இவையும் யான்) செய்யும் தவமாகுமோ? (நின் திருவுளக்கருத்து அறியேன் அடியேன் அகங்காரத்தால் மாறுபாடான செயல்களைச் செய்தாலும் (அவற்றை அந்த ஞானிகளின் செயல் போல நீ) பொறுத்துக் கொள்ளுதல் நீதியாகும்; பின்பு வெறுத்து ஒதுக்கல் நன்றன்று எ - று.

விளக்கம்: இச்சை - மனவிருப்பம். பண்டு - பழங்காலம். அப்பரிசு - அதன்படி. கைதவம் - வஞ்சகச் செயல். மிண்டு - அகங்காரச் செயல்கள். கடந்த ஞானிகள் ஏது செய்யினும் அதுவே தவமாகும் என்பது நூற்கொள்கை. இச்செய்யுளின் கருத்திற்கு, "பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே" எனவரும் திருப்பல்லாண்டு நினைவிற் கொள்ளற்பாலது. 45

வெறுக்கினும் வாழ்த்துவேன் என்றல்

வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்அடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன் றே;புது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் றான் இடப் பாகம் கலந்தபொன்னே!
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே.

இ - ள்: பாற்கடலில் புதிதாகத் தோன்றிய ஆலகால விஷத்தை உண்டு கருநிறம் பொருந்திய திருக்கண்டத்தையுடைய சிவபெருமானது இடப்பாகத்தைத் தழுவிய பொன் போன்ற அபிராமியம்மையே! (நீ) வெறுப்பதற்குரிய இயல்பினவாகிய செயல்களை (அடியவன் அறிந்து) செய்யினும் தம் மெய்யடியார்களின் தீச் செயல்களை அறிவினால் மிக்க பெரியோர்கள் பொறுத்தருளும் பெருந்தகைமையும் புதிய வழக்கம் அல்லவே? (பண்டைய வழக்கமேயாம்); (ஆதலால், நீ அருள் செய்ய) மறுக்கும் செயல்களைச் செய்யினும் அடியவன் உன்னையே என்றும் வாழ்த்தித் துதிப்பேன் எ - று.

விளக்கம்: தகைமை - தகுதி. மிடறு - கழுத்து. பொன்னே - பொன்னிறமுடையவளே. பொன் - கிடைப்பதற்கு அருமையுமாம். 'மறுக்கும் தகைமைகள் செய்யினும்': "துடைக்கினும் போகேன்" என்பது அப்பர் தேவாரம். "விடுவேன் அல்லேன்" என்பது திருவாசகம். "மிக்கோர் பொறுக்கும் தகைமை": "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்" என்பது சிவஞான போதவெண்பா. 46

தம் அநுபூதிப்பயனை அறிவித்தல்

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்;மனத் தேயொருவர்
வீழும் படியன்று; விள்ளும் படியன்று; வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டுமெட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

இ-ள்: (அடியவன், பேரின்பத்தில்) வாழும் வண்ணம் ஒரு மேலான பொருளை (மெய்ஞ்ஞானத்தால்) அறிந்து கொள்ளப் பெற்றேன்; அஃது ஒருவர் தம் மனத்தினாலே விரும்பி எண்ணுமாறு உள்ளதன்று; (வாயினால் இத்தகையது என்று) சொல்லும்படி உரியதன்று; கடல் சூழ்ந்த நிலவுலகம் முதலிய ஏழுலகங்களையும் எட்டாகிய பெரிய மலைகளையும் அணுகாமல் இரவும் பகலும் (மேருமலையை) வலம் வரும் சூரிய சந்திரர்களாகிய இரு சுடர்களுக்கும் நடுவே அமைந்து விளங்குகின்றது; (அதனை நம்மவர்களே! விரைந்து காணுங்கள்) எ-று.

விளக்கம்: ஒன்று - ஒப்பற்ற பரம்பொருளான பராசத்தியாகிய அபிராமியம்மை. வீழ்தல் - விரும்புதல்; தியானித்தல். வேலை - கடல். வரை - மலை. சுடர் - சூரியசந்திரர். சுடர்க்கு நடுவே கிடந்து என்றது சூரிய சந்திரரிடையே அபிராமி எழுந்தருளி இருத்தலை. மன வாக்குக் காயங்களுக்கு எட்டாததும், சூரிய சந்திரமண்டலங்களிடையிலே விளங்கும் சுயஞ்சோதியுமாகிய அபிராமியம்மையை ஞானக் கண்ணால் தரிசிக்கப் பெற்றேன்; நீங்களும் தரிசித்துப் பேறு பெறுங்கள் என்பதாம். 47

அம்மையை ஒருகணமேனும் தியானித்தவர் பின் பிறவார்

சுடரும் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.

இ - ள்: பிரகாசிக்கும் பிறைச் சந்திரன் பொருந்திய சடைமுடியையுடைய சிவபெருமானாகிய (செம்பவளக்) குன்றில் பொருந்திப் படராநிற்கும் இயற்கை மணம் கமழும் (அபிராமியம்மையாகிய) பசுங்கொடியை, மனமாகிய பாத்தியுட் பதித்து (அன்பு நீர் பாய்ச்சி வளர்த்து), (அதனுல் சிவானந்தானுபவ விளைவைப்பெற்று, மனவாக்குக் காயங்களினுல் வரும் துன்பத்தைப் போக்கி, ஒரு நொடிப்பொழுதேனும் சிவானந்த நிலையில் இருப்பவர்கள் குடலும் நிணமும் இரத்தமும் பொருந்தும் கூடாகிய உடலை எடுத்துப் பின்னும் (உலகில்) பிறப்பார்களோ? (பிறவார்கள்) எ - று.

விளக்கம்: கலைமதி - பிறைச்சந்திரன். இமைப்போது - கண்ணிமைக்கின்ற நேரம்; நொடிப்பொழுது. குடர்-குடல். கொழு - நிணம். குருதி - இரத்தம். குரம்பை - உடல். அபிராமியம்மையைத் தியானித்து இன்புற்றவர்க்கு மீண்டும் பிறவி இல்லை என்பதாம். சிவபெருமானைக் குன்று என்பதற்கேற்ப அம்மையைக் கொடி என்ருர். "பங்காயோர் தமனிய மலைபடர் கொடியென வடிவு தழைந்தாய்" என்பது மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ். 48

இயம பயத்தைப் போக்கிக் காக்க வேண்டுதல்

குரம்பை யடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை யடுத்து மறுகுமப் போது வளைக்கையமைத்(து)
அரம்பை யடுத்த அரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்;
நரம்பை யடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே.

இ-ள்: யாழின் நரம்பைப் பொருந்திய ஏழிசையின் உருவாக (உலகம் எங்கும் நிறைந்து) நிற்கின்ற தலைவி ஆகிய அபிராமியம்மையே! உடலாகிய கூட்டை அடைந்து அதன்கண் ஒதுக்குக் குடியாகப் புகுந்த என்னுயிரானது, கொடிய இயமனுக்கு இந்நாளில் 'நீ கொள்' என்று (பிரமன் குறித்த முடிவு நாளாகிய ஆயுள்) எல்லையைப் பொருந்திச் சுழலும் அக்காலத்தில், (நீ) அரம்பை முதலிய தெய்வப் பெண்டிர் சூழ்ந்து வணங்க எழுந்தருளி வந்து, வளையல்கள் அணிந்த நின் திருக்கரத்தினால் அபயந்தந்து 'அஞ்சற்க' என்று திருவாய் மலர்ந்தருளி (அடியேனைக்) காத்தருள் வாய் எ-று.

விளக்கம்: கூற்று - இயமன். வரம்பு - முடிவு நாளாகிய ஆயுள் எல்லை. மறுகும்போது - சுழலுங் காலத்தில். கையமைத்தல் - அபயந் தருதல். நரம்பு - யாழ் நரம்பு; சுரத்தானமுமாம். அம்பிகை யம பயத்தைப் போக்குவாள்: "யமபடர் எனதுயிர் கொளவரின் யானேங்குதல் கண்டெதிர் தானேன்று கொளுங் குயில்" என்பது தேவேந்திர சங்க வகுப்பு.

49

பல திருப்பெயர்களைக்கூறி இன்புறல்

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்(று)
ஆயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே.

இ-ள்: சகல லோக ஏகநாயகியும், நான்கு முகங்களையுடைய பிராம்மியும், வைணவியும், கையிலே தாமரை மலர் முதலிய ஐந்து மலரம்புகளையுடையவளும், சம்புவின் சத்தியும், சங்கரியும், சாமளையும், விஷத்தை வாயிலே உடைய நல்லபாம்பை மாலையாக அணிந்தவளும், வராகியும், திரிசூலத்தை ஏந்தியவளும், மாதங்கியும் என்று கூறப்பெற்ற இவ்வாறாகிய கீர்த்தியையுடைய அபிராமியம்மையின் திருவடிகளே நமக்குப் புகலிடமாகும் எ-று.

விளக்கம்: நாயகி - பராசத்தி. அம்பிகையே பிரமனிடத்திருந்து படைத்தலைச் செய்யும்போது பிராம்மி (சரசுவதி) எனவும், திருமாலிடத்திருந்து காத்தலைச் செய்யும்போது நாராயணி அல்லது வைணவி (இலக்குமி) எனவும் பெயர் பெறுவாள். நாராயணி - நாராயணன் தங்கையுமாம். நளினம் - தாமரை. பஞ்ச சாயகம் - ஐந்து அம்புகள். கை நளின பஞ்ச சாயகி - இரௌத்திரி; உமாதேவி. சாம்பவி- மகேசுவரி. சங்கரி - மனோன்மணி. சாமளை - பச்சை நிறம் உடையவள். சாதி - உயர்ச்சி. அகி - பாம்பு. வாராகி - அம்பிகை பேதத்தில் வராக முகத்துடன் விளங்குபவள்: விஷ்ணு சத்திகளில் ஒன்றுமாம். (வராகம் - பன்றி) மாதங்கி- மதங்க முனிவரின் புதல்வி. கியாதி - கீர்த்தி; புகழ். அரண் - புகலிடம். 'என், தாய் அகிலாதி உடையாள்' என்றும் பாடம். 50

அம்மையின் அடியார்கள் பிறப்பு இறப்புக்களை அடையார்

அரணம் பொருளென் றருள்ஒன் றிலாத அசுரர்தங்கள்
முரணன் றழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டுமெய் தார்இந்த வையகத்தே.

இ - ள்: பொன் வெள்ளி இரும்புகளினுலாகிய மும் மதில்களுமே (தமக்கு உறுதியான) செல்வம் என்று உட்கொண்டு (அதனுல் உயிர்க்கு இரங்கல் சிறிதும் இல்லாத (தாரகாட்சன் கமலாட்சன் வித்தியுன்மாலி என்னும்) மூன்று அசுரர்களுடைய வலிமையும் அக்காலத்து ஒருங்கு அழிந்து போகும்படி கோபித்த சிவபெருமானும், திருமாலுமே வணக்கம் வணக்கம் என்று வேண்ட, நின்றருளிய தலைவியாகிய அபிராமியம்மையின் மெய்யடியார்கள் இவ்வுலகத்தின் கண்ணே இறப்பு, பிறப்பு என்னும் இரண்டையும் அடையார் எ - று.

விளக்கம்: அரணம் - மதில்; மும்மதில் - திரிபுரம். பொருள் - உறுதிப் பொருள். முரண் - வலிமை. அன்று -

அக்காலம். முனிதல் - கோபித்தல். பெம்மான் - சிவபெருமான். முகுந்தன் - திருமால். சரணம் சரணம் என - அடைக்கலம் அடைக்கலம் என்று கூறியருள எனினுமாம். அம்மையின் மெய்யடியார் இவ்வொரு பிறவியிலேயே முத்தியின்பத்தை அடைதல் உறுதி என்பதாம். 51

முற்பிறவியில் அம்மையை வழிபட்டவர் அடையும் பேறுகள்

வையம் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யும் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே.

இ-ள்: தேரும், குதிரையும், மதமிக்க யானையும், சிறந்த முடியும், பல்லக்கும், சேமித்து வைக்கப்பெறும் பொன்னும், விலைமிக்க பொன்னாரம் முத்தாரம் முதலியனவும், பிறைச்சந்திரனைச் சடைமுடியில் தரித்த சிவபெருமானுடைய அழகிய தேவியாராகிய அபிராமியம்மையின் திருவடித் தாமரை மலர்களுக்கு முற்பிறவியிலே பேரன்புடன் வழிபாடு புரிந்த தவமுடைய அடியவர்களுக்கு (இம்மைக்கண்) உள்ளனவாகிய அடையாளங்களாம் எ–று.

விளக்கம்: வையம் - தேர். துரகம் - குதிரை. காலாட்களையும் கூட்டிக்கொள்க. கனகம் - பொன். ஆரம்-மாலை. ஐயன் - சிவபெருமான். திரு - அழகு. முன்பு - முற்பிறவி. அம்மையார், தம்மை வழிபட்டவர்க்குச் சகல செல்வங்களையும் தருவாள் என்பதாம். 52

சத்தியோகமே அன்றி வேறு பயனுடைய தவம் இல்லை

சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே.

இ-ள்: மிகச் சிறிய திருவிடையிலே சாத்தியருளிய சிவந்த பட்டாடையையும், மிகப்பெரிய இருதனங்களையும், (அவற்றின்மீது அணிந்த) முத்து மாலைகளையும் பிச்சிப்பூ மாலையை நெருங்கச் சூடிய மிகக் கரிய கூந்தலையும், மூன்று கண்களையும் உடைய அபிராமியம்மையைத் தம் மனத்தில் உறுதியாகத் தியானித்துக்கொண்டு தனித்திருந்து யோகம் புரியும் சிவயோகியர்க்கு இச்சிவயோகம் போலப் பயனுடைய தவம் வேறு ஒன்றில்லை எ-று.

விளக்கம்: மருங்கு - இடை. பிச்சி - சாதிமுல்லைப்பூ; இஃது இத்தலத்திற்கு மிகச் சிறந்தது; மார்க்கண்டேய முனிவர் அமுதகடேசருக்கு அபிஷேகம் செய்யக் கொண்டு வந்த தேவ கங்கையோடு வந்தது. அம்மையின் தியானமே பெரிய தவம் என்பதாம். சிறியசிறிய என்பன 'சின்னஞ் சிறிய' எனவும், பெரிய பெரிய என்பன 'பென்னம் பெரிய' எனவும், கரிய கரிய என்பன 'கன்னங்கரிய' எனவும், தனித் தனி என்பன 'தன்னந்தனி' எனவும் வந்த நிலைமொழிச் சிதைவுகள்: இவை உலகவழக்குத் தொடர்களாகும். 53

அம்மையின் அடிகட்கு ஆற்றுப்படுத்தல்

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

இ-ள்: (நம்மவர்களே!), செல்வர் ஒருவரிடத்துச் சென்று நும் வறுமை நிலையைச் சொல்லி, (அவர்களால்) அவமானப்பட்டு நில்லாதிருத்தலை (நீவிர்) உள்ளத்தின்கண் (சற்று) நினைப்பீர்களேயானால், நாடோறும் உயர்ந்த தவஞ் செய்து பழகாமையையே பழகிய இழிந்தவரிடத்தில் ஒரு போதும் செல்லாதபடி (அடியவன்பால்) அருளிவைத்த திரிபுரசுந்தரி யாகிய அபிராமி யம்மையின் திருவடிகளை இடைவிடாது நினையுங்கள் எ-று.

விளக்கம்: இல்லாமை - பொருள் இல்லாத வறுமை நிலை. இழிவு - தாழ்வு; அவமானம். கயவர் - இழிகுணத்

தவர். சேர்மின்கள் - இடைவிடாது நினையுங்கள்; (சேர்தல் - இடைவிடாது நினைத்தல்; குறள்-3 பரிமேலழகர் உரை.) புகலடைவீர்களாக எனினுமாம். அம்மையின் தியானத்தால் எக்காலத்தும் வறுமை இல்லை என்பதாம். 54

கைம்மாறு கருதாத கருணைத் திறம்

மின்னு யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற(து)
அன்னாள் அகமகிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னா தொழியினும் உன்னினும் வேண்டுவ தொன்றில்லையே.

இ - ள்: ஆயிரம் மின்னல்கள் ஒருங்குதிரண்டு (பெண்ணியல்பு பொருந்திய கை கால் முதலிய உறுப்புக்களோடு கூடி) ஒரு திருமேனியின் வடிவெடுத்து விளங்குவது போன்றவளும், (தன் உயிர்த் துணைவரும் தன் அடியார்களும்) திருவுளம் மகிழ்தற்கு முதலாகிய பேரின்ப மயமான கொடிபோன்றவளும், அரிய வேதங்கட்கு முதலாயும் அதன் நடுப்பரப்பு எங்குமாயும் அதன் முடிவாயும் இருக்கின்ற முதல்வியாகிய அபிராமியம்மையை (உலகத்தவர்) நினையா தொழிந்தாலும் அன்றி நினைத்தாலும் (அவட்கு அவர்களால்) விரும்பப்படுவது ஒருபொருளுமில்லை எ - று.

விளக்கம்: மின் - மின்னல். ஆயிரம் - பல என்னும் பொருட்டு. மெய்வடிவு - உண்மை வடிவு; அழியாத வடிவு. அருமறை - ஓதி உணர்தற்கு அரிய வேதம். முன் நடு முடி: முன்னே பணை, கொழுந்து, வேர் என்றதை அறிக. உன்னுதல் - நினைத்தல். அம்மையார், தம் மெய்யடியார் பொருட்டே வேண்டுதல் அல்லது தம்பொருட்டாக ஒன்றையும் வேண்டுவதில்லை என்பதாம். 55

அருள்புரியும் அருமையினை வியத்தல்

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற் பாள்என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாவிப் பொருளறிவார்
அன்றா லிலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே.

இ - ள்: ஒரு பொருளாய பராசத்தி (பொதுவகையாகத்) தோன்றி(ச் சிறப்பு வகையால்) பற்பல சத்திகளாய் விரிந்து, இவ்வுலகெங்கும் நிறைந்து நிற்பவளும், அவையனைத்துப் பொருளையும் நீங்கி நிற்பவளுமாகிய அபிராமியம்மை, அடியவன் மனத்தினுள்ளே நீங்காமல் (நிலைபெற்று) நின்று, திருவருள்புரியும் திறம் என்ன வியப்பு! மிக நுண்ணிய இவ்வுண்மைப் பொருளை, யுகமுடிவு வெள்ளக் காலத்தில் ஆலிலையின்மீது அறிதுயில் கொண்ட பெருமானாகிய திருமாலும் என் தந்தையாகிய சிவபெருமானுமே அறிவார்; (வேறு எவர் அறிய வல்லார்?) எ - று.

விளக்கம்: அரும்பி-தோன்றி. பொன்றுது - நீங்காமல். அன்று – நீர்ப்பிரளய காலத்தில். என் ஐயன் - என் தந்தையாகிய சிவபெருமான். திருமாலும் சிவபெருமானுமே அன்றிச் சிவஞானிகளும் இவ்வுண்மையை அறிவராம். பலவாய் - மனோன்மணி, உமை, நாராயணி முதலிய சிறப்பு வகையால் நிற்கும் வடிவாய். 'எல்லாமாய் அல்லதுமாய்' நிற்கின்ற அம்மையார் என் மனத்தினுள் மட்டும் நீங்காமல் நின்று அருளுந்திறம் எவராலும் எளிதில் அறியத்தக்கதன்று என்பதாம். 'புரிகின்றவாறிப் பொருள்' என்றும் பாடம். 56

அடியேனை ஆளும்வகை இதுவோ என்றல்

ஐயன் அளந்த படியிரு நாழிகொண் டண்டமெல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்;இது வோஉன்றன் மெய்யருளே.

இ - ள்: (அபிராமியம்மையே!) சிவபெருமான் அளந்து கொடுத்த உணவுப்பொருளாகிய இருநாழி நெல்லைக் கைக்கொண்டு உலகத்திலுள்ள உயிர்கள் எல்லாம் (பசி நீங்கிப்) பிழைக்கும் பொருட்டு (முப்பத்திரண்டு வகை) அறங்களையும் செய்த காமாட்சியாகிய உன்னையும் துதித்துச், செல்வர் ஒருவரிடத்தில் (அவரைப் பற்றிச்) சிறந்த புதிய செந்தமிழ்ப் பாமாலையையும் (அந்நாவால்) பாடிக்கொண்டுபோய்

(அவர்முன்) பொய்யையும் மெய்யையும் கலந்து பேசவும் (அடியேனை) வைத்தருளினாய்; இதுதானோ உனது உண்மைத் திருவருள்? எ - று.

விளக்கம்: படி - உணவுப்பொருள். நாழி - அரைப்படி; ஒருபடியுமாம். செய்ய - சிறந்த. பசுமை - புதுமை. பொய் என்றது உயர்வு நவிற்சிபடப் புகழ்ந்து கூறுதலை. தன்னை ஆட்கொள்ளாமல் இருத்தலினால் பொய்யும் மெய்யும் பேசும் படியான நிலை வந்தது என்னும் கருத்தால், 'இயம்ப வைத்தாய்' என்றார். மெய்யருள் - உண்மையான கருணை. காஞ்சி புரத்தில் சிவபெருமான் அளித்தருளிய இருநாழி நெல்லைக் கொண்டு முப்பத்திரண்டு வகையான அறங்களையும் அம்பிகை வளர்த்தாள் என்பது புராண வரலாறு. 57

நின்னை அன்றிப் பற்றுக்கோடு வேறில்லை என்றல்

அருணம் புயத்துமென் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணம் புயமும் வதனம் புயமும் கராம்புயமும்
சரணம் புயமுமல் லால்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே.

இ - ள்: செந்தாமரை மலரிலும், அடியேனது உள்ளத் தாமரையிலும், ஒரு நிகராக விரும்பி வீற்றிருக்கும், மலரும் பருவத்தில் இருக்கும் தாமரை அரும்புபோன்ற தனங்களையுடைய அபிராமியம்மையின், அழகு பொருந்திய கருணை விழியாகிய தாமரையும், திருமுகத் தாமரையும், கைகளாகிய தாமரையும், திருவடித் தாமரையும் (ஆகிய இவையே பற்றுக் கோடு) அல்லாமல் மற்றொரு பற்றுக்கோட்டையும் (அடியேன்) அறிந்திலேன் எ-று.

விளக்கம்: அருண + அம்புயம் = அருணம்புயம். அருணம் - சிவப்பு. அம்புயம் - தாமரை. சித்தம் - மனம். தருணம் - மலரும் பருவம்; அரும்பு. தையல் - அழகு. தையல் நல்லாள் - பெண்களுக்குள் நல்லவள்; அழகிய பாலாம்பிகை; அபிராமியம்மை. தஞ்சம் - பற்றுக்கோடு. 58

குற்றம் பொறுக்க வேண்டுதல்

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்;ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்கல ராகநின் றாய்அறி யார்எனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யார்அடி யார்பெற்ற பாலரையே.

இ-ள்: நீண்ட தனி வில்லும் ஐந்து அம்புகளும் முறையே கரும்பும் தாமரை முதலிய மலருமாகக் கைக்கொண்டு நின்ற அபிராமியம்மையே! இத்தவநெறி ஒன்றன்றி வேறொரு பற்றுக் கோடும் என்னுயிர்க்கு இல்லை என்பதை(ப் பாவியேன்) அறிந்திருந்தும், உன்னைத் தியானிக்கும் அத் தவநெறியின்கண் மனத்தைச் செலுத்தி வழிபட (அடியேன்) எண்ணுகின்றிலேன்; செம்பஞ்சுக்குழம்புக்கும் நடுங்குகின்ற மென்மையான அடிகளையுடைய பெண்கள் (தாம் பேதைமையுடையராயினும்) தாம் பெற்ற புதல்வர்கள் (குற்றஞ் செய்த போதிலும் அவர்களைத்) தண்டிக்கமாட்டார்கள் (அல்லவா?) எ-று.

விளக்கம்: ஈது - ஈண்டுத் தவநெறி; தியானித்தல். தவநெறி - சரியை கிரியை யோகங்கள். சிலை-வில். அஞ்சு-ஐந்து. இக்கு - கரும்பு. பஞ்சு - செம்பஞ்சுக் குழம்பு. தம் புதல்வர்கள் குற்றம் செய்தபோதும் பெற்ற தாயார் தண்டிக்கார்; அதுபோல அடியவன் குற்றஞ் செய்யினும் நீ என்னைப் புறக்கணித்துத் தண்டியாமல் பொறுத்தருளிக் காத்தல் வேண்டும் என்பது இறுதியடியின் உட்கருத்து. 59

அம்மையார் அருள்புரிந்ததைப் பாராட்டல்

பாலினும் சொல்லினி யாய்!பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினும் சாலநன் றோ?அடி யேன்முடை நாய்த்தலையே.

இ-ள்: பாலைக் காட்டிலும் இனிய சொற்களையுடைய அபிராமியம்மையே! திருமாலும் பிரமன் முதலிய தேவர்களும் வணங்கும்படி நிற்கின்ற (தலைமையுடைய) சிவ

பெருமானது கொன்றை மாலையை அணிந்த நீண்ட சடையின் மேலிடத்தைக் காட்டிலும், எட்டாமையினால் அவரது திருவடிக் கீழ்ப் பாதுகையாக (இளைத்து) நின்று துதிக்கும் வேதங்களில் கூறிய உண்மையான பிரணவ பீடங்கள் நான்கைக் காட்டிலும், குளிர்ச்சி பொருந்திய தாமரை மலர் போன்ற நின் திருவடிகளைச் சூட்டி(த் தீட்சை செய்தற்குத்) துர்நாற்றம் வீசுகின்ற நாய்த் தலையைப் போன்ற அடியேனது இழிந்த தலை மிகவும் தகுதியுடைத்தாயிற்றோ? எ - று.

விளக்கம்: இனும் - இன்னும்; மற்றும். பீடம் - பிரணவ பீடம்; அது தூலப் பிரணவபீடம், சூக்குமப் பிரணவ பீடம், காரணப் பிரணவ பீடம், மகாகாரணப் பிரணவ பீடம் என நான்கு வகைப்படும். நன்று - நன்மையுடையது; தகுதியுடையது. முடை - துர்நாற்றம். ஊடலுவகையின் பொருட்டுச் சிவபெருமான் தன் சடையின்மேல் அம்மையின் பாதங்களை வைக்க வேண்டியதாயிற்றென்க. சிவபெருமான் சடையினும், வேதப் பிரணவ பீடங்கள் நான்கினும் பார்க்க நின் திருவடிகளைச் சூட்டுதற்கு நாயேனது புன்தலை தகுதியாகுமாறு, அடியேன் என்ன புண்ணியம் செய்தேனோ என்பதாம். 60

தாம்பெற்ற பேற்றைப் புகழ்ந்து பாராட்டல்

நாயேனையுமிங் கொருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே! மலைமக ளே!செங்கண் மால்திருத் தங்கைச்சியே!

இ - ள்: (உலகத்து உயிர்க்கெல்லாம்) அன்னையே! இமவான் புதல்வியே! சிவந்த கண்களையுடைய திருமாலின் சிறந்த தங்கையே! (புழுத்த) நாயினும் கடையேனாகிய என்னையும் (நீ), ஒரு பொருளாகக்கொண்டு விரும்பி இவ்வுலகத்தில் (வலிய) வந்து, நீயே (இவனை ஆட்கொள்ளலாம்; ஆட்கொள்ளலாகாது என்று ஆராயும்) நினைவு இல்லாமல், (அடியேனைத் தடுத்தாட்கொண்டருளினாய்; (அதன் மேலும்), உன்னை வேத சிவாகமங்களில் உள்ளவாறு பேய்

போன்ற அறிவற்ற கொடியவனுகிய யான் அறியத்தகும் சிவஞானத்தையும் தந்தருளினுய்; (அடியேன்) எத்துணைப் பெரும் பேறுகளைப் பெற்றேன்; (என்போல் வேறு யார் பெற்றனர்?) எ - று.

விளக்கம்: இங்கு - இவ்வுலகத்தில். நயந்து - விரும்பி. நினைவு இன்றி - ஆட்கொள்ளுதற்கு உரியவனே அன்றே என்று ஆராய்ந்து பார்க்கும் நினைவு இல்லாமல். நினைந்து பார்ப்பதாயின் அடியவன் ஆட்கொள்ளற்கு உரியவன் ஆகேன் என்ற குறிப்பினது. நினைவு இன்றி ஆண்டு கொண்டாய் - என் நினைவு இல்லாமலே நீ வந்து தடுத்தாட் கொண்டாய் என்றலுமாம். பேயேன் - பேயைப் போல மயங்கும் அறிவினையுடையேன். திரு - அழகு; சிறந்த. 61

தம் சிந்தையில் என்றும் திகழும்பொருளைத் தெரிவித்தல்

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் மலரும்எப் போதுமென் சிந்தையதே.

இ - ள்: பொன்மயமான மேருமலையாகிய வில்லைக் கைக்கொண்டு அசுரர்களின் முப்புரங்களை எரித்து அழித்து, மதம் பொருந்திய கோபங்கொண்ட கண்களையுடைய யானையின் தோலை உரித்துப் போர்த்த சிறந்த வீரராகிய சிவ பெருமானுடைய (அருமைத்) திருமேனியிற் பொருந்தக் குரும்பை போன்ற தனங்களினுல் (அழுந்த) அடையாள மிட்டருளிய காமாட்சியம்மையாகிய அபிராமியம்மையினது செந்தாமரை மலரை ஒக்கும் சிவந்த திருக்கரங்களிலுள்ள கரும்பு வில்லும் மலரம்புகளும் எக்காலத்திலும் என் சிந்தையில் (தியானப் பொருளாக) இருப்பனவாகும் எ - று.

விளக்கம்: சிலை - வில். தானவர் - அசுரர்; திரிபுரர். சாய்த்து - எரித்தழித்து. கரியுரி - யானைத்தோல். செஞ் சேவகம் - வஞ்சியாமல் எதிர்நின்று அறப்போர் புரியும் வீரச்

செயல். மெய் - உடல். குரும்பை - தென்னங்குரும்பை; இது வடிவுவமை. குறி-அடையாளம். கோகனகம்-தாமரைமலர். கரும்பும் மலரும் என் சிந்தையது; பன்மை ஒருமை மயக்கம்; கரும்பும் என் சிந்தையது ; மலரும் என் சிந்தையது எனத் தனித் தனியே கூட்டிப் பொருள் கூறினும் அமையும். "தங்கச்சிலை... கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி" என்றது அம்மையார் காஞ்சியில் இறைவனைப் பூசித்துத் தழுவக்குழைந்த வரலாற்றைக் குறித்தது. 62

அறிவில்லாத மக்கட்கு இரங்கி வருந்துதல்

தேறும் படிசில ஏதுவுங் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றிற் கொட்டுந் தறிகுறிக் குஞ்சமயம்
ஆறுந் தலைவி இவளாய் இருப்ப தறிந்திருந்தும்
வேறும் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே.

இ - ள்: ஆறு உட்சமயங்கட்கும் முதல் தெய்வமாகிய பராசத்தியே இவ்வபிராமியம்மையாதலை(த் தாம் ஒரு சிறிது) அறிந்திருந்தும், வேறு தெய்வத்தைக் கூறும் (சில மெய்ச்) சமயங்களும் உண்டு என்று அவற்றைப் பாராட்டிக் கைக் கொள்ளுகின்ற வீணர்களுக்கு, (அவர்கள்) உண்மை தெளிந்து கொள்ளும்படி சில உண்மைகளையும் எடுத்துக் காட்டி, (அவர்கள்) இனிமேல் அடையும் வீட்டின்பத்துக்கு (உபகாரமாக நாம் சென்று அவர்கட்குக்) கற்பிக்கும் (சைவத்தின் உண்மைப்) பொருள்யாவும், மலைப் பாறையைத் தகர்க்கும் பொருட்டு அதில் மோதும் மரக்கட்டையைப் போலச் சிதறிக்கெடும் எ - று.

விளக்கம்: ஏது - காரணம்; உண்மை. செல்கதி - மோட்சம். குன்று - மலைப்பாறை. கொட்டும் - அடிக்கும். தறி குறிக்கும் - மரக்கட்டையை ஒக்கும். சமயம் ஆறு - வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம் என்ற உட்சமயம் ஆறு. சிவம் நிர்விகாரியாக இருப்பச் சிவ சத்தியே எல்லாவற்றையும் நிகழ்த்துபவள் என்பது சைவ நூற்றுணிபு. வீணர் - பயனிலிகள். நுண்பொருளை எடுத்துக் கூறுபவர் மனம் தளர்ச்சியடைவதன்றி அவ்

வீணர்கள் ஒருபோதும் உள்ளம் தெளியார் என்பதாம். "பேயன்ன புறச்சமயப் பிணக்கு நூல் வழியனைத்தும் பிழையே" என்பது காஞ்சிப் புராணம். 63

உள்ளத்தில் தாம்கொண்ட உறுதி கூறல்

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணேன் உனக்கன்பு பூண்டுகொண் டேன்நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழு தும்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில மும்திசை நான்கும் ககனமுமே.

இ-ள் : (அபிராமியம்மையே! அடியேன்) உனக்கே மிக்க அன்பு பூண்டு (உன்னருளைக்) கொண்டேன்; (ஆதலால்), வீணாக உயிர்ப்பலி உண்ணும் (சிறு) தெய்வங்களிடம் சென்று (அவற்றிற்கு) அன்பு செய்தலை மேற்கொள்ளேன்; உன்னுடைய தோத்திரத்தை அல்லது (பிறிதொரு தெய்வத்தினுடைய தோத்திரத்தை) ஒருபோதும் போற்றேன்; பெரிய பூமியிலும் நான்கு திசைகளிலும் ஆகாயத்திலுமாகிய எங்கும் (நின்) திருமேனியின் ஒளியைத் தரிசிப்பதன்றி வேறொன்றையும் தரிசிக்கின்றிலேன் எ-று.

விளக்கம் : வீண் - பயன் இன்மை. பலிகவர் - உயிர்ப்பலி உண்ணும். பூணேன் - கொள்ளேன். புகழ் - தோத்திரங்கள். பேணேன் - போற்றேன்; விரும்பேன். ககனம் - ஆகாயம். அபிராமியம்மையே! யான் உன்னிடம்கொண்ட அன்பிற்கு நின் துதியைக் கூறுதலும், எங்கும் உன் காட்சியைத் தரிசித்தலும் ஆகிய இப்பயன்களைப் பெற்றேன் என்பதாம். 64

அம்மையின் வல்லபத்தை வியத்தல்

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமனங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையுஞ்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே.

இ-ள் : ஆனந்தவல்லி யாகிய அபிராமி யம்மையே! நீ செய்த வல்லமையினால், அண்டங்களிலுள்ளவரும் விண்

ணுலகத்து உள்ளவரும் மண்ணுலகத்துஉள்ளவரும் பார்க்கும் படியாக(க் கரும்பு)வில்லை ஏந்திய மன்மதனது உடலை முன்னே எரித்த சிவயோகியாகிய சிவபெருமானுக்கு, நீண்ட திருக்கைகளும் சிவந்த திருமுகங்களும் (முறையே) பன்னிரண்டும் ஆறுமாக அமைய அவதரித்த முதிய அறிவினையுடைய இளைய குழந்தையும் உண்டாயிற்று அல்லவா? எ - று.

விளக்கம்: ககனம் - அண்டம்; ஆகாயமுமாம். புவனம் - பூவுலகு. காமன் - விருப்பத்தைத் தருபவன்; மன்மதன். அங்கம் - உடல். தவப்பெருமான் - சிவயோகியாகிய சிவபெருமான்; தட்சிணாமூர்த்தி. மூதறிவின்மகன் - சண்முகக் கடவுள். வல்லி - பொற்கொடி. இது ஆகுபெயராய் அம்மையை உணர்த்திற்று. வல்லபம் - வல்லமை. தடக்கை முந்நான்கு செம்முகம் இருமூன்று எனக் கூட்டிப்பொருள் கொள்க. அம்மையின் வல்லபம் யோகஞ் செய்துகொண்டிருந்த மூர்த்தியையும் போகமூர்த்தியாக்கி ஒரு குழந்தையையும் தோன்றச் செய்தது; ஆதலால் அம்மையின் வல்லபத்திற்கு முடியாத செயல் ஒன்றுமில்லை என்பதாம். 65

பொருளின் உயர்வினுல் இந்நூல் சிறந்தது எனல்

வல்லப மொன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றென்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்லவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே.

இ - ள்: பசும்பொன் மயமான மேருமலையை வில்லாகக் கொண்ட சிவபெருமானுடன் எழுந்தருளியிருக்கும் அபிராமியம்மையே! (உனது) அறிவாற்றல் ஒன்றையும் (சிறிதும் அடியேன்) அறிந்திலேன்; சிற்றறிவினனாகிய யான் (உலகமெங்கும் நிறைந்த) நின் செய்ய மலர்போன்ற திருவடித் தளிர்களை அல்லது (மற்றொரு) பற்றையுடையேன் அல்லேன்; தீவினையையுடைய யான் (அத்திருவடிகளுக்குச் சாத்தும் பொருட்டுத்) தொடுத்த அந்தாதியாகிய பாமாலையின்

சொற்கள் பொருளில்லாத வீண் சொற்களாயினும் (அதன் கண் இடையிடையே வைத்த) நின் திருநாமங்களாகிய மந்திர மலர்கள் (உனக்குத்) தோத்திரமாகும்; (ஆதலால்) யான் தொடுக்கும் இவ்வந்தாதி பயனுடையதேயாம் எ - று.

விளக்கம்: வல்லபம் - கல்வி கேள்விகளினால் ஆகிய அறிவாற்றல். மலரடி - மலர்போன்ற அடி. பல்லவம் - பசுந்தளிர். பசும்பொன் - மாற்றுயர்ந்த பொன். வில்லவர் - வில்லாக உடையவர்; சிவபெருமான். வீற்றிருத்தல் - கவலையின்றித் தனிச் சிறப்புடன் வீற்றிருத்தல். சொல் - அந்தாதிச் சொற்கள். அவம்-வீண். இதன்கண் அமைந்த நின் திருநாமங்களாகிய மந்திர மலர்கள் உனக்குத் தோத்திரம் ஆகும் என்க. 66

திருவடிகளை நினையாதவரின் நிலைமை இதுவெனல்

தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றமொரு
மாத்திரைப் போது மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணங்குன்றி நாளும் குடில்கள்தொறும்
பாத்திரங் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே.

இ - ள்: அபிராமியம்மையே! மின்னற் கொடிபோலச் செவ்வொளிகொண்டு வீசும் நின் திருமேனித் தோற்றத்தை வணங்கித் துதிசெய்து ஒரு நொடிப்பொழுதாயினும் (தம்) மனத்தில் பதித்துத் தியானம் செய்யாதவர், கொடைத் திறம், குடிப்பிறப்பு, கோத்திரம், கல்வி, நற்குணம் முதலியவற்றில் குறைபாடுற்று, (இவ்வுலகமெங்கும் நாடோறும் (பிச்சைப்) பாத்திரத்தைக் கைக்கொண்டு வீடுகள்தோறும் பிச்சைக்காகத் திரிந்து வருந்துவர் எ - று.

விளக்கம்: மின் - மின்னல். மாத்திரைப்போது - கண் இமைக்குங் காலம், அல்லது கைந்நொடிக்குங் காலம். வண்மை-கொடைத்திறம். குலம்-குடிப் பிறப்பு. கோத்திரம்-சந்ததிமூலம். குடில் - வீடு. பலிக்கு - பிச்சைக்கு. உழலா நிற்பர்-திரிந்துவருந்துவர். பார்-உலகு. இங்கு, " ஆற்றொடு

தும்பை அணிந்தாடும் அம்பல வாணர்தமைப், போற்ரு தவர்க்கடை யாளமுண் டேயிந்தப் பூதலத்தில், சோற்ருவி யற்றுச் சுகமற்றுச் சுற்றத் துணியுமற்று, ஏற்ருலும் பிச்சை கிடை யாமல் ஏக்கற் றிருப்பர்களே'' எனவரும் பட்டினத் தடிகள் பாடல் நினைவிற் கொள்ளற்பாலது. தோத்திரம் - மொழித் தொண்டு. தொழுதல் - மெய்த் தொண்டு. தியானித்தல் - மனத் தொண்டு. 67

வழிபடுவோர் தன்மையினை அறிவித்தல்

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி யூறெலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடை யார்படை யாத தனமில்லையே.

இ - ள் : (எங்கும்) பரவுகின்ற நாற்றமும் சுவையும் ஒளியும் ஊறும் ஓசையுமாகிய ஐந்து தன்மாத்திரைகளிலும், நிலமும் நீரும் தீயும் வெய்ய காற்றும் (இவற்றை உள்ளடக்கிப்) பரந்தவானுமாகிய ஐந்து பூதங்களிலும் இரண்டறக் கலந்து நிற்கும் பரமேசுவரி என்னும் அபிராமியம்மையாகிய சிவகாமசுந்தரியின் சிறந்த திருவடிக்கண்ணே சார்ந்து வழிபட்டு நிற்கும் பெருந்தவமுடைய மெய்யடியார்கள் (தமக்கே உரியனவாக) அடையப்பெருத செல்வம் ஒன்றுமில்லை எ-று.

விளக்கம் : ஊரும் - பரவிய. முருகு - வாசனை. ஊறு - உணர்ச்சி. தலைவி - பரமேசுவரி. சிவகாமசுந்தரி - நடராசரின் தேவி. சாரும் - அடையும். முதலிரண்டடி சத்தியின் அம்சம் எங்கும் கலந்து நிற்றலை அறிவிப்பது. அபிராமியம்மையை வழிபட்டவர் எல்லாச் செல்வமும் அடைவர் என்பதாம். 'சீறடி' என்றும் பாடம். 68

அம்மையை வழிபட்டோர் அடையும் இம்மைப் பயன்கள்

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே.

இ - ள்: மேகத்தின் கரிய நிறத்தைக் கொடுக்கும் மலர் அணிந்த கூந்தலேயுடைய அபிராமியம்மையின் திருக்கடைக் கண்கள், தம் மெய்யன்பர் என்று சிறப்பித்துக் கூறப்படும் அடியார்களுக்கே (இம்மையில் சகல) செல்வங்களேயும் தந் தருளும்; கல்வியைக் கொடுத்தருளும்; ஒரு நாளேனும் தளர்தலே இல்லாத மனத்தை அளித்தருளும்; தெய்விகம் பொருந்திய பேரழகை ஈந்தருளும்; மனத்தில் வஞ்சம் இல் லாத மனேவிமக்கள் முதலாகிய உறவினரைக் கொடுத்தரு ளும்; (இன்னும் எவை எவை) நல்லனவோ அவற்றை யெல்லாம் வழங்கியருளும் எ - று.

விளக்கம்: இனம் - உறவு; சுற்றம். நல்லன - நல்ல பொருள்கள். கனம் - மேகம்; நன்மதிப்புமாம். நன் மதிப்பு இங்குப் பரமுத்தி. அபிராமியம்மையின் அருட்கடாட்சம் அன்பர்க்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பங்களேத் தரவல்லது என்பதாம். 69

அம்மையின் காட்சியில் திளேத்து மகிழ்தல்

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் குங்குரல் வீணேயும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே.

இ - ள்: பண்களெல்லாம் கண்டு மகிழ்தற்குக் காரண மான இன்னிசையினேயுடைய வீணேயும், (அதனேத் தாங் கிய) திருக்கரமும், திருத்தனங்களும், மண்ணுலகத்தவர் (கண்டு தரிசித்து) மகிழும் பச்சை நிறமாகத் திருக்கோலங் கொண்டு பாணர்குலப் பெண்களில் (ஒருத்தியாக) அவ தரித்த எம்பெருமாட்டியாகிய அபிராமியம்மையின் (அள விடற்கரிய) பேரழகினேக் கடம்பவனமாகிய மதுரையின் கண் (அடியேன்), கண்கள் களிகூருமாறு தரிசிக்கப்பெற் றேன் எ - று.

விளக்கம்: கடம்பாடவி - கடம்ப வனம்; மதுரை; அம்பிகை எழுந்தருளியிருக்கும் ஒரு வனமுமாம். பண் - பண்கள். குரல் - இன்னிசை; நரம்புமாம். பயோதரம் - தனங்கள். மண் - உலகம்: இடவாகுபெயர். பச்சை வண்

ணம் - சாமளம்; அதனையுடையவள் சாமளாதேவி. மதங்கர் - பாணர். அம்பிகை மதங்கர் குலத்தில் தோன்றியதால் 'மாதங்கி' எனப் பெயர் பெற்றாள். 70

அம்மையின் துணையிருக்கக் குறையொன்றுமில்லை என்றல்

அழகுக் கொருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சே!இரங் கேல்உனக் கென்குறையே.

இ - ள்: (அரிய மனிதப் பிறவியால் அடையப்பெறும் பயனை) இழக்கலுற்று வருந்துகின்ற (என்) நெஞ்சமே! (தம் திருமேனியின்) கட்டழகிற்கு (த் திருமகள் முதலிய) ஒருவரும் ஒப்பாகாத (பொற்) கொடி போன்றவளும், அரியவாகிய வேதங்களின் (முதல் நடு இறுதிகள்) பயிலுவதனால் சிவந்த பாத தாமரைகளையுடையவளும், குளிர்ச்சியும் (உச்சியில் வாழும்) பெருமையும் பொருந்திய பிறைச் சந்திரனை முடித்த திருமுடியையும், எக்காலத்தும் இளமையழகு வாய்ந்த சாமள நிறத்தையுடைய கற்பகப் பூங்கொம்பு போன்றவளுமாகிய அபிராமியம்மை (நமக்கு உயிர்த்துணையாக) இருக்கும்போது உனக்கு வரும் குறை யாது? (ஒன்றுமில்லை); ஆதலால் நீ வருந்தாதே எ - று.

விளக்கம்: ஒவ்வாத - ஒப்பாகாத. மறைகள் பழகிச் சிவந்த பாதம் என்றது வேதங்கள் அம்மைக்குக் காற்சிலம்புகளாக இருக்கையினாலே பெற்றதைக் குறிப்பது. யாமளை - பச்சை நிறமுடைய பார்வதியுமாம். வல்லி, கொம்பு: உவமையாகுபெயர்கள். சக்தனுக்கு உரிய பிறைச் சந்திரன் இங்குச் சக்திக்கும் கூறப்பட்டது. 71

பிறவித் துன்பத்தைப் போக்கவேண்டுதல்

என்குறை தீரநின் றேத்துகின் றேன்இனி யான்பிறக்கின்
நின்குறை யேயன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்!
தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே.

இ - ள்: பெரிய நீண்ட ஆகாயத்தின்கண் உள்ள மின்னலுக்கு ஒரு குறையைத் தன் மென்மையால் கற்பித்து அதனினும் மெலிந்து காட்டுகின்ற நுணுகிய இடையினையும், மென்மையாகிய இயல்பினையும் உடைய அபிராமி யம்மையே! எம்பெருமானாகிய சிவபெருமான் (நின் ஊடல் கண்டு) தன் குறையை நீக்கும் பொருட்டுத் தன் சடாபாரத் தின்மேல் வைத்துப் போற்றிய உன் திருவடித் தாமரை களையே என் குறைகள் நீங்கும் வண்ணம் (யான், நின் திருமுன்) நின்று தரிசித்து (வணங்கித்) துதிக்கின்றேன்; இனிமேல் யான் (பரமுத்தி யடையாது) பிறவி யடைந்தால் (அது) நின் குறையே அன்றி வேறு யாருடைய குறையோ? (திருவாய் மலர்ந்தருள்க) எ - று.

விளக்கம்: என்குறை - உன்னை யான் வழிபடாத குறை. நின்குறை - நீ எனக்குப் பரமுத்தியைக் கொடுக்காத குறை. மின்குறை - மின்னற் கொடி ஒளிச் சிறுமையாலும் தோன்றி விரைந்து மறைதலாலும் பருமனாலும் உண்டான குறை. தன்குறை - மாற்றாளாகிய கங்கைக்குத் தலையை இடமாகக் கொடுத்து ஊடற்குக் காரணமான குறை. இரு - பெரிய. விசும்பு - ஆகாயம். நேர்தல் - நுணுகுதல். மெல்லியல் - அபிராமியம்மை. எங்கோன் - சிவபெருமான். தாமரை - திருவடித் தாமரை. காண்: முன்னிலை அசை. 72

அம்மையின் தியானப் பொருள்கள் இவை எனல்

தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுதெமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கொளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே.

இ - ள்: அபிராமியம்மைக்கு (மற்றொரு) திருநாமம் திரிபுரை என்பது; (அவள்) கண்கள் (நெற்றிக்கண்) ஒன்று டன் மற்றிரண்டு கண்களும் சேர்ந்து மூன்று; சிவந்த திருக் கரங்கள் நான்கு; (திருமேனியின்) ஒளி செந்நிறம்; (உரிய) மாலை கடம்ப மலர்மாலை; வில் கரும்பு; படைக்கலம் ஐந்து

மலர்க்கணை ; (அவளை யாம் ஏற்றமாகத்) தொழுது துதித்து வழிபடும் காலம் (கோயிற் காவலர்) பைரவர் காக்கும் அர்த்தயாமம்; (அவள்) எமக்குத் தந்தருளும் பொருட்டு வைத்த சேமநிதி திருவடிகளேயாம் எ - று.

விளக்கம்: தாமம் - மாலை. படை - ஆயுதம். தனு - வில். யாமம் - நடு இரவு; இது யாவும் ஒடுங்கி நிற்கும் காலம்; இதுவே திருவடி தீட்சைக்குரிய காலமும் ஆகும். சேமநிதி - வைப்பு நிதி. இங்கு, அபிராமியம்மையின் தியானமும் வழிபடுங் காலமும் அவள் தந்தருளும் பேறும் கூறியவாறுகும். 73

அம்மையைத் தியானிப்பவர் அடையும் மறுமைப் பயன்

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

இ - ள்: (முச்சுடர்களையும்) மூன்று திருக் கண்களாக உடைய சிவபெருமானும், திருமாலும், பிரமதேவனும், வேதங்களும் புகழ்ந்து பாராட்டுகின்ற அபிராமியம்மையின் இரண்டு திருவடிகளையே முத்திப்பயன் தருவன என்று உட்கொண்டு வழிபடும் அடியவர்கள், மறுமையிலே (சொர்க்கலோகத்திலுள்ள) கற்பகச் சோலையில் அரம்பை முதலிய தேவமகளிர் ஆடவும் பாடவும் (அவற்றைக் கண்டும் கேட்டும் இன்புற்று அவர்களோடு) பொன்மயமான கட்டிலில் பொருந்தி (இன்புறும் இந்திராதி தேவராகி) வீற்றிருப்பார்கள். எ - று.

விளக்கம்: நயனங்கள் - கண்கள். அயன் - பிரமன். இணை - இரண்டு. திருவடியே வீடு ஆதலால் அதனைப் 'பயன்' என்றார். பயன் தருவனவற்றைப் பயன் என்று கூறியது உபசாரம். பாவையர் - அரம்பை முதலிய தேவ மாதர். சயனம் - கட்டில்; படுக்கை. தமனியக்கா - கற்பகச்சோலை. தமனியம் - பொன். 74

அம்மையை வழிபட்டோர் சொர்க்கபோகமும் வீடும்பெறுதல்

தங்குவர் கற்பக தாருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தவுந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே.

இ-ள்: பெரிய மலைகளையும், பொங்குகின்ற அலைகளையுடைய உப்புக்கடல் முதலாய ஏழு கடல்களையும், பதினான்கு உலகங்களையும் பெற்றெடுத்த திருவயிற்றையும், மணம் பொருந்திய பூக்களையணிந்த கூந்தலையுமுடைய அபிராமியம்மையின் திருவுருவத்தைக் குறித்துத் தியானிப்பவர், கற்பக விருட்சத்தின் நிழலில் சகல இன்பங்களோடு வீற்றிருப்பர்; இப்பூமியில் இடையருமல் (தொடருகின்ற) பிறவித்துன்பத்தை (த் தம்மைப்பெறுகின்ற) தாயார் இல்லாதொழித்து (அப்பிறவி) மங்கும்படி செய்துவிடுவர் எ-று.

விளக்கம்: மங்குவர் - மங்கும்படி செய்வர்; விட்டு நீங்குவர். வழுவா - தவருமல்; இடையருமல். வரை - மலை. உவர் ஆழி - உப்புக்கடல். பூத்த - பெற்ற. உந்தி - வயிறு. கொங்கு இவர் - மணம் பொருந்திய. குறித்தவர் - தியானிப்பவர். அம்மையின் பக்திநெறியில் நின்றவர்கள் சுவர்க்காதி போகங்களை அனுபவித்துப் பின்பு அதி பக்குவராகிப் பரமுத்தி அடைவர் என்பதாம். 75

அம்மையின் அடித்தொண்டர்க்கு யமவாதனை இல்லை

குறித்தேன் மனத்தில்நின் கோலமெல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரான்ஒரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே!

இ-ள்: வண்டுகள் கிண்டுதலால் நறுமணம் பொருந்திய தேன் ஒழுகுகின்ற கொன்றை மாலையைத் தரித்த சடையை யுடைய சிவபெருமானது இடப்பாகத்தை அவரு

டைய திருமேனியினின்றும் வலியக் கவர்ந்துகொண்டு அதில் குடிபுகுந்தருளிய ஐந்து மலர்களையுடைய அபிராமி யம்மையே! நின்திருமேனி அழகு எல்லாவற்றையும் (என்) மனத்துள் தியானித்து வழிபட்டேன்; (அதன் பயனாக) உனது திருவுளக் குறிப்பை அறிந்துகொண்டு, யமன் (அடியேன் உயிரைக் கவருவதற்கு) வருகின்ற நுணுகிய வழியை அடைத்துவிட்டேன் எ – று.

விளக்கம்: குறித்தல் - இடைவிடாது நினைத்தல், கோலம் - அழகு. நின்குறிப்பு – கடைக்கண் நோக்கும், கருணை முகமும், அஞ்சல் என்ற சொல்லும், அபயஅத்தமும் ஆகிய உன்னுடைய குறிப்புக்கள். மறித்தல் – தடுத்தல்; அடைத்தல். மறலி – யமன். நேர்வழி - (பிறர் அறிவதற்கு அரிய) நுணுகிய வழி; நேர்நின்று வழியை எனினுமாம். கிண்டுதல் – கிளறுதல். வெறி – நறுமணம். வேணி – சடை. பறித்தல் - கவருதல். பயிரவி - பைரவராகிய சிவபெருமானின் தேவி; அபிராமியம்மை. 76

அம்மையின் திருப்பெயர்கூறி மகிழ்தல்

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

இ – ள்: பயிரவியே! சதாசிவ மூர்த்தியின் சத்தியாகிய பராசத்தியே! பாசத்தையும் அங்குசத்தையும் உடையவளே! ஐந்து (மலர்) அம்புகளைத் தரித்தவளே! வஞ்சகர்களாகிய மகிடன் போன்றர்களின் உயிர்ப் பலியைக் கொள்ளும் மிக்க கோபப் பெருக்கத்தை யுடையவளே! காளியே! (ஞானவொளியை) விளங்கச் செய்கின்ற கலைகளின் வீரத்தைக் கொண்டவளே! (ஒளி) மண்டலங்களைத் தனக்கு உறைவிடமாக வீற்றிருப்பவளே! பூமாலையை அணிந்தவளே! சூலத்தை யுடையவளே! வராகியே! என்று, குற்றங்களை அவித்து ஒடுக்குகின்ற நான்கு வேதங்களிலும் சொல்லப்பட்ட அபிராமியம்மையின் (பதினொரு) திருநாமங்களை மெய்யன்பர்கள் (இடைவிடாமல்) சொல்லித் துதிப்பார்கள் எ – று.

விளக்கம்: பயிரவி - அச்சம் தருபவள் எனினுமாம். பஞ்சமி - சதாசிவ மூர்த்தியின் சத்தியாகிய பராசத்தி. அவி - பலி. சண்டி - கோபமுடையவள் (சண்டம் - கோபம்). மாலினி - கருநிறமுடையவளே என்றும், அட்சரங்களின் தெய்வமாக இருப்பவளே என்றும் பொருள் கூறுவர். மண்டலம் - சூரிய சந்திர மண்டலங்கள். 77

தம் அனுபவத்தைக் காட்டி அறிவுறுத்தல்

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத் தேன்என் துணைவிழிக்கே.

இ-ள்: (தந்தத்தால் கடைந்த) சிமிழையும் பொற் கலசத்தையும் போன்ற அழகிய திருத்தனங்களின்மேல் அப்பிய கலவைச் சந்தனத்தையுடைய அபிராமியம்மையின் (காதில்) அணிந்த முத்துத் தொங்கலையுடைய கொப்புவாளியையும், வைரத்தோட்டையும், கருணையால் மதர்த்த திருக் கடைக் கண்களையும், பவளம்போன்ற செவ்வாயையும், அதில் விளங்குகின்ற புன்னகையாகிய நிலவினையும் என் இருகண்களிலும் (தியானிக்கும் பொருட்டு அடியவன்) எழுதிவைத்துக்கொண்டேன் எ-று.

விளக்கம்: செப்பு - சிமிழ். களபம்-கலவைச் சந்தனம். கொப்பு - மேல் காதில் அணியும் ஓர் அணி. துப்பு-பவளம்; இங்கு, வாய். நிலவு - நிலவொளி; இங்குப் பற்கள். துணை- இரண்டு. அடியேன் கண்கள் இறைவியின் கொப்பு, தோடு முதலியவற்றைத் தவிர வேறு எவற்றையும் பற்றுவது இல்லை என்பதாம். 78

கருணைத்திறம் கண்டு கயவரை வெறுத்தல்

விழிக்கே அருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே.

இ-ள்: அபிராமியம்மைக்குத் திருக்கண்களில் (எமக்கு வழங்கும்) திருவருள் இருக்கிறது; வேதங்கள் கூறிய நன்னெறியின்படியே (அத்தேவியை) வழிபட்டுத் தியானிக்க எமக்கு மனமாகிய கருவி இருக்கிறது; அந்த நன்னெறி இருக்கவும், இம்மையிலே பழிக்கப்படும் கொலை முதலிய தீய செயல்களில் ஈடுபட்டுத் திரிந்து கொடிய பாவங்களையே இடையருது செய்து பாழான நரகக்குழியில் வீழ்ந்து அழுந்துகின்ற கீழ்மக்களோடு இனி எமக்கென்ன தொடர்பு உளது? எ-று.

விளக்கம்: "தவத்துணை இருக்க அவத்துணை ஏன் மேற்கொள்ளவேண்டும்" என்பது முதுமொழி. இப்பாடலைப் பாடிய காலத்து அபிராமி பட்டருக்கு அம்பிகை காட்சிதந்து அருள்புரிந்தாள் என்பது வரலாறு. கயவர் என்பது தம்மைப் பற்றி அரசனிடம் பழிச்சொற்களைக் கூறிய வைதிக பிராமணரைக் குறிப்பிட்டது என்பர். கயவர் - கீழ்மக்கள். 79

தாம்பெற்ற ஆனந்தக் களிப்பு

கூட்டிய வாஎன்னைத் தன்னடி யாரிற் கொடியவினை
ஓட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமுங் களிக்கின்றவா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே.

இ-ள்: பொற்றாமரை மலரில் வீற்றிருக்கின்ற (எண்ணுதற்கு) அரிய அபிராமியம்மை (ஒன்றற்கும் பற்றாத) அடியேனைத் தம்முடைய மெய்யடியார் கூட்டத்துள் ஒருவனாகச் சேர்த்தருளியவாறும், (பின்னர்) என் கொடிய இருவினைகளைப் போக்கியருளியவாறும், என்னிடத்து (அருள்புரிய) விரைந்து ஓடி வந்தருளியவாறும், தன்னுடைய உண்மை வடிவத்தை (நனவிலே என் கண்களுக்குக்) காட்டியருளியவாறும், தரிசித்த என் கண்களும் தியானித்த மனமும் (ஆனந்தமேலீட்டால்) மகிழ்கின்றவாறுமாக (அடியேனைத் திருவருள்) நாடகம் ஒன்று ஆட்டியருளியவாறு (மிக வியக்கத் தக்க அதிசயமேயாம்) எ-று.

விளக்கம் : வினை - நல்வினை தீவினை ஆகிய இருவினை. நடம் – நாடகம். ஆடகம்-உயர்ந்த பொன். ஆர்அணங்கு - அழகிய அபிராமியம்மையுமாம். அம்மையின் திருவருள் இழுக்க அதன்வழி இவர் அலைப்புண்டவர் ஆதலால் ‘ நடம் ஆட்டியவா ’ என்றார். ‘ பள்ளம்புகு நீர்போல் ’ வினை நீங்கிய உள்ளத்து அம்மை விரைந்து எழுந்தருளுவள் ஆதலால், ‘ என்கண் ஓடியவா ’ என்றார். இப்பாடல் அம்மையார் தம் திருத்தோட்டைக் கழற்றி வானத்தில் சந்திரன் போன்று தோன்ற வீசியபோது பாடியதாகும். 80

அம்மையை அன்றிப்பிறரைத் தொழேன் என்றல்

அணங்கே ! அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினல்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகி லேன்நெஞ்சில் வஞ்சகரோ(டு)
இணங்கேன் எனதுன தென்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன்றி லேன்என்கண் நீவைத்த பேரளியே !

இ - ள் : அபிராமியம்மையே ! பிற சக்திகள் உன்னை வழிபடும் பரிவாரங்களாகையால், (அச்சக்திகளுள்) ஒருவரையும் (அடியேன்) வணங்கேன்; வாழ்த்தலும் செய்யேன்; மனத்தில் வஞ்சகமுடைய மக்களோடு (ஒருபோதும்) கூடேன்; எனது பொருளெல்லாம் உன்னுடையதே (எனக்கு ஒரு சுதந்தரமுமில்லை) என்று யாவற்றையும் அர்ப்பணம் செய்திருக்கும் மெய்ஞ்ஞானியர் சிலர், அவர் அனைவரோடும் மாறுபடேன் ; எனக்கென்று ஒரு அறிவும் பெற்றிலேன்; எல்லாம் அடியேனிடத்து நீ வைத்தருளிய பெருங்கருணையே யாம் எ - று.

விளக்கம் : பரிவாரங்கள் - சூழ்ந்திருக்கும் சக்திகள். மெய்ஞ்ஞானிகளின் செயல்: “ எனக்குள்ளவெல்லாம் அன்றே யுனதென் றளித்துவிட்டேன் ” (95) என்பதாம். எனது உனது என்று இருப்பார் சிலர் - எனது உடைமை உனது உடைமை என்று உரிமை பாராட்டிக் கொண்டிருக்கும் உலகத்தவர் எனினுமாம். வஞ்சகரோடு இணங்கேன் : “ வஞ்சகர் போயகல ” என்பது திருப்பல்லாண்டு. பேரளி - பெருங்கருணை. 81

ஆனந்தத்தில் அழுந்தி நிற்றல்

அளியார் கமலத்தில் ஆரணங் கே!அகி லாண்டமுநின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின்எங்ங னேமறப் பேன்நின் விரகினையே.

இ - ள்: வண்டுகள் மொய்க்கின்ற தாமரை மலரில் வீற்றிருக்கின்ற அபிராமியம்மையே! எல்லா அண்டங்களும் உன்னுடைய ஒளியாகவே நிற்றலுக்குக் காரணமாகப் பிரகாசிக்கும் உன் திருமேனியைத் தியானிக்குந்தோறும் மனம் முதலிய என் அந்தக்கரணங்கள் (ஆனந்த வெள்ள வடிவாகப்) பூரித்துத் தத்துவ எல்லைகளைக் கடந்து பரவெளியாகி விடுமானால், (இவ்வாறு அருள் செய்யும்) உமது அதிசய உபாயத்தை (யான்) எவ்வாறு மறப்பேன்; (ஒரு போதும் மறக்கேன்) எ - று.

விளக்கம்: அளி - வண்டு. கமலம் - தாமரை; பொற்றாமரை, செந்தாமரை, வெண்டாமரை எனப் பலவாம். உள்ளுதொறும் - நினைக்கும்தோறும். அந்தக் கரணங்கள் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் உட்கருவிகள். கரை - தத்துவச் சூழல். விரகு - உபாயம். தியானத்தால் அந்தக் கரணத்தில் இன்பம் தோன்றுதலும், தியானம் வலி பெற வலி பெறக் கருவி கரணங்கள் கழன்ற நிலையில் பரவெளியில் லயித்துச் சிவானந்த முதிர்ச்சிபெறுதலும் ஆகும். வெளி - அதீதமாகிய பரவெளி. 82

அம்மையை வழிபடுவோர் இந்திரராவர் என்றல்

விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே.

இ - ள்: (அபிராமியம்மையே!) நறுமணங் கமழும் உன் திருவடித் தாமரைகளில் (தேன்) பொருந்திய அன்றலர்ந்த

புது மலர்களைத் தூவி வழிபட்டு, இரவும் பகலும் (இம்மையில் அத்திருவடிகளை) வணங்க வல்லவராகிய அடியவர்கள், (மறுமையில்) தேவர்கள் யாவரும் புகழும் சுவர்க்க பதவியையும், ஐராவதம் என்னும் வெள்ளை யானையையும், ஆகாய கங்கையையும், வலிமை பொருந்திய வச்சிராயுதத்தையும், கற்பகச் சோலையையும் உடைய இந்திரரே யாவர் எ - று.

விளக்கம் : விரவும் - (பலவகையாகக்) கலந்த எனினுமாம். விரை - நறுமணம். பரவும் - புகழும் அல்லது தொழும்; பரந்திருக்கும் என்றுமாம். பதம் - இந்திர பதவி. அயிராவதம் - இந்திரனுக்குரிய வெள்ளையானை; இது நான்கு கொம்புகளை யுடையது. பகீரதி - ஆகாய கங்கை. உரவு - வலிமை. குலிசம் - வச்சிராயுதம். வல்லார் உடையவர் என்றேனும், உடையவரே வல்லார் என்றேனும் முடிக்க. 83

அம்மையின் அருளைப் பெறுதற்கு அறிவுறுத்துதல்

உடையாளை ஒல்குசெம் பட்டுடை யாளை ஒளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மான்இடை யாளை இங்கென்னையினிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே.

இ - ள் : (நம்மவர்களே! அடியேனை அனுதியே) அடிமையாகக் கொண்டவளும், துவளுகின்ற (திருமருங்கில்) செம்பட்டாடையினை யுடுத்தியவளும், பிரகாசிக்கும் பிறைச் சந்திரன் (விளங்குகின்ற) சிவந்த சடையினையுடையவளும், வஞ்சகர் நெஞ்சினில் (ஒருகாலும்) அடையாதவளும், விளங்குகின்ற நுண்ணிய நூல் போன்ற (சிறிய) இடையை உடையவளும், எங்கள் பெருமானுகிய சிவபெருமானது இடப்பாகத்தை உடையவளும், இனி இந்த உலகத்தில் அடியேனை மீண்டும் பிறவியில் செலுத்தாமல் இருக்கப் போகின்றவளும் ஆகிய அபிராமியம்மையை, உங்களையும் மீட்டும் படைக்காத வண்ணம் தியானம் செய்துகொண்டே இருங்கள் எ - று.

விளக்கம்: உடையாள் - எல்லாவற்றையும் உடைய பரமேசுவரி எனினுமாம். ஒல்கு - (மேன்மையால்) துவள்கின்ற: தயங்கு - விளங்குகின்ற. இடை - இடுப்பு, இடப்பாகம். வஞ்சகர்நெஞ்சு அழுக்காறு, அவா, வஞ்சம் முதலிய அழுக்குகள் நிறைந்தது என்பதாம். இச்செய்யுள் சொற்பின் வருநிலை அணி. 84

அம்மையின் உருவெளித் தோற்றம் உரைத்தல்

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லலெல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே.

இ - ள்: (அடியேன்) பார்க்கும் திசைகள் தோறும், என்னுடைய துன்பங்களையெல்லாம் போக்குகின்ற திரிபுர சுந்தரியாகிய அபிராமியம்மையினது திருமேனியும், சிறிய திருவிடையும், கச்சு அணிந்த குங்குமக்குழம்பு பூசிய திருத்தனங்களும், அவற்றின்மேல் விளங்கும் முத்துமாலையும், (திருக்கைகளில்) பாசாங்குசங்களும், கரும்பு வில்லும், சிறகுகளையுடைய வண்டுகள் ஒலிக்கும் குளிர்ச்சிமிக்க புது மலராகிய மலர்க்கணைகள் ஐந்துமே (காட்சியளிக்கின்றன) எ - று.

விளக்கம்: பனி - குளிர்ச்சி. சிறை - சிறகு. ஆர்க்கும்- ஒலிக்கும். அல்லல் - துன்பம். வார் - கச்சு. அன்பு மிகுதியால் இடைவிடாமல் தியானம் செய்பவர்க்குத் தியானப் பொருள் பார்க்குமிடமெங்கும் தோன்றும் என்பதாம். 85

மரணம் அடையுங்காலத்தில் உதவ வேண்டுதல்

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையுங் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலன்என் மேல்விடும் போது வெளிநில்கண்டாய்;
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே!

இ-ள்: (பசுப்) பாலையும் (கொம்புத்) தேனையும் (வெல்லப்) பாகையும் ஒத்த மென்மையான சொற்களையுடைய அபிராமியம்மையே! கொடிய யமன் பருத்துக் கிளைத்த (முத்தலை பொருந்திய) சூலத்தை என்மேல் ஏவுகின்ற அக்காலத்துப் பிரமவிஷ்ணுக்கள் தேடவும், வேதங்கள் தேடவும், தேவர்கள் தேடவும் எட்டாமல் நின்ற நின் திருவடிகளையும், சங்க வளையல்களை அணிந்த திருக்கரங்களையும் உடன் கொண்டு என்முன் வெளிவந்து நின்றருளுக எ-று.

விளக்கம்: சூடகம் - வளையல். கதித்த - பருத்த. கப்பு - கிளை. கதித்த கப்புவேல் - மேலோங்கிய திரிசூலப் படை எனினுமாம். பணி மொழி-மென்மையான சொற்கள். இயமனை உதைத்தற்குக் காலையும், அபயம் அளித்தற்குக் கையையும் கொண்டுவர வேண்டும் என்று வேண்டிக் கொண்டார் என்பது உட்குறிப்பு. 86

எளிவந்து வெளிநின்ற கருணையைப் போற்றல்

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்தமென்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படிஒரு பாகங்கொண் டாளும் பராபரையே!

இ-ள்: நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித்தழித்த சிவபெருமானது அழிவில்லாத யோக நியமத்தை உலகம் எல்லாம் பழிக்கும்படி (குலைத்து அவரது) இடப்பாகத்தைக் கைக்கொண்டு ஆட்சி புரியும் அபிராமியம்மையே! வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாத நின் திருவுருவம் என்னுடைய ஊனக் கண்ணிற்கும் சிற்றறிவால் செய்யப்படும் சிறு பூசைத் தொழிற்கும் வெளிப்பட்டு நின்றது; (இஃது என்ன வியப்பு!) எ-று.

விளக்கம்: திருமூர்த்தம் - திருவுருவம். வினை - செயல்; பூசை முதலியன. மதன் - மன்மதன். தலைவர் அழியா விரதம் - இறைவன் சனகாதியர்க்கு இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிய யோக நிலை. இடப்பாகம் கொண்டு

ஆண்டது, போகியாக ஆகியது. பராபரை - மேலானவற்றினுக்கும் மேலானவள்; சிவசத்தி. 'மூர்த்தியென்றன்' என்றும் பாடம். 87

தகுதியற்றவன் என்று என்னைக் கைவிடுதல் கூடாது என வேண்டுதல்

பரமென் றுனையடைந் தேன்தமி யேனுமுன் பத்தருக்குள்
தரமன் றிவனென்று தள்ளத் தகாது; தரியலர்தம்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன்று செற்றகை யான்இடப் பாகம் சிறந்தவளே!

இ-ள்: பகைவர்களாகிய அசுரர்களின் முப்புரங்களும் அன்று (தீப்பற்றி) எரிய மேருமலையை வில்லாக வளைத்த திருக்கரத்தானும், வெண்டாமரை மலரில் இருக்கின்ற பிரமதேவனது தலைகளில் ஒன்றை (நகத்தாற்) கிள்ளிய திருக்கரத்தானுமாகிய சிவபெருமானது இடப்பக்கத்தில் எழுந்தருளிச் சிறப்புற்ற அபிராமியம்மையே! அடியேனும் (என் பாரமெல்லாம்) உன் பாரமே என்று முறையிட்டு உன்னை அடைக்கலம் அடைந்தேன்; (ஆதலின்), உன் அடியார்க்குள் ஒருவனாகச் சேர்தற்கு 'இவன்' தகுதியுடையவன் அல்லன் என்று கருதி (என்னை நீ) தள்ளிடின் அது நின் திருவருட் பெருக்கத்திற்குத் தகாது எ-று.

விளக்கம்: பரம் - (உன்) பாரம்; பரம்பொருள் எனினுமாம். பாரம் என்றது உடல் பொருள் ஆவி மூன்றையும். தரம் - தகுதி. தரியலர் - பகைவரான திரிபுரர். போது - தாமரை. வாங்கிய கையான் எனவும் செற்ற கையான் எனவும் தனித்தனியே கூட்டிப் பொருள் கொள்ளப்பட்டது. "தள்ளப் பெரு; தரியாவவுணர்" என்றும் பாடம். 88

இறக்கும்பொழுது எளிது வந்து அருள வேண்டல்

சிறக்கும் கமலத் திருவே! நின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தருநின் துணைவரும் நீயும் துரியமற்ற
உறக்கம் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே.

இ-ள்: சிறந்து விளங்கும் செந்தாமரை மலரில் திருமகளாய் நின்றருளும் அபிராமியம்மையே! உன் சிவந்த திருவடியைச் சிரசிலே வைத்து (தீட்சை செய்தற்குப் பக்குவம் உண்டாகும் பொருட்டுத் தன் அன்பர்களுக்கு அகப்பற்றுப் புறப்பற்று இரண்டையும்) துறத்தலைச் செய்யும் உன் உயிர்த் துணைவராகிய சிவபெருமானும் நீயுமாக, என் உடலும் உயிரும் தொடர்பற்று, அறிவு உம் இருவரையும் மறக்கப் புகும் காலத்தில், துரியம் என்னும் நான்காம் நிலைகடந்த நிலையிலே சிவானந்த அனுபவமாகிய தூக்கத்தைத் தந்தருளும் பொருட்டுத் திருவடி வருந்தியேனும் எழுந்தருளி என் முன்னே வருதல் வேண்டும் எ-று.

விளக்கம்: துறக்கம் - சுவர்க்கம் அல்லது மோட்சமுமாம். துரியம் அற்ற உறக்கம்-சிவானந்தத்து அழுந்தி இருக்கின்ற அநுபோகாதீத உறக்கம். அறிவு மறக்கும்பொழுது - உயிர் உடலைவிட்டு நீங்கும் காலம். "அறிவழிந்திட் டைம்மேலுந்தி, அலமந்த போதாக" என்பது சம்பந்தர் தேவாரம். அறிவு மறக்கும்பொழுது என் முன் வரல்வேண்டும் என்றதனால், வரின் மறவாமலே உயிர் உடலைவிட்டு நீங்கும் என்பதும், அதனால் முத்தி சித்திக்கும் என்பதும் பெற்றும். 89

அம்மையின் திருவருளால் எய்தாதபொருள் ஒன்றுமில்லை எனல்

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்(து)
இருந்தாள் பழைய இருப்பிட மாக; இனியெனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லை;விண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியலே.

இ-ள்: பாற்கடலிலே தோன்றிய அமுதமான உணவை வானுலகத்தில் இருக்கும் தேவர்களுக்கு விருந்தாக (த் திருமால்) கொடுத்தற்கு (க் காரண முதல்வியாய் இருந்தருளிய) அபிராமியம்மை, (யான் இனி பிறந்தும் இறந்தும்) வருந்தா வண்ணம் என் மனத் தாமரையில் (தாமே வலிய எழுந்தருளி) வந்து தம் பழைய இருப்பிடம் இதுவேயாக இதன் கண் புகுந்து இருந்தருளினாள்; (அதனால்), இனி எனக்கு அடையக்கூடாததாகிய பொருள் ஒன்றும் இல்லை எ-று.

விளக்கம்: வருந்தாவகை-வினைக்கீடாகப் பிறப்பு இறப்புக்களில் சுழன்று வருந்தாதபடி. ஒருபொருள் - இம்மை மறுமை இன்பத்திற்கு வேண்டிய பொருளும், செம்பொருளாகிய மோட்சமும். புலவர் - தேவர்கள். வேலை - பாற்கடல். மருந்து - அமுதம்; தேவாமிர்தம். தேவர்களுக்கு அமுதம் அளித்த திருமாலாகிய மோகினி அபிராமியம்மையின் அம்சம் ஆதலால், "புலவருக்கு விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியல்" என்றார். 90

தொழுவாரைத் தொழுமன்பர் அடையும் பயனை அறிவித்தல்

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணந் தொழும்அடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக டூரும் பதம்தருமே.

இ - ள்: மின்னற்கொடி போன்ற மெல்லிய நுண்ணிய இடையையுடையவளும், விரிந்த சடையினையுடைய சிவபெருமானால் தழுவப்பெற்ற பொன்னிறம் போன்ற மெல்லிய திருமுலையுடையவளுமாகிய அபிராமியம்மையை நான்கு வேதங்களும் புகழ்ந்து கூறியவாறு வழிபடுகின்ற அடியார்களைத் தொழுகின்றவர்க்குப் பல வாத்தியங்கள் ஒலித்தெழ வெள்ளையானையை ஊர்தியாகக்கொண்டு நடத்தும் இந்திர பதவியை (அம்மை) அளித்தருள்புரிவாள் எ - று.

விளக்கம்: புல்லல்-தழுவுதல். பொன்-இங்குப்பொன்னிறமான தேமல். பல்லியம் - பல வாத்தியம். வெண்பகடு - வெள்ளை யானையாகிய ஐராவதம். பதம் - இந்திரபதவி. அடியார்க்கு அடியவரே இந்திரபதவியைப் பெறுவர் என்றால் அவ்வடியார் அடையும் பயன் அதனினும் மிகப்பெரியதாகும் என்பது குறிப்பு. இங்கு, "தொழப்படுந்தேவர் தொழப்படுவானைத் தொழுதபின்னைத் தொழப்படுந்தேவர் தம்மால், தொழுவிக்குந் தம் தொண்டரையே" எனவரும் அப்பர் தேவாரம் ஒப்புநோக்கற்பாலது. 91

பிறசமயங்களைத் தழுவேன் என்றல்

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றியுன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்;இனி யானொருவர்
மதத்தே மதிமயங் கேன்;அவர் போன வழியும்செல்லேன்;
முதத்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே!

இ - ள்: பெருமகிழ்ச்சியோடு (முத்தொழில் புரியும்) மும்மூர்த்திகளாகிய தேவர்களும் மற்றையனைவரும் வணங்கித் துதித்தற்கு ஏதுவாகிய புன்னகையையுடைய அபிராமியம்மையே! (அடியேன்) மனமானது பரிபக்குவமாகி நெக்கு நெக்குருகி உன்னுடைய திருவடித்தாமரைகளிலேயே பற்றி நின்று, நின் (திருவுளத்திற்கு) இதமான நெறிகளிலே ஒழுகுமாறு அடித்தொண்டு கொண்டருளினை; (ஆதலால்) இனி (யான்) மற்றொருவருடைய சமயக்கொள்கைகளில் அறிவு கலங்கேன்; அப்புறச்சமயத்தினர் ஒழுகும் வழியிலும் செல்ல விரும்பேன் எ - று.

விளக்கம்: பதம் - உலகை வெறுக்கும் பக்குவமுறுங் காலம். இதம் - விருப்பம். ஒருவர் என்றது இவர் நிலைமையறியாது குறை கூறிய வைதிகர்களை. மதம் - கொள்கை. வழியை மிதித்தாலும் பாதத்துள் ஒட்டி அறிவைக் கலக்கும் ஆதலால், 'வழியும் செல்லேன்' என்றார். முதம்-மகிழ்ச்சி. முதம்+தேவர்=முதத்தேவர். 'முதற்றேவர்' (முதல்தேவர்) என்றும் பாடம். 92

கற்பனை கடந்த கருணையுருவைப் போற்றுதல்

நகையே இஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவிலந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பதும்நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

இ - ள்: இந்த உலகங்களையெல்லாம் படைத்தருளிய பரமேசுவரியாகிய அபிராமியம்மைக்கு (மார்பில்) அரும்பிய திருமுலைகள் செந்தாமரையின் மொட்டுக்களே; அருளில்

முதிர்ந்த திருக்கண்கள் (மருட்சியையுடைய) மான் கண்களே; இங்ஙனம் கற்பித்துக் கூறுதல் சிரிப்புக்கு இடமே யாம்; (அவளுக்கு) முடிவும் இல்லை; (அவ்வாறே) பிறப்பும் இல்லை; (ஆதலால், அவளை) நாம் மலையரசன் மகள் என்று கூறுவதும் வீணே: (இங்ஙனம்) இவளுடைய (ஒன்றுக்கொன்று ஒவ்வாத இயல்புகளைவிடுத்து) உண்மைத் தன்மையை (முதல் நூல்களால்) ஆராய்ந்து மேன்மேலும் போற்றுதல் நம்மை மிஞ்சிய செயலாம் எ - று.

விளக்கம்: நகையே - சிரிப்புக்கு இடமே. ஞாலம் - உலகம். முகை - தாமரை அரும்பு. முது - முதிர்ந்த. முடிவு இல் - அழிவு இல்லை. வம்பு - வீண். மிகை - மிகுதி; மிஞ்சிய செயல். நாடி - ஆராய்ந்து. உலகமெல்லாம் பெற்ற அம்பிகைக்குத் திருமுலைகள் தாழாமல் இருத்தல் முரண்பாடு. கருணை நிரம்பி வழியும் திருவிழிகளில் இளம் பெண்ணிற்குரிய மருட்சி இருத்தல் முரண்பாடு. பிறவி இல்லாதவளை மலையரசன் மகள் என்றல் முரண்பாடு. உண்மை நூல்கள் அவளைக் கருணை வடிவத்தள், ஒளியுருவினள் என்று கூறும்; அதனை ஆராய்ந்து அன்புகொண்டு வழிபடவேண்டும் என்பதாம். 93

அம்மையின் அடியவர் தன்மையினைக் கூறல்

விரும்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த மாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாம்
தரும்பித்தர் ஆவரென் றால்அபி ராமி சமயம்நன்றே.

இ - ள்: (தம்மை) விரும்பி(ப் பேரன்பு பூண்டு) வழிபடும் அடியார்கள், கண்களில் ஆனந்த நீர் பெருகியும் உடல் முழுதும் மயிர் சிலிர்த்தும், (மனங்கொள்ளாது) ததும்பி வழிகின்ற ஆனந்த வெள்ளமயமாகியும், ஆன்ம அறிவை மறந்தும், (தேனுண்டு தெவிட்டிய) வண்டினைப் போலக் களிகூர்ந்தும், (அதனால்) சொற்கள் தடுமாறியும், தாம் முன்னே நினையாது சொல்லியவையெல்லாம் (பொரு

ளுடையனவாகத்) தரும். பித்தரைப்போல் ஆவார் என்ருல், (அதற்கு ஏதுவாகிய) அபிராமி அம்மையினது (சைவ) சமயம் ஒன்றே (உலகில்) மிகச் சிறந்தது எ - று.

விளக்கம்: மெய் புளகம் - உடலில் மயிர் சிலிர்த்தல்; உடல் பூரிப்பு. சுரும்பில் - வண்டைப்போல. மிகக் களிப் புற்றவர்க்கு மொழிதடுமாறல் இயல்பு. 'முன்சொன்ன எல்லாம் தரும்' என்பதற்கு இவர் வரலாற்றை நினைவு கொண்டு, உண்மை அடியார்கள் தம்மை மறந்து சொன்ன எல்லாம் பலிதமாகும் என்பதைப் பொருளாகக் கொள்ளலு மாம். விழிநீர் மல்குதல், மெய் புளகம் அரும்புதல், ஆனந்த மர்தல், அறிவிழத்தல், மொழி தடுமாறல் முதலியவை அம்பிகையின் பக்தியைக் கொண்ட அடியவர்கள்பால் உண்டாகும் மெய்ப்பாடுகள். இச்செயல்களை, "புளகமெய் போர்ப்ப மொழிதடு மாற, உள்ளொளி நாதப் புள்ளொலி முழங்க, ஞானவார முத பானம தார்ந்து, கருவிகள் கழன்று பரவச மாகிப், பரமா னந்தப் பரவையுட் படிந்து, பேரா வியற்கை பெற்றினி திருப்ப, ஆரா வின்பம் அளித்தருள் எமக்கே" எனவரும் பண்டார மும்மணிக்கோவை அடிகள் விளக்கிக் கூறுதல்காண்க. 94

அம்மையைக் குழைந்து வேண்டுதல்

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான்அறிவ(து)
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம்;எனக் குள்ளமெல்லாம்
அன்றே உனதென் றளித்துவிட் டேன்;அழி யாதகுணக்
குன்றே! அருட்கட லே!இம வான்பெற்ற கோமளமே!

இ - ள்: (எக்காலத்தும் ஒரு சிறிதும்) அழியாத குண மலையே! கருணைக் கடலே! இமயமலையரசன் பெற்ற பேரழகு வாய்ந்த அபிராமியம்மையே! எனக்கென்றுள்ள உடல் பொருள் ஆவி மூன்றையும் நீ காட்சியளித்து ஆட் கொண்ட அன்றைக்கே உன்னுடையபொருள்என்று அளித்து விட்டேன்; ஆதலால், நன்மையே வந்தாலும், (அல்லது) தீமையே விளைந்தாலும் அவற்றைக் குறித்து நான் நினைக்கத் தக்கது ஒன்றேனும் இல்லை; என்னைப்பற்றி வரும் பாரமெல் லாம் உனக்கே பாரமாம் எ - று.

விளக்கம்: நன்று - இன்பம். தீது - துன்பம். பரம் - பாரம். பொருளில் உரிமையிருந்தால் முனைப்பெழும் ஆதலின், 'உனதென்று அளித்துவிட்டேன்' எனத் துணிவுப் பொருள்படக் கூறினர் என்பதாம். இங்கு, "அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும், குன்றே அனையாய்! என்னை ஆட் கொண்ட போதே கொண்டிலையோ?, இன்றோர் இடையூறெனக்குண்டோ? எண்டோள் முக்கண் எம்மானே! நன்றே செய்வாய்; பிழை செய்வாய்; நானோ இதற்கு நாயகமே?" எனவரும் திருவாசகப் பாடல் ஒப்புநோக்குதற் குரியது. 95

அம்மையை வழிபடுவார் அடையும் பயன் இன்னதெனல்

கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதமி லாளை எழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே.

இ - ள்: அகவிதழின் அழகு பொருந்திய செந்தாமரை மலர்க் கோயிலில் வீற்றிருக்கும் என்றும் இளமையழகு கொண்ட காமவல்லி போல்பவளும், யாமள தந்திரக் கொழுந்து போல்பவளும், ஒரு குற்றமும் இல்லாதவளும், (ஓவியரும்) எழுதுதற்கரிய பசுமைபொருந்திய திருமேனியையுடைய எல்லாக் கலைகட்கும் மயில் போன்றவளுமாகிய அபிராமியம்மையைத் தம்மால் இயன்ற வரையும் வழிபடும் அடியவர்கள் ஏழுலகிற்கும் அதிபதிகளாவர் எ - று.

விளக்கம்: அல்லி - அகவிதழ். யாமளம் - அம்மையின் பெருமையினைக் கூறும் ஒரு ஆகமம். ஏதம் - குற்றம். சாமளம் - பசுமை; கருமையுமாம். ஆதிபர் - அதிபர்: அரசர். அழகு ஓவியனுடைய கருத்திலும் கையிலும் எழுதுகோலிலும் அடங்கிற்றிலது ஆதலின், "எழுதரிய மேனி" என்றார்: "படியெழுத லாகாத மங்கை யோடு" என்பது அப்பர் தேவாரம். மயில் பல நிறங்களையுடையதேனும் சாயலால் ஒன்றுபட்டு நின்று, பித்துக்கொண்டவர்க்குத்

தெளிவுபடுத்துதல் போலப் பல்வித கலைகளால் வேறுபட்டிருந்தாலும் முடிவொன்றாய்க் கலங்கிய அறிவினைத் தெளிவித்து நிற்றலின், "சகலகலா மயில்" என அம்மையைக் குறிப்பிட்டார். பித்துக்கொண்டவர் அதிகாலையில் நாடோறும் மயிலைப்பார்த்து வந்தால் பித்துத் தெளிவுறும் என்று வைத்திய நூல் கூறுகிறது. 96

அம்மையை வழிபடுவோரைக் குறிப்பிடுதல்

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

இ-ள்: சூரியன், சந்திரன், அக்கினி, குபேரன், தேவர்கட்கு அரசனாகிய இந்திரன், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவன், முப்புரத்தை எரித்த உருத்திரன், முரன் என்ற அசுரனைக் கொன்ற திருமால், பொதிய மலையில் வாழும் அகத்திய முனிவர், மோதிப் போர் புரியும் வேற்படையையுடைய முருகக் கடவுள், சிவகணங்களுக்குத் தலைவராகிய விநாயகக் கடவுள், மன்மதன் முதலாகத் தம்மால் சாதனை செய்து முற்றுப்பெற்ற எண்ணில்லாத தவத்தினர் பலரும் அலங்காரமுடைய அபிராமியம்மையைத் தரிசித்து வணங்கித் துதித்து வழிபடுவர் எ-று.

விளக்கம்: அம்புலி-சந்திரன். போது-(தாமரை) மலர். காதி-மோதி. காமன்-விருப்பத்தையளிப்பவன்; மன்மதன். சாதித்தல்-பழகுதல். தையல் - அழகு அல்லது அலங்காரமுடையவள். 97

அம்மை பொய்யர் நெஞ்சில் புகாள் என்றல்

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே?
மெய்வந்த நெஞ்சினல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகவறி யாமடப் பூங்குயிலே!

இ-ள்: உண்மையன்பு பொருந்தியவர் தம் உள்ளத்தில் அல்லது பொய்யன்பு கொண்ட வஞ்சகர் நெஞ்சத்தில் ஒருகாலும் புகவறியாத இளமையோடு பொலிவும் பெற்ற குயில் போன்ற அபிராமியம்மையே! (நின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டு) நின் திருவடித் தாமரையை வருடி (அதனால் ஊடல் தீராமை அறிந்து பின் அதனைத் தம் திருமுடிக்கண்) சூடி ஊடலைத் தீர்த்த சிவபெருமானுக்கு (அப்போது) திருக்கரத்தில் இருந்த அக்கினியும் திருமுடியில் இருந்த கங்கையாறும் எவ்விடத்தே ஒளிந்துகொண்டன? (திருவாய் மலர்ந்தருள்க) எ - று.

விளக்கம்: தைவந்து - வருடி. சங்கரன் - சுகத்தைச் செய்பவன்; சிவன். ஆறு - கங்கை. விரகர் - வஞ்சகர். பூ - பொலிவு; அழகு. அடியை வருடும்போது கையில் தீ இருப்பின் செந்தாமரைத் திருவடி வெப்பம் தாங்காது வதங்க வருந்தி ஊடலை மிகுவிக்கும்; வணங்கும்போது தலையில் கங்கை இருப்பின் அவளைக்கண்டு பின்னும் அம்மைக்கு ஊடல் மிக அதிகரிக்கும்; ஆதலால், சிவபெருமான் தீயையும் கங்கையையும் மறையச் செய்தனர். அம்மையைக் குயிலாகக் கூறியதால், 'புகவறியா' என்ற வினையால் மெய்யன்பர் மனம் இளமரச்சோலையாகவும், பொய்யன்பர் மனம் பாழுங் காடாகவும் கொள்க. 98

அம்மையின் தன்மையினைப் புகலுதல்

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலாய ருக்கன் றிமவான் அளித்த கனங்குழையே.

இ-ள்: கயிலாயபதியாகிய சிவபெருமானுக்கு அக்காலத்து இமயமலையரசன் (திருமணம் செய்து) கொடுத்த மேன்மையான பொற்குழையினையுடைய அபிராமியம்மையார், கடம்பவனத்தில் (மரகத நிறக்) குயிலாக விளங்குவாள்; இமயமலையில் அழகும் பெருமையும் பொருந்திய (பச்சைநிற) மயிலாக இருப்பாள்; வானத்தின்மேல் (கடவி

னின்று) வந்து உதித்த (பொன்னிற) இளஞ்சூரியனுகத் திகழ்வாள்; தாமரைப் பூவின்மேல் (வெண்ணிற) அன்னமாக எழுந்தருளியிருப்பாள் எ - று.

விளக்கம் : கடம்பாடவி - கடம்பவனம்; மதுரை. கோலம் - அழகு. வியன் - பெருமை; பரவிய எனினுமாம். கமலம் - தாமரை. இமவான் அளித்த கனங்குழை - பார்வதி தேவி. கனம் - மேன்மை; பருத்த எனினுமாம். அபிராமியம்மையார் திருக்கடவூரில் குங்குமநிறப் புத்தமிர்தமாக இருப்பள் என்பதுகுறிப்பு. இங்கு, விசும்பு என்பது ஆகாயமான சிதம்பரத்தையும், கமலம் என்பது திருவாரூரையும் குறிப்பாகக் குறித்தலை அறிக. 99

அம்மையார் எப்போதும் அன்பர் நெஞ்சில் நிலவுதல்

குழையத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சிலெப் போதும் உதிக்கின்றவே.

இ - ள் : இளந்தளிர்களுடன் கூடிய கொன்றை மலர் மாலையின் நறுமணம்கமழ்கின்ற திருத்தனபாரங்களையுடைய பொற்கொடி போன்ற அபிராமி யம்மையினது, மூங்கிலை வென்றடக்கி அழகிய நீண்ட திருத்தோள்களும், கரும்பாகிய வில்லும், (ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர்) விரும்புமாறு பொருகின்ற வலிமையையுடைய தேன் பொருந்திய அழகிய மலரம்புகளும், வெள்ளிய புன்னகையும், மானின் மருண்ட பார்வையை ஒக்கும் திருவிழிகளும் (அடியேனது) உள்ளத்தில் எப்பொழுதும் தோன்றிக்கொண்டே இருக்கின்றன எ - று.

விளக்கம் : குழை - தளிர். தார் - கழுத்தில் அணியும் மாலை. கழை - மூங்கில். வேரி - தேன். உழை - மான். அபிராமியம்மையின் திருவடி நினைவே எக்காலமும் அடியவன் உள்ளத்தில் குடிகொண்டுள்ளது என்பதாம். இந்த

இறுதிச் செய்யுளின் ஈற்றுச் சீராகிய 'உதிக்கின்றவே' என்பது, இந்நூல் முதற்செய்யுளின் முதற்சீராகிய 'உதிக்கின்ற' என்பதோடு ஒத்து அந்தாதித் தொடை நிரம்பி, மண்டலித்து நின்றது. 100

நூற்பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங் குசமுங் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு தீங்கில்லையே.

இ - ள்: எல்லா உலகங்களையும் பெருது பெற்றவளும், (அதனுல்) உலக மாதாவாக இருப்பவளும், மாதுளம் பூவைப்போன்ற செந்நிறமுடையவளும், உலக முழுவதையும் காப்பவளும், ஐந்து மலரம்புகளையும் பாசத்தையும் அங்குசத்தையும் கரும்புவில்லையும் அழகிய கைகளில் தரித்தவளும், மூன்று கண்களையுடையவளும் ஆகிய எம்முடைய அபிராமியம்மையை (இந்நூலைக் கொண்டு) துதித்து வழிபடும் அடியவர்களுக்கு வருவதாகிய தீங்கு ஒன்றும் இல்லை; (எல்லாம் நன்மையேயாம்) எ - று.

விளக்கம்: ஆத்தாள் - தாய். பூத்தாள் - படைத்தவள். அடங்க - முழுவதும். முக்கண்ணி - மூன்று கண்களையுடையவள். "காத்தாளை அங்கையிற் பாசாங் குசமுங் கருப்புவில்லும்" என்றும், "காத்தாளை அம்புச பாசாங் குசமும் கரும்பும் அங்கை" என்றும், "காத்தாளை யங்குச பாசாங் குசுமங் கரும்புமங்கை" என்றும் காத்தாளை அங்குச பாசாங்குசமுங் கரும்புமங்கை என்றும் பாடம். 101

அபிராமி அந்தாதி தெளிவுரை
முற்றிற்று.

சிவ சிவ

செய்யுள் முதற்குறிப் பகராதி

சிவ சிவ

ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகள் வரலாறு

'பாண்டி நாடே பழம்பதி' எனப் புகழப்பெற்ற தென் பாண்டி நாட்டில் ஸ்ரீவைகுண்டத்தின் வடபாலுள்ள ஸ்ரீகைலாசத்தில் சைவ வேளாளர் மரபில் ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகள் அவதரித்தார்; ஐந்தாண்டு வரையில் பேசாமல் ஊமைபோல் இருந்தார். பின்பு திருச்செந்தூர் முருகப்பெருமான் திருவருளால் பேசும் ஆற்றலும், கல்வியும், பாடும் திறமையுங்கொண்டு அப் பெருமானைக் குறித்து 'கந்தர் கலிவெண்பா' பாடி அருள் பெற்றார். மதுரை அடைந்து மீனாட்சியம்மைமீது 'பிள்ளைத் தமிழ்' பாடி அம்மையால் முத்தாரம் அணியப்பெற்றார். திருமலைநாயக்க மன்னன் விருப்பத்திற்கு இணங்க 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலை அருளினார். தருமை சென்று ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை வழிபட்டுப் 'பண்டார மும்மணிக் கோவை' பகர்ந்தார். ஆரூர், வேளூர், தில்லை அடைந்து தரிசித்து மாலை, பிள்ளைத்தமிழ், கோவை முதலியன பாடினார். அதன்பின்னர், காசி சென்று விசுவநாதரைத் தரிசித்துக் காசிக்கலம்பகம் அருளினார். 'சகலகலாவல்லிமாலை' பாடி, சிங்கத்தின்மீதேறிச் சென்று முகலாய மன்னனைக் கண்டு அவன் உதவியால் கேதாரமந்திரம், கேதாரத்துறை, அறச்சாலை (குமாரசாமி மடம்) முதலியன அமைத்தார். வெள்ளியம்பலவாணத் தம்பிரான் முதலியோர்க்கு வித்தியா குருவாகத் திகழ்ந்தார்.

ஸ்ரீ சுவாமிகள் அவர்கள் காசியில் தம் மடாலயத்தில் புராணசாலை ஒன்று ஏற்படுத்தி அங்கே இந்தியிலும் தமிழிலும் புராணப் பிரசங்கங்களும், சைவ சித்தாந்தப் பிரசங்கங்களும் செய்து சைவ சமயத்தைப் பரப்பிவந்தார்கள்; தம் (கி. பி. 1625—1688) அறுபத்து மூன்றாம் ஆண்டில் வைகாசித் திங்கள் கிருஷ்ணபட்சத்துத் திருதிகையில் இறைவன் திருவடி நிழலில் கலந்தருளினார்கள். செயற்கரிய செயல்கள் பல புரிந்த ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகள் நினைவு உலகுக்குச் சிவநெறி காட்டி இன்பம் பயக்கும்.

உ

சிவ சிவ

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்

அருளிச்செய்த

சகலகலா வல்லி மாலை

[தெளிவுரை]

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோ?சக மேழுமளித்
துண்டா னுறங்க ஒழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே! சகல கலாவல்லியே!

இதன் பொருள்: (கீழும் மேலுமான இருவகைப்பட்ட) ஏழுலகங்களையும் பாதுகாத்து இறுதியில் அந்த உலகங்களை யெல்லாம் உண்டு (தன் வயிற்றில்) அடக்கியவனாகிய திருமால் திருப்பாற் கடலிலே பள்ளிகொள்ளவும், யாவற்றையும் அழித்தவனாகிய உருத்திரன் பித்துக்கொள்ளவும், படைத்தல் தொழில் ஒன்றினையே கைக்கொண்டவனாகிய பிரமதேவன் சுவையுள்ள பொருளாகக் கொள்ளுகின்ற கரும்பு போன்றவளே! சகல கலைகளிலும் வல்லவளே! உன் திருவடியைத் தாங்குவதற்கு வெண்டாமரை மலருக்கு அன்றி, எனது மாசற்ற மனமாகிய குளிர்ந்த தாமரை மலருக்குத் தகுதி ஆகாதோ? (ஆகும்; ஆதலின் நீ என் மனத்தில் எழுந்தருளி அருள் செய்வாயாக) என்றவாறு.

Sarasvathi, Goddess of all Learning! While the Lord of Preservation is asleep and the Lord of Dissolution has gone crazy the Lord of Creation is happy in you, his sweet consort. Your abode is the white lotus. But can You not condescend to rest your feet on the cool lotus of my simple heart?

सकला ज्ञान की अधिष्ठात्री देवी, सरस्वती! समलोक के रक्षक भगवान विष्णु सो रहे हैं, संहारक भगवान रुद्र उन्मत्त हो रहे हैं, फिर सृष्टिकर्ता भगवान ब्रह्मा आपके मधुर समागम में आनन्दित हो रहे हैं। तुम्हारा निवास स्थान केवल श्वेत कमल है? क्या तुम अपने चरण मेरे निर्मल हृदय रूपी कमल पर विराजमान करने की कृपा नहिं कर सकती? 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்;பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே! கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே! சகல கலாவல்லியே!

இ-ள்: வெண்டாமரையாகிய ஆதனத்தில் எழுந்தருளியிருக்கின்ற அழகிய பசுங்கொடி போன்றவளே! பருத்த தனங்களாகிய மலைகளையும் ஐந்து வகையாக முடிக்கப்பெறும் கூந்தலாகிய காட்டையும் சுமக்கின்ற கரும்பு போன்றவளே! சகல கலைகளிலும் வல்லவளே! அறிவுடையோர்களால் விரும்பப்படுகின்ற பொருட் சுவையும் சொற்சுவையும் பொருந்த ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்ற நால்வகைக் கவிகளையும் பாடுகின்ற தொழிலில் (அடியவன் மிகத்திறமை அடையும்படி) நீ கட்டளையிட்டருள்வாயாக எ-று.

Sweet Goddess of all Learning! Goddess of beautiful breasts and five moded hair! Goddess of slender golden figure who rests in the lotus throne! May You graciously make me sing songs in the four metres, songs with beautiful ideas, couched in sweet language.

भगवती सरस्वती देवी! तुम उन्नत स्तन-वाली तथा पंच वेणियों को धारण करनेवाली हो। तुम्हारी कोमल सुवर्णमयी मूर्ति

सर्वदा कमलासन में शोभायमान रहती है। तुम्हारी मेरे ऊपर ऐसी कृपा हो कि मैं सुन्दर भावमय मधुरभाषा में चतुर्विध काव्य द्वारा तुमहारे गुणगान कर सकूँ ।। 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோ?உளம் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே! சகல கலாவல்லியே!

இ-ள்: மனத்தில் ஆராய்ந்துகொண்டு (பிறர்க்குத் தாம் அறிந்த நுண்பொருளை) மிகத் தெளிவுபடக் கூறுகின்ற நூலறிவினையுடைய புலவர்களாகிய மேகங்கள் கவியாகிய மழையினைப் பொழியக்கண்டு மகிழ்கின்ற தோகையினை யுடைய மயிலின் சாயல் போன்றவளே! சகல கலைகளிலும் வல்லவளே! (உன்னால்) அருளப் பெறுகின்ற வளம் மிகுந்த தமிழாகிய தெளிந்த அமுதத்தை மிக உண்டு, உனது திருவருளாகிய கடலில் மூழ்குவதற்கு (அடியேனுக்கு) எப்பொழுது கைகூடும்? (நீ அருள்புரிவாயாக) எ-று.

Goddess of all Learning! The Peacock dances in ecstasy on the approach of showers. So also You rejoice when poets rain showers of song of deep thinking and clear expression. When shall I experience the beauty of Tamil, the crystalline nectar that You can bestow? When shall I immerse myself in the ocean of Your Grace?

मातेश्वरी सरस्वती देवी! मयूर मेघवर्षा होने पर आनन्दित होकर नाचने लगते हैं। उसी प्रकार तुम भी आनन्द से परिपूर्ण हो जाती हो, जब कवि. गहरे भावों से परिपूर्ण होकर स्पष्ट भाषा में तुम्हारे गुणगान करते हैं। मेरा ऐसा सौभाग्य कब होगा जब मैं तमिल भाषा के सौन्दर्यपूर्ण निर्मल अनुभवामृत का पान करूँगा और मैं तुम्हारी कृपा के समुद्र में गोते लगाऊँगा ।। 3

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்;வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே! சகல கலாவல்லியே!

இ - ள்: வட நூலாகிய கடலும், சுவை நிறைந்த வளமுள்ள தமிழ் நூலாகிய செல்வமும், (நின்னுடைய) அன்பர்களின் செவ்விய நாவில் நிலைத்திருக்கும்படி பாதுகாக்கும் கருணைக் கடல் போன்றவளே! சகல கலைகளிலும் வல்லவளே! ஆராய்தற்குரிய தமிழ் நூல்களின் (அகப்பொருள், புறப்பொருள் என்ற) பாகுபாடுகளிலே படிந்த செயற்கை அறிவும், சொற்சுவை பொருந்தும்படி (கவி யியற்றும்) இயற்கை அறிவும் மேன்மேலும் உண்டாகுமாறு (நீ அடியேனுக்குக்) கட்டளையிட்டருளுவாயாக எ - று.

Goddess of all Learning! Ocean of Mercy! You rest on the graceful tongues (lips) of poets and preserve the sea of Sanskrit scholarship and the rich heritage of Tamil songs. May You grant that I become proficient in the deep and varied branches of Learning! May You grant me the gift of singing felicitous songs!

दया की महोदधि सरस्वती देवि! तुम सर्वदा कवियों के ओष्ठों पर विरजमान होकर संस्कृत तथा तमिल भषाओं के साहित्य समुद्र की सुरक्षा करती हो। तुम्हारी मुज पर ऐसी दया हो कि मैं समग्र विद्या के विभागों में संपूर्ण योग्यता प्राप्त कर लूँ। और भावपूर्ण मधुरभाषा में कविता भी बना सकूँ ।। 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னே?நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்! சகல கலாவல்லியே!

இ-ள்: (நீர் மிகுதியினுள்) மிகவுயர்ந்த தண்டினை யுடைய தாமரை மலரில் வீற்றிருக்கும் அன்னப்பறவையின் வடிவம் எழுதிய கொடியை உயர்த்திப்பிடித்தவனாகிய பிரம தேவனது செவ்விய நாவிலும் (அவனுடைய) மனத்திலும் வெண்டாமரை மலராகிய ஆசனத்தை நிகர்க்கும்படி எழுந்தருளியவளே! சகல கலைகளிலும் வல்லவளே! செம்பஞ்சுக் குழம்பு பூசப்பெற்ற (அன்பர்களுக்கு) நன்மையைத் தருகின்ற சிவந்த அழகிய (உன்) திருவடித் தாமரை மலர் என் மனமாகிய தடாகத்தில் மலராததற்குக் காரணம் என்ன? (அடியேனுக்கு அறிவித்து அருள் புரிவாயாக) எ - று.

Goddess of all Learning! You rest, as on the lotus throne, on the tongue (lips) and the heart of Brahma, the Creator whose banner depicts the Swan which rests on the lotus with the long stalk. Your beautiful soft lotus feet are painted with rouge. Cannot those lotus feet bloom in the cool waters of my heart?

कमलासनभामिनी सरस्वती देवी! तुम सर्वदा उस जगत्कर्ता ब्रह्मा की वाणी और हृदय में वास करती हो, जिस का ध्वज लम्बे मृणाल युक्त कमल पर विराजित हंस से युक्त है। तुम्हारे सुन्दर कोमल चरण कमल सिन्दूर से मंडित रहते हैं। क्या वे चरण कमल मेरे हृदय के शीतल तडाग में नही सिल सकते? 5

பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காய்;எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்! சகல கலாவல்லியே!

இ-ள்: வேதப் பொருளிலும், ஆகாயத்திலும், பூமியிலும், நீரிலும், கொடிய நெருப்பிலும், காற்றிலும், அன்பர்களுடைய நேத்திரத்திலும், எண்ணத்திலும் நிறைந்து நிற்கின்றவளே! சகல கலைகளிலும் வல்லவளே! இசைத்

தமிழும், நாடகத் தமிழும், இயற்றமிழும் இனிய சொற்களால் அமைந்த கவிகளும் அடியவன் விரும்புங்காலத்து எளிதில் அடையுமாறு நீ அருள் செய்வாயாக எ - று.

Goddess of all Learning! You pervade everything: You pervade the Vedas, the five elements, namely, ether, air, fire, water and the earth; You fill the vision and the hearts of Your devotees. Grant me this boon; make me proficient in all the arts whenever I wish. Make me proficient in music, in dance, in learning and in singing sweet poems.

सर्वव्यापिनी सरस्वती देवी! तुम वेदों में व्याप्त हो। तुम पृथ्वी, जल, अग्नि, वायु और आकाश में फैली हुई हो। तुम अपने भक्तों के हृदयों और नयनों को परिपूरण करती हो। मुझे भी यह वरदान दो कि मैं जब इच्छा करूँ तब सब कलाओं में परिपूर्ण हो जाऊँ। मुझे तुम गान मे, नृत्य में, विद्या में और सुन्दर कविता पाठ में परिपूर्ण वनाओ ॥ 6

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல் காய்;உளங் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே! சகல கலாவல்லியே!

இ - ள்: அன்பர் (தமது) மனத்தினுல் ஆராய்ந்து எழுதுகின்ற தமிழ் நூலாகிய இனிய பாலையும் நீரையும் (வெவ்வேருகப்) பிரித்தறியும் முறையை (உலகினர்க்கு)க் காட்டுகின்ற வெண்மையாகிய அன்னப்பெடை போன்றவளே! சகல கலைகளிலும் வல்லவளே! செய்யுளையும் (அச் செய்யுளின்) கருத்தையும், அக் கருத்தினுல் பெறப்படும் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு பயனையும் என்னிடத்தில் சேர்க்கும் வண்ணம் நின் கடைக்கண் நோக்கை (அடியேனுக்கு) அருள்வாயாக எ - று.

Goddess of all Learning! Like the white swan which separates water from milk, You also show discrimination in approving of the songs sung by poets. Grant me your benign look: vouchsafe unto me this boon that all song, meaning of song and the goal of all singing, namely, righteousness, wealth and happiness be integrated in my life.

विवेकवती सरस्वती देवी! शुभ्र हंस के समान, जैसे वह नीर और क्षीर में विवेक करता है उसी प्रकार, तुम भी कवियों की कविताओं मे विवेक करती हो ; तुम मुझे अपनी दया दृष्टि प्रदान करके सुरक्षित रक्खो जिससे मैं उन गानों को, उनके अर्थ को, और उनके लक्ष्यभूत पुरुषार्थों को भी अपने जविन में घटा सकूँ ॥ 7

சொல்விற் பனமும் அவதான மும்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்;நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே! சகல கலாவல்லியே!

இ - ள்: எக்காலத்திலும் அழியாதபடி வழங்குகின்ற கல்வியாகிய பெருஞ் செல்வத்தின் பயன் போன்றவளே! சகல கலைகளிலும் வல்லவளே! (பலர் விரும்பும்படி பேசும்) சொற்சாதுரியமும், அட்டாவதான சக்தியும், (பிறர்க்குக்) கல்வி கற்பிக்கவல்ல சிறந்த வல்லமையும் (அடியேனுக்கு) அளித்தருளித் தொண்டனுக்கிக் கொள்வாய்; (இவ்வாறு நீ அருள் செய்தல்) செந்தாமரை மலராகிய ஆசனத்தில் வீற்றிருக்கின்ற இலக்குமி தேவிக்கும் அரியதாகும் எ-று.

Goddess of all Learning! You are the Giver of the supreme everlasting wealth, namely the imperishable wealth of wisdom through learning. The Goddess of wealth, Lakshmi, who has her abode in the red lotus, cannot bestow this wealth. Grant me eloquence of tongue, skill of attending to many things simultaneously, and the art of singing good songs. Grant me this boon and make me Your servant.

अविनाशी सम्पत्ति प्रदायिनी सरस्वती देवी ! तुम सदा अक्षय ज्ञान - धन को देने वाली हो जो अध्ययन से प्राप्त होता है । जिस धन को रक्त -कमल-वासिनी लक्ष्मी देवी भी मुझे नहीं दे सकती मुझे तुम वाणी का ओज दो और कविता के गान करने की शक्ति दो, और अपना चरण सेवक बनावो ॥ 8

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே ! சகல கலாவல்லியே !

இ - ள்: பூமிவரையில் தொங்குகின்ற துதிக்கையினை யுடைய சிறந்த பெண்யானையுடன் அரச அன்னமும் வெட்கப்படும்படி நடையினைப் பழகுகின்ற செந்தாமரை மலர்போன்ற திருவடியையுடையவளே! சகல கலைகளிலும் வல்லவளே! சொல்லுக்கும் பொருளுக்கும் உயிராக இருக்கும் உண்மை அறிவின் வடிவம் என்று கூறும்படி விளங்கும் உன்னைத்தியானிக்க வல்லவர் யாவர்? (உன்னடியார் அன்றி மற்றொருவரும் இலர் ; ஆதலால் அடியேனுக்கு அருள்செய் வாயாக) எ - று.

Goddess of all Learning ! The female elephant and the queen swan are celebrated for the beauty of their gait. But they pale into insignificance before the graceful gait of Your lotus feet. You are the manifest Form of True Wisdom that pervades all word and thought. Who can comprehend You ?

कमनीयगति सरस्वती देवी ! हस्तिनी ओर हंसिनी गति सौन्दर्य के प्रख्यात हैं। किन्तु तुम्हारे चरण कमलों की सुन्दर चाल के सामने उनकी चाल फ़ीकी पड जाती है। तुम सत्य ज्ञान के विकसित रूप हो जो समग्र शब्दों ओर भावों में व्याप्त रहता हे। तुम्हारी अगाधता का कौन पार पा सकता हे ॥ 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்;படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ? சகல கலாவல்லியே!

இ – ள்: சகல கலைகளிலும் வல்லவளே! விண்ணுலகத்தைத் தமக்குரிய இடமாகக் கொண்ட பிரமன் முதலாகிய தெய்வங்கள் பலகோடி உள்ளன எனினும் (ஆலோசித்துக்) கூறுமிடத்து உன்னைப்போல நேரே பயனைத்தரும் தெய்வம் (வேறு) இருக்கின்றதோ? (இல்லை; ஆதலால், நீ) உலகமுழுவதும் நிழற்றிய வெண்கொற்றக் குடையின்கீழ் இருந்து சிறப்புற்ற அரசரும் எனது இசைநிறைந்த பாட்டைக் கேட்டவுடன் (என்னை) வணங்கும்படி அருள்புரிவாயாக எ - று.

Goddess of all learning! There are myriads of gods and celestial beings like the Creator. But is there one to equal you? Grant me this boon that all monarchs, who rule over the earth, bow unto me the moment I sing my poems.

सकल ज्ञान-विज्ञानाधीश्वरी सरस्वती देवी! ब्रह्मा की तरह संसार में अनेक देवी ओर देवता हैं। क्या उनमें एक भी तुम्हारी समानता कर सकता हे? मुझे ऐसा वर प्रदान करो कि जिस समय मैं अपनी कविताएँ सुनाऊँ सारे विश्व के राजा, महाराजा, जो पृथ्वी पर शासन करते हैं, मेरे सामने झुक जावें ॥ 10

சகல கலாவல்லி மாலை தெளிவுரை

முற்றிற்று.

உ
சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி
அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
நிறுவிய தருமங்கள்

		முதற்பொருள் ரூபாய்
1.	திருமுறை வளர்ச்சிக்கு ஆக 32 தருமங்கள்	... 6,29,500
2.	கல்வி அபிவிருத்திக்கு ஆக 50 தருமங்கள்	 10,26,200
3.	சைவ சித்தாந்தம் பரப்ப 7 தருமங்கள்	... 1,56,000
4.	அன்னதானம் செய்ய 132 தருமங்கள்	... 31,73,300
5.	வைத்தியம்செய்ய 6 தருமங்கள்	 4,22,500
6.	பொது தருமங்கள்—ஸ்நான கட்டம், அகதிகள் நன்கொடை, தண்ணீர்ப் பந்தல், ஒளிவளர் விளக்குகள், பசுப்பரிசு, கோசம் வர்த்தனம், படிக்காசு நிதி, கல்லெழுத்து வகையரு முதலிய 70 தருமங்கள்	... 6,50,245
	ஆகத் தருமங்கள் 297 க்கு	 60,57,745

ரெயின்போ பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி,

		ரூ.	ந.பை.
27.	சகலகலா வல்லி மாலை - ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ...	0	06
28.	சிவஞான சித்தியார், ஹிந்தி மட்டும் ...	1	00
29.	திருக்குறள் - அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழிபெயர்ப்பும் ...	1	50
30.	திருக்குறள் - பொருட்பால் ,, ...	3	50
31.	திருக்குறள் - காமத்துப்பால் ,, ...	1	00
	ஷ 29,30,31 திருக்குறள் 3 புத்தகமும் ...	4	00
32.	திருக்குறள் மூலமும் குறிப்புரையும் ...	0	75
33.	திருக்குறள்-பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் ...	0	13
34.	முதுமொழிமேல் வைப்பு (குறிப்புரையுடன்)	0	75
35.	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள் ...	0	37
36.	சிதம்பரச் செய்யுட்கோவை ...	0	75
37.	திருவாரூர் நான்மணி மாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் ...	1	25
38.	திருக்கோவையார் பேராசிரியர் உரையும் பழைய வுரையும் ...	2	90
39.	பெரியபுராணம் - உரை நடை ...	2	00
40.	திருவிளையாடற் புராணம் - உரை நடை ...	2	25
41.	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப் பட விளக்கங்களும் கந்தர் கலிவெண்பா விளக்கப் படங்களும் ...	0	50
42.	அபிராமி பட்டர் பிரபந்தம் (மூலம் மட்டும்)	0	31
43.	திருக்கயிலைத் திருமுறை ...	0	37
44.	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும் ...	0	19
45.	செந்திலாண்டவன் மகிமை ...	0	13
46.	திருக்குறள் - உரைக்கொத்து - அறத்துப் பால் (3-ம் பதிப்பு) ...	1	37
47.	ஷ ஷ பொருட்பால் ...	2	75
48.	ஷ ஷ காமத்துப்பால் ...	1	20

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள் :

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோவில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"தியாகராஜ விலாசம்" 53, பிள்ளையார் கோவில் தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை., திருவல்லிக்கேணி, சென்னை-5.

உ

திருக்குறள் - உரைக்கோத்து

[பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள்,
பரிதியார், காலிங்கர் உரைகளுடன்]

	விலை	பக்கம்	பதிவுப் புத்தக அஞ்சல்
அறத்துப்பால் ரூ.	1—37	372	0—82
பொருட்பால் ரூ.	2—75	816	1—15
காமத்துப்பால் ரூ.	0—79	336	0—79

ஒவ்வொரு பாலிலும் 20 பிரதிகளுக்குமேல்
வாங்குபவர்களுக்கு 20% கழிவு உண்டு.

கிடைக்குமிடம் :

1. திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை, B.A., B.L.,
அவர்கள் வழக்கறிஞர்,
ஸ்ரீ வைகுண்டம் P. O. (திருநெல்வேலி ஜில்லா)

2. தியாகராச விலாசம்,
53, பிள்ளையார்கோவில் தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

3. பழனியப்பா பிரதர்ஸ்,
புத்தக வியாபாரிகள்,
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி-2.

ரெயின்போ பிரிண்டர்ஸ், திருச்சி-8.